# சீனிப் புளியடி

இணுவிலான்
சிகாகோ பாஸ்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனிப் புளியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனிப் புளியடி

இணுவிலான்

சிகாகோ பாஸ்கர்

பூவரசி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Seeni puliyade

(Stories)

By

Chicago Baskar©

First Edition : March 2020

Poovarashi : 224

ISBN : 978-62-45018-08-8

Layout : poovarashi

Pages : 120

Price : ...

Printed & Published by

**Poovarashi Publications**

No 2, 2nd Floor, 1st Cross Street, Pushpa Colony,

Saligramam, Chennai - 600 093.

Ph : +91 44 48604455 / +919600131346

Poovarashimedia@gmail.com

www.Poovarashi.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இணையிலா மண்ணாம் இணுவில் மண்ணில்
என்னைப் பெற்றெடுத்த பெற்றோர்களுக்கும்,

என் மண்ணை இலங்க வைத்த அறிஞர்கள்,
கலைஞர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், சான்றோர்கள்
ஆகியோர்களுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

எமது மண்ணை இலங்க வைக்கும்
பேராசியர்கள், கல்விமான்கள்
ஆன்மீகவாதிகள், பக்திமான்கள்,
கவிஞர்கள், எழுத்தாளர்கள்,
தமிழ் மற்றும் சமூக ஆர்வலர்கள்,
நம்பிக்கையூட்டும் இளைஞர்கள்,
மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

புலம்பெயர்ந்து இலங்கை தமிழர்கள் பல நாடுகளில் வாழும் இன்றைய நாட்களில் எமது மொழியையும் கலாசாரத்தையும் மற்ற சமூகத்தி னருக்கும் எமது அடுத்த தலைமுறையினருக்கும் அறியதருவது எமது முக்கிய கடமையாகும். எமது நண்பர் பாஸ்கரன் இந்தப் பொறுப்பினை சிகாகோவில் தலைமையேற்று நாற்பது வருடங்க ளுக்கு மேலாக மிகவும் சிறப்பாக செய்து வருகிறார். இவரது வில்லுப்பாட்டு, நாடகங்கள், கவிதை, கதைகள் எல்லாம் எப்போதும் கலாசாரத்தையும் இலங்கை தமிழர் நலன்களையும் சார்ந்து சமூக நலன்களையும் தொடர்பு கொண்டுதான் இருக்கும். சிகாகோவில் உள்ள பல இலங்கை தமிழர்களுக்கு நீண்ட காலமாக கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தியும் எமக்கு எப்படி எமது தாயகத்துக்கு உதவ வேண்டுமென தெரியப்படுத்தியும் பல விதங்களில் வழிகாட்டியாக இருந்தவர். அண்மையில் இவரது கவிதைகள் புத்தக வடிவில் வந்தது சிகாகோவில் இருக்கும் எங்கள் எல்லோருக்கும் மிகவும் பெருமை தரும் விடயமாகும். இதற்கு அடுத்தபடியாக பல வருடங்களாக எழுதிய சமூக சிந்தனையுள்ள சிறுகதைகளை தொகுத்து நூலாக பிரசுரிப் பதிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இவரது மனிதநேயமும் தமிழ் தொண்டும் மேலும் மேலும் வளர மனமார வாழ்த்துகின்றேன்.

**டாக்டர். ஸ்கந்தகுமார்**
**போலிங் புரூக்ஸ்**
**இலினொய்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் சாட்சிகள்

சிறுகதைகளைச் சிலர் வரையறைப்படுத்துவர், சிலர் அது எந்த வரையறைகளுக்குள்ளும் உட்படாதது என்பர். சிறுகதைகளின் மூலம் வாழ்க்கையின் பல்வேறுபட்ட பரிமாணங்களையும் இலகு வாகச் சித்தரித்துக் காட்டி விடலாம்.

இன்றைய சிறுகதைகள் சில சமயங்களில் தன்மைக் கூற்று நிலையைப் பெரும்பாலும் கையாளுவதில்லை. ஏனெனில் "நான்" எனும் தன்மையில் மையப்படுத்திச் சொல்லும்போதே பிற மன நிலைகளைச் சொல்ல முடியாமல் போய்விடும் என பெரும்பாலா னவர்கள் கருதிக்கொள்கிறார்கள்.

ஆனால் சிகாகோ பாஸ்கருடைய சில கதைகளில் தன்னிலையை மையப்படுத்திக் கதைகளில் ஏற்றிக் கூறியிருப்பது சிறப்பாக உள்ளது. அதைவிடவும், அந்தத் தன்னிலையான கதைப் பாத்தி ரத்தின் மூலமாக ஒரு காலத்து நிகழ்வுகளை, சரியான சம்பவங்களை காலங்களின் வழியாகத் தொகுத்து வழங்கி விடுகிறார். முக்கியமாக அரசியல் சூழ்நிலைப் பின்னணிகளினூடாக ஏற்பட்ட தாக்கம் அல்லது அழிவிலிருந்து, ஒரு காலத்தின் கதையைச் சொல்ல ஆரம்பிப்பது அதிசிறப்பானதாகவே இருக்கிறது.

சிந்தையை விட்டகலாத சீனிப் புளியடி, மண்ணின் நினைவோடு ஒரு காரின்கண்ணீர் கதை என்ற இந்த இரண்டு கதைகளிலும் தமிழர்களின் அழிவின் மீதான அரசியல் பின்னணியை மட்டு மில்லாமல் அந்த ஊரின் பழைய நினைவுகளை மீட்டிக் கொடுப்ப தாகவும் அமைகிறது. சீனிப் புளியடியில் வேதப் பள்ளிக்கூடமாக இருந்த தற்போதைய இணுவில் மத்திய கல்லூரிக்கு காந்தித் தாத்தா வந்துபோயிருக்கிறார் என்பது பலர் அறியாத தகவலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் ஆஸ்பத்திரியில்தான் தேசியத்தலைவர் பிறந்தார் என்ற தகவலையும் 'சீனிப் புளியடி' பகிர்ந்துகொள்கிறது.

எல்லாக் கதைகளுமே சமூகத்தின் பல்வேறு முகங்களைக் காட்டுகின்றன. 'முதுமையின் பயம்' என்ற தலைப்பில் இடம்பெறும் கதை சொந்த ஊரிலும் கூட வயோதிபத்தின் பரிதாபத்தை உரைக்கிறது. 'என் பெயர் செண்பகம்' என்ற கதை அழிந்துபோய்க் கொண்டிருக்கிற ஒரு பறவை இனத்தை நினைவுபடுத்துகிறது.

ஒரு மாவீரனின் தணியாத தாகம், பேரழிவின் நினைவு மரம் ஆகிய இரண்டு கதைகளும் மாவீரர்களினுடைய தியாகத்தையும் இலச்சி யத்தையும் நினைவு படுத்துவதோடு, அவர்களின் ஞபகங்களைக் கொண்டாடுவதோடு நிறுத்திவிடாமல் போராடிய பாதிப்புகளால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற போராளிக் குடும்பங்களுக்கும் முன்னாள் பெண் போராளிகளுக்குமான நியாயமான கடமைகளை செய்யாமலிருக்கிறீர்கள் என்றும் உரக்கச் செல்கிறது.

அதேபோல் கம்பி வேலிக்குள் கசங்கிய கவிதை, வீரமும் காதலும் நிறைந்த கதை. போராட்ட உணர்வுக்குள் ஊறிக்கிடந்த பெண்மையக் கதை, பின் அவளே வதைமுகாமுக்குள் எப்படியெல்லாம் சித்திர வதைப் படுத்தப்பட்டு இறக்கடிக்கப் படுகிறாள் என்பதையும் வலிக ளோடு பேசுகிறது.

கள்ளத்தால் விழைந்த கருவல்ல, மணிக்கூட்டுக் கோபுரத்தின் மனக் குமுறல் என்ற கதைகளிலும் தமிழர் அழிப்பின் அரசியல் பற்றியும் புலம்பெயர்வின் ஆரம்பக்கட்டம், இப்பொழுது எப்படி இருக்கிறேம் என்பது பற்றியெல்லாம் விவரிக்கிறது. இவை பலருக்கும் தெரிய வேண்டிய கருத்தியல்களாகவே நான் நினைக்கிறேன். இவற்றை பத்து சிறுகதைகளாக இந்நூல் மூலமாக படிப்பதற்கு இலகுவாக்கி அந்தந்தப் பிரதேச வழக்கு உரையாடல்களில் எழுதி, மீண்டும் ஞாபகப் படுத்தியிருக்கிறார். இவரிற்கு என்னுடைய மிகுந்த வாழ்த்துக்கள்

- **ஈழவாணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகாகோ பாஸ்கர் அண்ணாவின் சீனிப் புளியடி

இடம் விட்டு இடம் நகர்ந்தும்
கவிதைச் சோலைகளாய் தொடரட்டும் பயணம்
முகநூலில் கவியெழுதி
மனநூலில் புதைந்தவரே
புதுநூலின் வருகையதில்
அகநூலால் வாழ்த்துகிறேன்
தினம் நூறு கவி எழுதி
மனம் நிறை இணுவையின் மைந்தனிவன்
அமெரிக்காவில் வாழ்ந்திடும் கவியுலகப் பூஞ்சோலையிவன்

அகம் கொண்டு உனை வாழ்த்த
அகவை எனக்கில்லை
உனைப் போன்று கவி எழுதும்
உந்தன் தங்கை நானே

வளரும் கவிதை
சிறுகதை துணுக்கென
உந்தன் வரலாற்றை மாற்றட்டும்
எழுதும் தமிழுந்தன் எரிமலை ஆகட்டும்
கவியென்னும் பாதையிலே தொடரட்டும் உன்பயணம்
பல நூறு களம் காண
மனம் நிறைந்த வாழ்த்துக்கள் அண்ணா.

**ராதை. குபேரன்**
**இணுவிலூர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் உரை

**எ**ன்னுரை எழுத முற்பட்டபோது, அதன் பின்னணி நோக்கிப் பயணிக்கிறேன், என் எழுத்திற்கு மூலமாக இதயத்தில் பதிந்த சில வற்றைக் குடைந்தேன், பின்னோக்கிச் சென்றேன். பழைய நினைவுகள் பக்குவப்படுத்தப்பட்டதாய் பலதும் வந்தன, நினைவில் நின்றன, பார்வையில் பட்டன, பாதையைத் தந்தன.

கதைகள் வாழ்க்கையில் கடந்து வந்த துயரங்கள் தந்த அனுபவப் பதிவுகள். நமது மண்ணின் போர்க்கால இன்னல்கள் துன்பியல் நிகழ்வுகள் என அது வரலாறு காணாத பெரும் வெளியாயிருந்தது. மக்களோடு மக்களாக அனுபவித்த துன்பங்கள், துயரங்கள், இடர்கள், இழப்புகள், வெறுமைகள் போன்றன என் கதையின் களங்களாயின.

இத்துயரங்களில் எல்லாம் மக்களோடு பங்கு கொள்ள முடிய வில்லையே என்ற துயரத்தால் துடித்த நாட்கள் பல உண்டு, ஓடிப் போய் ஒதுங்கிவிட்டேன், ஒளிந்து விட்டேன், நான் பதுங்கிவிட்டேன், என்ற குற்ற உணர்வு என்னைத் துரத்திக்கொண்டேயிருந்தது...

இருந்தபோதும் என் மண்ணின்மீதும் மக்களின் மீதும் இருந்த அக்கறை யாலும் அளவுக்கதிகமான அன்பாலும் அந்த இருண்ட நாட்களில் மடிந்த சம்பவங்களை, ஒழிந்த நிகழ்வுகளை, மறைத்த பொழுதுகளை தேடித் தேடி அறிந்து உணர்ந்து, வாங்கிக்கொண்டு பாதிக்கப்பட்ட வர்களின் உணர்வுகளை உணர்ந்து அந்தத் தாக்கத்தையும் ஏக்கத்தையும் சிறுகதைகளாக்கிக் கொண்டேன். இந்த சீனிப் புளியடி மூலமாக உங்களோடு பேசுகிறேன்.

ஒரு காலத்தில் சீனிப் புளியடி இணுவிலுக்கு ஓர் அடையாளமாக இருந்தது. அம்மன் கோயில் வீதியும் (இன்று கருணாகரப்பிள்ளை யார் வீதியாக அவதாரம் எடுத்துள்ளது) காங்கேசன்துறை வீதியும் இணைகின்ற சந்தியில் பள்ளிக்கூடத்தை ஒட்டியிருந்த இந்த புளிய மரம் பலகாலமாக இருந்து வந்தது. அதன் அருகாக போவோர் வருவோரும், பள்ளிப் பிள்ளைகளும், விளையாட்டுப் பிரியர்களும், பயணிகளுமாக எப்போதும் கலகலப்பாக இருக்கும். அதன் கீழே பலர் கூடுவார்கள, சிலர் ஊர்க்கதைகள் கூடி அலசுவார்கள், திட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுவார்கள், சிலர் வீண்கதை பேசுவார்கள், இப்படி ஒரு பிரபலமான புளிய மரத்தை பள்ளிக்கூடத்தின் வளர்ச்சி காரணமாக வெட்டி அகற்றி விட்டார்கள். ஒரு வரலாற்றுச் சின்னத்தை, பல சரித்திர, சமூக சம்பவங்க ளுக்குச் சாட்சியாக இருந்த ஒரு மரத்தைச் சாய்த்துவிட்ட போது, பல சரித்திரக்கதைகளும் அதனோடு சாய்ந்து கிடப்பதாகவே எனக்கு உணர்த் தியது. அதன் பிரதிபலிப்பே சீனிப் புளியடி கதை.

கிழக்கு வானத்தில் தோன்றிய சூரியனின் இளம் மஞ்சள் கதிர்கள் தூரத்தே உள்ள பனை மரங்களின் ஊடாக எட்டிப் பார்க்க எத்தனித்துக் கொண்டிருந்தன. காலை இளம் தென்றல் தோட்டத்தில் மலர்ந்திருந்த உரோசாப் பூக்களின் இதழ்களைத் தழுவி நறுமணத்தினை அள்ளித் தெளித்தவாறு மெல்லத் தவழ்ந்து கொண்டிருந்தது. உரோசா மலர் களுக்கிடையே மற்றும் பல மொட்டுகளில் இருந்து பல வர்ணங்களுடன் பூக்களாகப் பிரசவித்துக் கொண்டிருந்தன. அது காலைப்பொழுது என்பதை நினைவூட்டுவதற்காக எங்கேயோ இருந்து மெதுவாக ஒரு சேவல் கூவியது செவிகளில் விழுந்தது. அலாரம் அடிப்பது, போல தான் தினமும் கூவுவதால்தான் சிலர் எழுந்திருக்கிறார்கள் என்ற பெருமிதமும் கம்பீரமும் அந்தச் சேவலின் கூவலில் தெரிந்தது. இரண்டு மூன்று காகங்கள் வீட்டிற்கு மேலாக பறந்து கொண்டிருந்தன. தூரத்தே, கொழும்பில் இருந்து மெயில் வண்டி வந்து கொண்டிருக்கும் சத்தமும் கேட்டது

"கீச்சு கீச்சு" என்ற குருவிகளின் ஓசை அந்தக் காலை வேளைக்கு மேலும் மெருகூட்ட, அருகேயிருந்த தேநீர் கடையில் இருந்து, ஒலி பெருக்கியில் இலங்கை வானொலியில் இருந்து பக்திப்பாடல்கள் ஒலித்தன. கற்பகவல்லியின் பொற்பதம் பிடித்து கற்பனையில் வடித்த இணுவையூர் வீரமணி ஐயாவின் பாடல் இதயத்தை தழுவியது.

எங்கள் வீட்டின் முன்பாக கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் காங்கேசன் துறை வீதியின் எதிர்ப்புறமாக, புகையிலைத் தோட்டம் மிகவும் செழிப்பாக இருந்தது. புகையிலையில் படிந்துள்ள பனித்துளிகளில் சூரியனின் கதிர்கள் பட்டுத் தெறிக்கும் அழகு பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். அருகே இருந்து அபயம் அளிக்கும் பல்லப்பரின் மணியோசை "நான் இருக்கிறேன், நான் இருக்கிறேன்" என்று அடித்துக் கூறுவது போல காற்றிலே தவழ்ந்து வந்து காதுகளில் புகுந்து பக்திப் பரவசத்தை அந்தக் காலைப் பொழுதினில் அள்ளித் தெளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம் நான் அன்று கண்டு களித்து, மனதில் பதித்து, நினைவில் பொதித்து வைத்த காட்சிகள். அன்று இவை தந்த எச்சங்கள்தான், என் எழுத்தின் உச்சங்கள். ஆம் இப்படியான காட்சிகளும், சம்பவங்களும் என் கற்பனையூற்றுகளோடு கன்னித்தமிழும் இணைந்து கவிஞனாக மட்டுமல்ல, கதாசிரியனாகவும் உருவாக்கின.

சிந்தையைக் கிளறி, மனதினைப் பதப்படுத்தி, கற்பனையை விதைத்து, சம்பவங்களைத் தொகுத்து, தமிழில் தோய்த்து சிறுகதைகளாக அறுவடை செய்தன. அவ்வப்போது சமூகத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளின் தொகுப்பே என் எழுத்துக்களுக்கு ஏதுவாக அமைந்தன. அப்படி உருவான கதைகளின் தொகுப்பே உங்கள் கைகளில் தவழும் இந்நூலாகும்.

அந்தப் புளிய மரத்தினடியில் கேட்ட கதை, பாக்கிடித்தபடி பாட்டி சொன்ன கதை, சோறூட்டியபடி தாய் சொன்ன கதை, கோயிலில் பிரசங்கம் செய்தவர் சொன்ன கதை, வேலியால் எட்டி நின்று கேட்ட கதை, வீதியில் கேட்ட கதை, ஆசிரியர் சொன்ன கதை, வாலிபத்து சென்சார் கதை, பத்திரிகைகளில் படித்த கதை, நாடகம், சினிமா, சின்னத்திரையில் பார்த்த கதை, மேடைப் பேச்சாளர் முழங்கிய கதை இப்படி ஏராளமான கதைகள்.

இந்நூலில் தொகுத்திருக்கும் சிலவற்றைப் பிரசுரித்த இதழ்களுக்கும், சில சம்பவங்கள் தொடர்பான விடையங்களைத் தந்துதவிய நண்பர் களுக்கும், ஊக்கமும் உற்சாகமும் தந்த நண்பர்களுக்கும், உறுதுணையாக இருந்த மனைவிக்கும், வாழ்த்துரை வழங்கிய நண்பர்களுக்கும், குறுகிய காலத்தில் இந்நூலை வெளியிடுவதற்கு சகல உதவிகளையும் செய்து தந்த சகோதரி ஈழவாணிக்கும், பூவரசி வெளியீட்டாளர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அன்போடு**
**இணுவிலான் சிகாகோ பாஸ்கர்**
6130 Potomac Place, Racine. WI 53406,
USA. 1+ (262) 598-4650, chelvadurai@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. கம்பிவேலிக்குள் கசங்கிய கவிதை | ... | 15 |
| 2. முதுமையின் பயம் | ... | 37 |
| 3. கள்ளத்தால் விளைந்த கருவல்ல! | ... | 45 |
| 4. சிந்தை விட்டகலாத சீனிப்புளியடி! | ... | 57 |
| 5. ஒரு மாவீரனின் தணியாத தாகம் | ... | 73 |
| 6. என் பெயர் செண்பகம் | ... | 81 |
| 7. பேரழிவின் நினைவுமரம் | ... | 83 |
| 8. மணிக்கூண்டுக் கோபுரத்தின் மனக்குமுறல் | ... | 89 |
| 9. மண்ணின் நினைவோடு ஒரு காரின் கண்ணீர் கதை! | ... | 97 |
| 10. முட்கம்பி வேலிக்குள் முகிழ்ந்த ஞானம் | ... | 103 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பிவேலிக்குள் கசங்கிய கவிதை

**அரசாங்கத்தின்** செயற்பாடுகள் சிலவற்றை மேற்கொள்ள அனுப்பப்பட்டவர்களுள் ஒருவராக வன்னி முகாமில் பணிஆற்ற எனக்கும் சந்தர்ப்பம் கிட்டியது.

அங்குள்ள முகாம்களில் உள்ள சுகாதாரநிலை, சுற்றாடல், பாதுகாப்பு போன்றவற்றினை பார்வையிட்டு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ள அதற்கான அனுமதி பெற்று உள்ளேசென்றேன். பலவிதமானகேள்விகளைக்கேட்டுசகல விபரங்களையும் என்னிடமிருந்து பெற்றுக்கொண்ட இராணுவத்தினர் எனது தொலைபேசியையும் வாங்கிக் கொண்டு வேண்டாவெறுப்பாக உள்ளே அனுப்பிவைத் தனர். பல நாட்டுத் தொண்டுநிறுவனங்கள் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை இருப்பதாகவும், உணவுப் பொருட்களை வழங்குவதற்கு மட்டுமே ஒரு நிறுவனம் உட்செல்ல முடிகிறது என்பதையும் அங்கு சென்றுதான் அறிந்துகொண்டேன்.

அந்தமுகாமில்பலர்தொற்றுநோய்களால்பாதிக்கப்பட்டு படுத்திருந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த உடை களிலிருந்து அவர்களிடம் போதிய மாற்று உடைகள் இருக்கவில்லை என்று தெரிந்தது. அவர்களின் முகங்களில் ஒரு ஏக்கமும், பெரும் தாக்கமும் குடியிருந்தது. அவர்களை அணுகி சற்றுப் பேசி, அவர்களின் குறைகளைக் கேட்டு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று எனது உள்ளம் உந்தியது. ஆனால் அங்குள்ளவர்களுடன் தேவை யில்லாமல் அதிகம் பேசக்கூாது என்பது எனக்கு கொடுக்கப் பட்ட நிபந்தனை. அங்கிருந்த சிறுவர்கள் நிலை மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிதாபமாக இருந்தது. பொஸ்னியாவிலும், எத்தியோப்பியா விலும் புகைப்படங்களில் பார்த்த பிள்ளைகளின் ஞாபகம் தான் நினைவில் வந்தது. உணவுப் பற்றாக்குறைவாலும் நோயின் கொடுமையாலும் அவர்கள் வாடி வதங்கிப்போய் காணப்பட்டார்கள்.

பெரியவர்கள் மருந்து கிடைக்காத காரணத்தாலும் நேரத் திற்கு சாப்பாடு இன்மையாலும் எழுந்து நடக்க முடியாத வர்களாய் வானத்தை நோக்கியபடி படுத்திருந்தார்கள். நான் அருகே சென்றபோது, தலையை நிமிர்த்தி என்னைப் பார்த் தார்கள். அந்தப் பார்வைகள், என் இதயம் வரை சென்று என்னுடைய நரம்புகள் ஒவ்வொன்றையும் சுண்டி இழுத்தன.

இறந்துபோனவர்களுக்கும்மற்றும்முகாமில்உள்ளஅத்தனை பேர்களுக்கும் ஏற்பட்டுள்ள பரிதாபமான நிலைக்கும் நானும் ஒரு காரணம் என்று சொல்லாமல் சொல்வது போல அந்தப் பார்வை இருந்தது. அவர்களை நேருக்கு நேர் பார்ப்பதற்கு திராணியற்றவனாய் தலையைக் குனிந்து கொண்டு போனேன். குற்றமுள்ள நெஞ்சு குற்றிக்கொண்டு தானே இருக்கும்.

அங்குள்ளவர்களை என் தாய் தந்தையர்களாக, சகோதர சகோதரிகளாக, பிள்ளைகளாக, உற்றார் உறவினர்களாக நினைத்துப் பார்த்ததும் என்னுடல் குலுங்கியது. வாய் விம்மியது, தலையில் ஒரு பெரும் வலி, நெஞ்சினிலே மிகப் பெரிய அழுத்தம் ஏற்பட்டது. ஒரு மூலையில் போயிருந்து ஓவென்று வாய்விட்டுக் குழற வேண்டும் போல இருந்தது.

*"ஆண்டவா!*

*நீ எங்கும் நிறைந்தவன் என்பார்களே! நீ இங்கு மட்டும் இல்லாமற்போனது ஏன்?*

*நீ எல்லாம் வல்லவன் என்பார்களே! இவர்களை மட்டும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னால் காப்பாற்ற முடியவில்லையா?
நீ சலமிலன் சங்கரன்-விருப்பு வெறுப்பற்றவன் என்பார்களே!

இவர்களை மட்டும் நீ வெறுத்தது ஏன்?"
ஆண்டவனை நொந்துகொண்டு ஆத்திரப்பட்டேன்.

"அழுவதற்கோ. ஆத்திரப்படுவதற்கோ இது நேரமில்லை. ஆவன செய்ய எவ்வளவோ இருக்கிறது" என்று என் ஆறறிவு உந்தியது. மனதைத் திடப்படுத்திக்கொண்டு மேலும் தொடர்ந்து நடந்தேன்.

ஒரு பக்கமாக இருந்து பலமான இருமல் சத்தம் வரவே என் பார்வை அங்கு சென்றது. பக்கவாட்டில் சரிந்து படுத்தபடி கிழிந்த போர்வையினால் தலையிலிருந்து கால்வரை முற்றாக மூடியபடி ஒரு பெண் பலமாக இருமியவாறு படுத்திருந்தார். தூரத்தே நின்றுகொண்டிருந்த இராணுவத்தைச் சேர்ந்த ஒருவனை அணுகி அந்த நோயாளியோடு பேசுவதற்கும், மிகவும் நோயினால் அவதிப்படும் அவருக்கு உதவி செய்வதற்கும் அனுமதி கேட்டேன். என்னிடம் இருந்த அனுமதிக் கடிதத்தை வாங்கி பார்த்துவிட்டு தலை அசைத்தான்.

இருமிக்கொண்டு படுத்திருந்த நோயாளியின் பக்கம் சென்று அருகிலிருந்தவர்களிடம் விசாரித்தேன். "என்ன இவங்க சரியா இருமிக் கொண்டிருக்கிறாங்களே. இவங்க உடம்புக்கு என்ன? டாக்டரைப் பார்த்தாங்களா?"

"அது தமிழினி அக்கா. அவங்களுக்கு எழும்பவே முடியலை. சரியான காய்ச்சல். இரா முழுக்க நித்திரை கொள்ளவில்லை. நேற்றையிலிருந்து சரியாகச் சாப்பிடவும் இல்லை. பாவம் அக்கா. பனடோல் காய்ச்சல் குளிசை வாங்க ராணி அக்கா வெள்ளனப் போனவ இன்னும் வரேல்லை. சில நேரம் பின்னேரம் செல்லும் வரிசையிலை நின்று வாங்கிக்கொண்டு வர" சற்று அருகே படுத்திருந்த சிறிய பெண்ணொருத்தி கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினி!

அந்தப் பெயரைக் கேட்டதுமே மனதிற்குள் ஒரு ஆர்வம், பதட்டம், துடிப்பு எல்லாம் ஒன்று சேர்ந்து இதயத்தின் துடிப்பை இரட்டிப்பாக்கின. அந்தப் பெயரில் ஒரு இனிமை காலையில் எழுந்து எம்.எஸ். சுப்புலட்சுமியின் சுப்ரபாதம் கேட்பது போலவொரு தூய்மை!

"என் தமிழினியாக இருக்குமோ?"

பரீட்சை முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மாணவனைப் போல என்னுள்ளம் அலைபாய்ந்தது. மெல்லக் குனிந்து,

"அம்மா, இப்படிக் கொஞ்சம் பாருங்க. உடம்புக்கு என்ன செய்கிறது?" என்று மெள்ளக்கேட்டேன்.

அந்த நோயாளி இருமிக்கொண்டு போர்வையை விலக்கி என்னைப் பார்த்தார். இல்லை, பார்த்தாள்.

அது வேறு யாருமில்லை. என் தமிழ், என் தமிழினிதான்!

என்னை உற்று நோக்கியவள், "மாஸ்ரர் நீங்களா?" என்று அதிர்ச்சியும்ஆச்சரியமும்அடைந்தவளாய்படுக்கையைவிட்டு எழுந்திருக்க முயன்றாள். அவளை எழுந்திருக்கவிடாது தடுத்து மெதுவாகப் படுக்க வைத்தேன். வாடி விழுந்த செம்பருத்திப் பூப்போல உருக்குலைந்து, ஒளியிழந்து, தரையோடு தரை யாகச் சுருண்டு கிடந்தாள் என் தமிழினி.

அந்த முகம், நான் அணுஅணுவாக இரசித்த அந்த ஆயிரம் கதைகள் பேசும் அற்புதக் கண்கள்... இதயத்தைச் சிதறடித்து விரிந்து சிவந்த கோவை இதழ்களும் அவற்றினூடாகத் தவழும் மோகனப்புன்னகையும், அமைதிகுடிகொண்டுஎளிமைசிந்தும் சாந்தமான முகம். யாவும் இன்று எங்கே? என் மனம் ஏங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தை பிச்செடுத்து யாரோ பிசைவது போன்ற வலி. அவளை அப்படியே வாரியெடுத்துக் கொண்டுபோய் வைத்தியசாலையின் அவசரச் சிகிச்சைப்பிரிவில் சேர்க்க மனம் துடித்தது.

அவள் மறுபடியும் எழுந்திருக்க முயன்றாள். நான் அருகிற் சென்று குனிந்து எழுந்திருக்க உதவிசெய்தேன். எழுந்திருக்க தடுமாறியபோதுதான் என் இதயத்தில் மீண்டும் ஒரு பலமான அடி விழுந்தது. என் தமிழினியின் ஒரு கால் முடமாக விருந்தது. மான் போல துள்ளிக் குதித்து ஓடி ஆடித்திரிந்த தமிழினி ஊனமுற்றுக் கிடப்பதைப் பார்த்ததும் "குறையொன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா, குறையொன்றும் இல்லை கோவிந்தா" என்று எங்கோ ராஜாஜி அவர்கள் எழுதி எம்.எஸ். பாடிய பாடல் மனதைக் கிளறி வேக வைத்தது.

"பாஞ்சாலியின் ஆடையைக் களைந்தபோது ஓடிவந்த கண்ணன், பாதகர்கள் தமிழ்ப்பெண்களை கற்பழித்தபோது வரவில்லையே" என்பது நினைவில் தெறித்ததும் அந்தக் கண்ணனின் நினைவையே மனதில் இருந்து தூக்கி வீசிவிட்டு, "தமிழ், இது எப்படி ஆச்சுது?" என்று கவலையுடன் கேட்டேன்.

"மாஸ்ரர இது எப்படியோ ஆச்சுது. ஒரு கால்தானே போனது. மற்றது இருக்குத்தானே" என்று கூறி ஒரு வறண்ட சிரிப்பை உலர்ந்த இதழ்களில் மெதுவாக உதிர்த்தாள்.

"அதுக்கில்லை. இப்படியாயிற்றே" என்று தலையை அசைத்தேன். "கால் போனா என்ன? நீங்கள் என்னை வைச்சுக் காப்பத்த மாட்டீங்களே?" மிகுந்த இருமலுடன் சிரமப்பட்டுக் கொண்டு குறும்பாகக் கேட்டாள்.

"இல்லை, எவ்வளவற்றை எல்லாமோ சாதிக்க வேண்டும் என்று நினைத்து ஆசைப்பட்டுவிட்டு, கடைசியில் இந்த மாதிரி ஒரு நிலைமை வந்திட்டுதே" என்று சொன்னேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாஸ்ரர்! கண்ணதாசன் எழுதின பாட்டு ஞாபகம் இருக்கு தெல்லே. நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்... மாஸ்ரர். நாங்கள் நினைத்ததெல்லாம் நடக்கிறதெண்டால் எங்களுக்கு எப்பவோ ஈழம் கிடைச்சிருக்கும் இல்லையே... சொல்லுங்கோ பாப்பம்" என்று சிரித்துக்கொண்டு கூறினாள்.

"தமிழ்! அது சரி. இப்பிடி இருமிக்கொண்டு இருக்கிறியள். டாக்டர் வந்து பார்த்தவையோ? மருந்து ஏதேன் தந்தவையோ?"

"டாக்டரோ அப்பப்ப வருவினம். நாங்கள்தான் போக வேணும். அவையும் சிங்களந்தான் பேசுவினம். என்னத்தைச் சொல்லுறது? அதுவும் காலமை போனால் பின்னேரம்தான் வரலாம். என்னாலை அதுகளுக்கும் பிரச்சினை. செல்லோ, குண்டோ விழுந்து நானும் செத்திருக்கலாம். இனி சொத்திக் காலோடை என்ன செய்யப்போகிறன். மற்றவைக்கும் பிரச்சினைகளைக் கொடுத்திட்டன். இன்னும் எவ்வளவற்றைக் குடுக்கப்போறன் மாஸ்ரர்!

சட்டை போடுறது, குளிக்கிறது, மற்ற எல்லாமே சரியான சிக்கல். இஞ்சை இருக்கிறவைதான் நல்ல உதவி. இஞ்சை பாருங்கோ, ஒரு குடும்பம் இருக்கக்கூடிய கூடாரத்திலை நாலு குடும்பம் இருக்கினம். உடுப்பு மாத்திரதெண்டால் பெரிய கரைச்சல். குளிக்கிறதுக்கு காலமை இரண்டு மணிக்கு போய் வரிசையில் இருந்தால்தான் ஒருமாதிரி காலமை பத்து மணிக்குக் குளிக்கலாம். சாப்பாடு சொல்லத் தேவை இல்லை. காலைச் சாப்பாடு சில வேளை பின்னேரம்தான் கிடைக்கும்" என்று கண்களிலிருந்து கண்ணீர் அரும்பக் கூறினாள்.

அவள் கண்களிலிருந்து பெருகி கன்னங்கள் வழியே வழிந் தோடும் கண்ணீரை என் விரல்களால் மெல்லத் துடைக்க கரங்கள் துடித்தன.

அவளை எப்படி இங்கிருந்து வெளியே கொண்டுபோவது என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும்போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மாஸ்ரர் கடுமையாய் யோசிக்கிறியள். மனைவி, பிள்ளையைப் பற்றியோ? அது சரி, உங்க மனைவிக்கு என்ன பெயர்? எத்தனை பிள்ளைகள் உங்களுக்கு?" என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனாள்.

"தமிழ், நான் இன்னும் கல்யாணம் முடிக்கவில்லை" என்று மெதுவாகக் கூறினேன்.

"என்ன மாஸ்ரர். என்ன சொல்லுறீங்கள்? நீங்கள் சும்மா கதை விடுறியள்... இல்லையே?" என்று பதட்டத்துடன் கேட்டாள்.

"இல்லைதமிழ்நான்இன்னும்அப்படியேதான்இருக்கிறேன். நான் அதைப்பற்றி என்றைக்குமே யோசிக்கவில்லை. என்றாவது ஒருநாள் உங்களைச் சந்திப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அந்த நினைவோடு இவ்வளவு காலமும் இருந்துவிட்டேன். எப்படியோ இன்றைக்கு ஒருவரை ஒருவர் பார்த்திட்டம். இனி என்ன செய்வதென்று யோசிப்பம்" என்றேன்.

"மாஸ்ரர். உங்களுக்கென்ன விசரே. என்ன வேலை செய்தனீங்களாப்பா. இவ்வளவு நாட்களும் காத்துக் கொண்டிருந்தனிங்களே? கேட்கிறவை சிரிக்கப்போயினம்" என்று படபடவென்று பொரிந்து தள்ளினாள்.

"இதில் சிரிக்க என்ன இருக்கிறது. இப்ப இங்கிருந்து உங்களை எப்படி வெளியிலை எடுக்கிறதெண்டு யோசிப்பம். பிறகு மற்றவற்றை பார்ப்போம்." என்று கூறினேன்.

"வெளியிலை எடுக்கப்போறியளோ. நல்லாய் இருக்குது. என்னைநீங்கள்வெளியிலைஎடுத்தால்இங்குஇருக்கிறமற்றவர் களை யார் வெளியிலை எடுக்கிறது? நான் மட்டும் வெளியிலை போனால் போதுமே. எங்களுக்கென்று ஒரு மனசாட்சி இல்லையே... பாவங்கள்... இவர்களெல்லாம் எங்களோடு கடைசி மட்டும் இருந்தவர்கள். இவர்கள் படும்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் இருக்கும் உங்களுக்கு தெரிவதில்லை. இந்த முள்வேலிக்குள் மௌனமாக ஒலிக்கும் இவர்களது அழுகையும் விம்மலும் கேவலும் வெளிஉலககத்திற்கு கேட்பதில்லை. நான் எங்குமே வரமாட்டேன். இவர்கள் வெளியில் வரும் போதுதான் நானும் வருவேன் மாஸ்ரர். அதற்கு ஏதாவது செய்யுங்கள்" என்று மெதுவாக ஆனால் திடமாகக் கூறினாள்.

"அண்ணா! இவ இப்படித்தான் கூறுவா. நீங்க எப்படியும் தமிழினி அக்காவை வெளியிலை கூட்டிக்கொண்டு போய் விடுங்கோ. பாவம் மிகச்சிரமப்பட்டுக்கொண்டு இருக்கின்றா..." என்று அருகில் இருந்த பெண் ஒருத்தி கூறினார்.

"தமிழ்! நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கோ. நீங்கள் முதல்வெளியில்வாங்கோ. இங்குள்ளஇவர்கள்எல்லோரையும் வெளியில் கொண்டு வருவதற்கு இப்போது வெளிநாடுகள் எல்லாம் முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்கள். வெளி நாட்டிலை வாழ்கின்ற எங்களுடைய மக்கள் மிகப்பெரிய செயற்பாடுகளை இரவு பகலாகச் செய்தவண்ணம் இருக்கிறார்கள். கூடிய விரைவில்இவர்களுக்குஒருவிமோசனம்கிடைக்கப் போகிறது" என்று நான் கூறியபோது.

"வெளிநாடுகளோ... சும்மா இருங்கோ மாஸ்ரர். வெளிநாடுகளை நம்பித்தான் நாங்கள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். போரின்இறுதிநாட்களின்போது, உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு வெளிநாட்டுக்காரர்கள் வருவார்கள், வந்தெம்மைக் காப்பார்கள் என்று, பதுங்குகுழிக்குள் இருந்து ஏக்கத்துடன் கதறினோம், துடித்தோம், மன்றாடினோம். யாரும் கேட்கலையே. எந்த நாடும் எங்களின் குரல் கேட்டு ஓடி வரேல்லையே... பக்கத்துக் காந்தி வீட்டுக்காரர்கூட காதைப் பொத்திக்கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு இருந்து விட்டார்களே!" என்று மிகவும் கோபத்துடனும் அதேநேரம் மிகுந்த துயரத்துடனும் கூறினாள்.

"சரி நடந்தது நடந்திட்டுது. இனி நடக்கிறதைப் பார்ப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்! நடந்தது நல்லாகவே நடந்தது, நடப்பவை நன்றாகவே நடக்கிறது. இனி நடக்க இருப்பதும் நன்றாகவே நடக்கும் என்று கண்ணபரமாத்மா கீதையில் கூறியிருக்கிறார்" என்றேன்.

"சும்மா இருங்கோ மாஸ்ரர். உதுபோலத்தான் அதை இதைச் சொல்லி இவ்வளவு நாளும் நாங்கள் ஏமாந்தது. புராணக் கதைகளும் பழமொழிகளும்தான் மாஸ்ரர் எங்கள் இனத்தை பழுதாக்கி மூடநம்பிக்கைகளோட வளர்த்துவிட்டது. நடந்து முடிஞ்ச பிரச்சினையைவிட இனி கேவலமாய் எதுவும் நடக்காது. நாங்கள் செத்துப்பிழைக்க வந்திருக்கிறோம்.

மாஸ்ரர்! என்னைப்பற்றி மட்டும் யோசிக்காதேங்கோ. என்னைப்போல இன்னும் மூன்று இலட்சம் மக்கள் இந்தக் கம்பிவேலிக்குள்ளே அன்றாடம் செத்துக்கொண்டிருக் கிறார்கள். இவர்களுக்கெல்லாம் உங்களால் செய்ய வேண்டி யவை எவ்வளவோ இருக்கிறது. போய் அந்த அலுவலைப் பாருங்கோ, போங்கோ"

என்று கூறிவிட்டு அந்த உரையாடலை முடிவிற்குக் கொண்டுவந்தது போல மறுபக்கம் திரும்பி அருகில் படுத்தி ருந்த ஒரு பெண்ணுடன் உரையாடத் தொடங்கினாள்.

மெல்லத் தயங்கியவாறு, "தமிழ், உங்களுக்காகத்தான் இவ்வளவுநாளும் நான் காத்திருந்தனான். இனி சண்டையும் முடிஞ்சு போச்சுது. உங்களுடைய காலும் இப்பிடி இருக் கிறது. இந்த நிலையிலை உங்களை எப்படி விட்டுப் போவது. கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ. வெளிநாட்டிலை யாவது கொண்டுபோய் உங்களுடைய காலைச் சரி பண்ண லாம். வாருங்கள் எங்காவது போய் சந்தோசமாய் வாழலாம்" என்றேன்.

"சந்தோசமாயோ...? இனியோ...? மாஸ்ரர் ஒன்று சொல்லுறன், இனி எனக்கென்றொரு வாழ்க்கை இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிப் போரிலை நானும் செத்துப்போனேன் என்று நினைச்சுக் கொள்ளுங்கோ. எக்குக் கால் மட்டும்தானே போனது, உங்களை நினைச்சுக்கொண்டு இருக்க இன்னும் என்னுடைய மனம் அப்பிடியே என்னிடம்தானே இருக்கிறது, அதுபோதும். உங்கள் அன்பான பண்பான, ஆழமான, புனிதமான, அன்பை நினைத்துக்கொண்டு மிகுதியுள்ள என் வாழ்நாட்களைக் கழித்துவிடுவேன். இப்ப போயிட்டு வாருங்க. உங்களுடைய தொண்டு என்னோடு மட்டும் நின்று விடக்கூடாது. இதோ எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்... உங்கள் உதவி இவர்களுக்கெல்லாம் தேவை. நாற்பத தொன்பது ஆயிரம் சின்னப்பிள்ளைகள் இங்கே சிறைப் பட்டிருக்கிறார்கள், இவர்களை வெளியே கொண்டுபோய் வாழ்வு கொடுங்கள்.

நீங்கள் சொன்னீர்களே, வெளிநாடுகள், அங்கை வாழுகின்ற எங்கள் தமிழர்கள் எல்லோருக்கும் இவர்களுடைய பிரச்சினை களைத் தெரியப்படுத்தி இந்தப் பாலகர்களையாவது காப்பாற் றுங்கள். உங்களைக் கையெடுத்துக் கும்பிடுறன். போட்டு வாங்கோ" என்றவள் சற்று யோசித்துவிட்டு,

"மாஸ்ரர் இப்ப வடக்குக் கிழக்குப்பகுதியில் மட்டும் 80,000 விதவைகள் இருக்கினமாம். அவர்களில் பலரை உங்களைப் போன்றவர்கள் மற்றும் வெளிநாட்டில் வசிப்பவர்கள் மறுமணம் செய்து அவர்களுக்கு வாழ்வளிக்க முடியும். அதற் கானமுயற்சி செய்யுங்கள். எனக்காக நீங்கள் செய்வீர்கள் என்று நினைக்கிறேன்" என்று ஒரு வறண்ட சிரிப்புடன் மெதுவாகக் கூறவிட்டு மறுபடியும் அந்தப் பெண்ணுடனான உரை யாடலைத் தொடர்ந்தாள்.

தமிழினியின் திடமான உறுதியான முடிவுகளும் திட்ட மிடப்பட்ட செயற்பாடுகளும் நான் ஏற்கனவே அறிந்தவை தான். இருந்தும் நான் ஒரு சாதாரண மனிதன்தானே. ஒரு அற்ப ஆசை. அவளைப் பார்த்துக்கொண்டே அவள் நினைவுடன் அப்பால் நகர்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கிராமத்தில் வாழ்ந்துவந்த முருகேசு ஆசிரியரின் மகள்தான் தமிழினி. அவளது அழகு ஆடம்பரமாக இல்லா விட்டாலும் அடக்கமானது. மின்சார விளக்குகளின் மத்தி யில் ஒரு குத்துவிளக்காக சுடர்விட்டுப் பிரகாசிப்பவள். உயர்ந்த எண்ணமும், எளிய வாழ்க்கையுமே அவளது அணிகலன்கள். அவள் பார்வை பட்டாலே மோட்சம் கிடைக்குமென்று பின்னால் அலைந்தவர்கள் பலர். ஆனால் எல்லோரையும்விட கொடுத்து வைத்தவன் நானென்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால் அவளை முன்னாலிருந்து பார்த்துப் பேசி, இரசிப்பதற்கு என்னால் மட்டுமே முடிந்தது. ஆம, அவளுக்கு இரசாயனவியல் பாடம் வீட்டிலே கற்றுக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அவள் “மாஸ்ரர்” என்று என்னை அழைக்கும்போது அகில உலகத்தின் வயலின் இசைக் கருவிகள் யாவும் இளைய ராஜாவின் இசையமைப்பில் ஒன்றுசேர்ந்து ஒலிப்பது போலவிருக்கும். அவள் இதழ்களின் வழியாகத் தவழ்ந்துவரும் ஒவ்வொரு சொற்களும் இதயத்தை ஊடறுத்து ஒவ்வொரு நரம்பையும் மீட்டும் என்று சொன்னால் அது மிகையாகாது. அவளது அங்க அசைவுகளும் அளவுக்கதிகமான நெளிவு சுளிவுகளும் என்னை நிலைகுலைய வைத்ததில் ஆச்சரியம் இல்லையே!

தமிழும் தமிழ் மண்ணும் அவளுக்கு மிகப்பிடித்தவை. தமிழர் உரிமை பற்றியும் போராட்டம் பற்றியும் மிகத் தெளிவாக அறிந்துவைத்திருந்தாள். ஒரு தடவை,

“மாஸ்ரர்! நீங்கள் ஏன் போராட்டத்தில் கலந்துகொள்ள வில்லை? சரியான கோழையா?” என்று கேட்டு என்னை திக்குமுக்காடச் செய்தாள்.

அவளது அண்ணன் இளங்கோ மண்மீட்கும் பணியில் தன்னைஎன்றோபோராட்டத்தில்இணைத்துக்கொண்டவன். அப்பப்போ வீட்டுக்கு வரும்போது ஆங்காங்கே நடை பெற்ற போராட்டங்கள் அதில் ஈட்டிய வெற்றிகள் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினிக்குக் கூறுவான். அவற்றை அப்படியே தான் நேரில் கண்டது போல மிகவும் ஆவலுடன் எனக்கு தமிழினி ஒப்பு விப்பாள்.

நாளடைவில் தமிழினியின் நினைவு என்னிதயத்தை மெதுவாக வருட, இதய நாளங்களை இன்பமாய் மீட்ட, பாய்ந்தோடும் குருதியில் தவழ்ந்தோடித் திரிய என்னை அறியாமல் என் மனதிற்குள் காதல் மெல்ல மெல்ல முளை விடத் தொடங்கியது.

காதல் என்னைக் கவிஞன் ஆக்கியது, பித்தனாக்கியது. அவளுடன் என் காதலைப் பற்றிப் பேசக்கூடியளவு வீரத்தையும் அந்தக் காதல் தந்தது. எப்படியோ மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு என் விருப்பத்தை கூறிவிட்டேன். என்னை நிமிர்ந்து ஆழமாக நோக்கியவள் எதையோ கூற வாயெடுத்துவிட்டு பின் மௌனமாகக் குனிந்துகொண்டாள்.

அதை அவளுடைய சம்மதமாகக் கருதி சிறகின்றி வானத்தில் பவனி வந்தேன். பிறகு அதைப்பற்றிப் பேச்செடுக்கும் போதெல்லாம் "பிறகு சொல்லுகின்றேன்" என்று கூறினாளே தவிர ஒருநாளாவது மனம்திறந்து பேசவில்லை. ஆனாலும் இனிய இனிய கனவுகளோடும், சின்னச்சின்ன ஆசைகளுடனும் நாட்கள் மௌனமாக நகர்ந்தன.

பரீட்சை நெருங்கி வந்தது. பரீட்சை முடிந்துவிட்டால் தமிழினியை பார்க்க முடியாதே, பேச முடியாதே, என்று என் உள்ளம் ஏங்கியது. ஏக்கத்திலும், பிரிவிலும்கூட சுகமான இராகம் மீட்டுவது காதல் உணர்வு ஒன்றுதான் என்பதை அந்தச் சிறு பிரிவில் அறிந்துகொண்டேன்.

தமிழினி, பரீட்சையில் மிகச் சிறப்பாக சித்தி எய்தினாள் என அறிந்து அவளைப் பார்க்கப் போனேன். குடும்பத்தின் வசதியீனம் காரணமாக மேலும் தொடர்ந்து படிப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது என்று கூறினாள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு அவளுடைய பெற்றோரின் சம்மதத்தோடு அவளை நான் மணந்துகொள்வதற்கு தயாராகவிருப்ப தாகவும், அதைப்பற்றி அவளுடைய பெற்றோருடன் பேசப் போவதாகவும் அவளிடம் கூறினேன்.

"மாஸ்ரர் இப்ப என்ன அவசரம். எமது இனத்திற்கு ஒரு விடிவு வரட்டுமன். அண்ணாவும் வந்துவிடுவான். எங்களுக்கு எப்படியும் ஒரு வெற்றி வரும். மாஸ்ரர், உங்களுக்கு முன்னரே கூறியிருக்கிறேன். ஞாபகம் இருக்கா? என் தமிழ் மொழி முடிசூடினால்தான் நானும் தலையில் பூச்சூடுவேன் என்று எப்படியும் எங்களுக்கு தமிழீழம் கிடைச்சு தமிழும் முடிசூடிவிடும். பிறகென்ன, தலைநிறைய பூச்சூடிக்கொண்டு நான் தயாராகவிருப்பேன். கொஞ்சம் பொறுங்கோவன் சரியா?" என்று கண்களால் கொஞ்சிக்கொண்டும் கூறினாள்.

தலைசாய்த்து, விழி கோர்த்து இதழ் பிழிந்த வார்த்தை களுக்கு மயங்கிய நான், மறுவார்த்தை கூறாது அன்று விடைபெற்றுப் பிரிந்தேன். நாட்கள் கழிவதும், நல்லவை நடப்பதும் நம் கையில் இல்லையே! உரிமைப்போரில் உயிரைத் துறந்த சீலர்களின் வரிசையில் தமிழினியின் அண்ணன் இளங்கோவும் இணைந்து கொண்டதாகச் செய்தி வந்தது. அந்த மாவீரனின் இழப்பு கிராமத்தைப் பெரிதும் பாதித்தது. குறிப்பாக தமிழினியின் குடும்பத்தைச் சீர்குலைய வைத்தது.

இளங்கோ குடும்பத்தின் மூத்த மகன். கல்வியில் மிகச் சிறப்பாக விளங்கி மேற்படிப்புக்காக பல்கலைக் கழகத்தில் அனுமதி கிடைத்தபோதும் அதைத் தவிர்த்து போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு பல களங்களில் குறிப்பிட்ட சில சாதனைகளைச் சிறப்பாக ஈட்டித் தந்துவிட்டு, வித்தாகிப் போனான். அவனது தியாகம் தமிழர்களை நிமிரவைத்த போதும் அவனது குடும்பத்தை நிலைகுலைய வைத்தது. தமிழினி சோகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமாய், உண்ணாது உறங்காது உருக்குலைந்து போனாள். அவளைப் பார்ப்பதே அரிதாய்ப் போய்விட்டது. எமது உரிமைப் போராட்டம் தமிழினத்தை முற்றாகப் பாதித்ததோடு ஒவ்வொரு தமிழனையும் தனித்தனியாகப் பாதித்தது என்றுதான் கூற வேண்டும்.

அன்று வெள்ளிக்கிழமை, காலை நல்லூர்க்கந்தனின் மணி யோசை என் காலைக் கடன்களைத் துரிதப்படுத்தியது. துணி காயப் போடும் கொடியில் இருந்து காகம் ஒன்று கரைந்து கொண்டிருக்கவே "காலங்காத்தாலை காகம் கத்துது. என்ன சேதி வரப்போகுதோ தெரியேலை. சூசூ." காகத்தைக் கலைத்தவாறே விளக்குமாறால் குனிந்து முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருந்தாள் பாட்டி. கொடியைவிட்டுப் பறந்த காகம் தள்ளிப்போய் கிணற்றடியில் உள்ள துலாவுக்குப் பக்கத்தில் இருந்த பூவரசம் மரத்தில் இருந்து மறுபடியும் கத்த ஆரம் பித்தது.

அன்று நல்லூரானின் அதிகாலைப்பூசைக்கு போகவேண்டும் என்று நினைத்திருந்தேன். அவசர அவசரமாக மிதிவண்டியை எடுத்துக்கொண்டு படலையை விட்டு வெளியே வீதிக்கு வந்தேன். அப்போது எதிராக வந்துகொண்டிருந்த சின்னத்தம்பி "தம்பி விசயம் தெரியுமே? முருகேசற்றை பெட்டை இயக்கத்துக்குப் போட்டாளாம். வாத்தியார் வீட்டிலே ஒரே அமளி துமளி, போய்ப்பாரும்" என்று கூறிக் கொண்டே போய்க்கொண்டிருந்தார். அந்த விசயத்தைக் கடைசி இருபது பேருக்காவது சொல்லாவிட்டால் சின்னத் தம்பியருக்கு நித்திரை வராது.

அதிர்ச்சியடைந்தவனாய் திகைத்து நின்றபோது அங்கு ஓடி வந்தான் தமிழினியின் தம்பி எழில் வேந்தன். "மாஸ்ரர்! அக்கா இயக்கத்துக்குப் போயிட்டா. இது அவ உங்களுக்கு எழுதி விட்டுப் போன கடிதம். அப்பாவும் அம்மாவும் அழுது கொண்டிருக்கினம். ஒருக்கா வீட்டுக்கு வந்திட்டுப்போங்கள்" என்றவாறு கடிதத்தை கையினில் திணித்துவிட்டுப் போய் விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மதிப்பிற்குரிய மாஸ்ரருக்கு,

இந்தக் கடிதம் உங்களைச் சேரும்போது நான் எங்கள் கிராமத்தைவிட்டு வெகுதூரம் வந்திருப்பேன். ஆனால் உங்களை மனதை விட்டல்ல. உங்கள் தூய்மையான இதயத்தை விட்டல்ல. எத்தனையோ தடவைகள் உங்கள் காலில் விழுந்து என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றும், மார்பில் புதைந்து உங்களை நானும் விரும்புகிறேன் என்று கூறி என் கண்ணீரால் அர்ச்சிக்க வேண்டும் என்றும் துடித்ததுண்டு. நானும் ஒரு சாதாரணப் பெண்தானே. அதுவும் ஒரு தமிழ்ப்பெண். என் உள்ளத்திலும் உங்கள் அன்பு கருக்கட்டி மொட்டவிழ்ந்து பூப்பூக்கும் உணர்வுகள் சங்கீத இராகமிசைப்பது இயற்கைதானே. எத்தனையோ தூங்காத இரவுகளில் ஈரமான தலையணைகளில் ஊறிப் போன கனவுகள், ஆசைகள், யாவும் காய்ந்து நினை விலேயே கறைபட்டுப்போயின. அதற்குக் காரணம் காலம் காலமாக பேணப்பட்டு வந்த எங்கள் பண்பாட்டின் வழிவந்த எனது பெண்மைக்குரிய குணங்களும் சமுதாயக் கட்டுப்பாடுகளும் என்று கூறலாம். இருந்தும் என்னை முழுமையாக உங்களிடம் அர்ப்பணிக்க வேண்டும் என்று என் அடிவயிற்றில் இருந்து ஒரு ஏக்கம் தெறித்தாலும் என்னுள்ளத்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் மாஸ்ரர், நான் பேசும் தமிழுக்கும், நான் பிறந்த மண்ணுக்கும் என்றோ என்னை அர்ப்பணித்துவிட்டேன்.

காலம்காலமாக எமது இனம் அடிமைப்பட்டு, உரிமைகளை இழந்து, உடைமைகளை இழந்து, வாழ்ந்து வருவதோடு திட்டமிட்ட இனப்படுகொலைக்கும் ஆளாகி வருகிறோம். பிறந்த மண்ணிலே அகதியான கொடுமை எந்த இனத் திற்கும் ஏற்பட்டது கிடையாது. எத்தனை பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள், விதவைகளாக்கப்பட்டார்கள், அனாதையாக்கப்பட்டார்கள், இதற்கெல்லாம் ஒரு முடிவு வேண்டாமா? வானத்திலே பல வல்லூறுகள் வட்டமடித்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிகின்றன. அவற்றை வேட்டையாடினால்தான் இந்த மண்ணில் எங்கள் இனம் நிம்மதியாக வாழமுடியும். நானும் ஒரு சாதாரணப்பெண்ணாக, மனைவியாக, தாயாக உண்டு கழித்து, உறங்கி மகிழ்ந்து ஒருநாள் செத்துப்போகும் வாழ்க்கையை வாழ்வதற்கு மட்டுமே இந்தப் பிறவியை எடுக்கவில்லை. அதற்கும் மேலான ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும் என்று பிரியப்படுகின்றேன். என் இனத்திற்கும், மண்ணுக்கும் என்னாலான உதவியைச் செய்ய வேண்டும்.

என் அண்ணனும் அதைத்தான் நினைத்தான். அதற்காகவே இறந்தான். அவன் விட்டுச் சென்ற பணியை நான் தொடர விரும்புகிறேன். நிச்சயமாக எங்களுக்கு ஒரு விடிவு கிடைக்கும். அந்த விடியலில் நிச்சயம் எனது பங்கும் இருக்கும். மாஸ்ரர், அந்த விடிவின் பின்பு நான் உயிருடன் இருந்தால் நிச்சயமாக உங்களைத் தேடி வருவேன். அதுவரை, உங்களால் முடிந்தால் எனக்காகக் காத்திருங்கள், இல்லையேல் உங்களுக்குப் பிடித்த இன்னொரு பெண்ணை மணந்து கொள்ளுங்கள். என் வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும் என்றும் உங்களுக்காக என் மனதில் இருந்துகொண்டே யிருக்கும்.

உங்கள் நினைவைச் சுமந்துகொண்டுதான் களத்தில் போராடு வேன். மண்ணில் சாய்ந்தாலும் உங்கள் நினைவோடுதான் சாய்வேன். மாஸ்ரர் நான் என்றும் உங்கள் தமிழினிதான். எது எப்படி இருப்பினும் என் இனத்தின் விடுதலைக்கு என் உயிரை அர்ப்பணிப்பதைத் தவிர வேறு எந்த நிம்மதியும் இவ்வுலகில் இருக்க முடியாது. எங்கள் இனத்தின் வெற்றியிலும் சரி, எனது அர்ப்பணிப்பிலும் சரி, உங்கள் பங்கும் நிச்சயமாக இருக்கும். என் பெற்றோருக்கும் தம்பிக்கும் ஆறுதல் கூறுங்கள். முடிந்தால் ஆதரவாய் இருங்கள். போய் வருகின்றேன்.

அன்போடு விடைபெறும்
உங்கள்
தமிழினி."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதத்தின் முடிவில் என்றுமே உதட்டுச் சாயம் போடாத உதட்டைச் சட்டை ஊசியினால் குற்றிக் கிழித்து வழிந்த இரத்தத்தால் தனது இதழ்களைக் குவித்து முத்தமிட்டிருந்தாள். அந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு எனக்கு பல நாட்கள் எடுத்தன.

"வாழ்க்கையில் ஒரு தடவையாவது மனிதன் தற்கொலை செய்ய நினைப்பான்" என்று எவரோ சொன்னதில் எவ்வளவு உண்மை என்பதை நான் அறிவதற்கு அந்த நிகழ்வு அமைந்தது. இருந்தாலும் தமிழினியின் நினைவோடு வாழ்வதிலும் ஒரு இனம் புரியாத சுகம் இருக்கத்தான் செய்தது.

இடையில் வெளிநாடு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. கிடைத்த சந்தர்ப்பதைப் பயன்படுத்திக்கொண்டு மேலும் உயர்கல்வி கற்றுக்கொண்டேன். மூன்று வருடங்கள் பறந்துவிட்டன. ஆனால் தமிழினியின் நினைவுமட்டும் என் இதயத்தை விட்டுப் பறக்காதிருந்தது.

வெளிநாட்டில் இருந்து மீண்டும் ஊருக்குத் திரும்பி வந்தபோது தமிழினியின் தம்பி எழில் இராணுவத்தால் பெற்றோரின் கண்ணெதிரே சுடப்பட்டு இறந்தான் என்றும், அதனால் தாயாருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டுத் திடீரென்று ஒருநாள் அவரும் கிணற்றில் விழுந்து இறந்துபோய்விட்டதாகவும் கேள்விப்பட்டேன். முருகேசு வாத்தியாருடன் மனம்விட்டுப் பேசினேன். அவரும் மனம்திறந்து பேசினார், என்பதைவிட அழுதார் என்றுதான் கூற வேண்டும்.

வன்னிக்குச் சென்று பூந்தோட்ட தகவல் நிறுவனத்தின் மூலமாகத் தமிழினியோடு தொடர்புகொள்ள முனைந்தேன். அவள் தனது இலட்சியத்திலேயே கண்ணும் கருத்துமாக விருந்தாள். "இலட்சியவாதிகள் தமது சொந்த விருப்புகள் வெறுப்புகளை கருத்தில் கொள்வதேயில்லை. தமது இலக்குகளிலேயே முழுக்கவனத்தையும் செலுத்துவார்கள்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவள் தனது அண்ணன் இளங்கோ பற்றியும் அவனுடைய இலட்சியக்கனவுகள் பற்றியும் கூறியது எனக்கு நினைவில் தோன்றியது.

எனக்கு தலைநகர் கொழும்புவில் வேலை கிடைக்கவே அங்கு சென்று தங்கி வேலையில் மூழ்கினேன். தமிழினியின் நினை வோடு நாட்களை ஒவ்வொன்றாக பலவந்தமாகக் கழித்தேன். நானும் போராட்டத்தில் கலந்துகொண்டு என் இனத்தின் விடிவிற்காக போராடியிருக்கலாமே! இப்படிக் கோழையாகி விட்டோமே என்று நாட்கள் என்னைத் துளைத்தெடுத்தன.

போராட்டங்கள் தொடர்ந்தன. நாட்களும் ஒன்றை ஒன்று தொடர்ந்தன.

தர்மத்தின் கண்ணைக்கட்டி, தெய்வங்களைப் புறக்கணித்து, நீதி நியாயங்களை மூடி வைத்துவிட்டு முழு உலகமே பார்த்துக் கொண்டிருக்க, உரிமை கேட்டு மனிதாபிமானத்தின் அடிப் படையில் சகல மனிதர்களைப் போல பிறந்த மண்ணிலே சுதந்திரமாக வாழ வேண்டும் என்று, தணியாத தாகத்துடன் பல்லாண்டுகள் போராடிக் கொண்டிருந்த ஆயிரமாயிரம் தமிழர்களை கொன்றொழித்த வரலாறு காணாத மாபெரும் அநியாயம் அரங்கேறியது. பயங்கரவாதத்தை அழிக்கிறோம் என்று தாங்களே பயங்கரவாதிகளாக மாறியவர்கள் ஒரு மாதத்திலேயே அறுபதினாயிரம் அப்பாவி மக்களைக் கொன்றதோடு, மூன்று இலட்சம் மக்களையும் முட்கம்பி வேலிக்குள் முடக்கி வைத்தனர்.

நான் சுகாதார இலாகாவில் ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவன் என்ற காரணத்தால் வன்னியில் உள்ள முகாமுக்கு அதன் சுற்றாடல் சுகாதார நிலைப்பாடுகளை கவனித்து ஆவன செய்ய அரசாங்கத்தால் வேண்டாவெறுப்பாக அனுப்பி வைக்கப்பட்டேன். அங்குதான் என் தமிழினியை இன்று கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா நீயும் போயிட்டியா" என்ற அலறல் என் சிந்தனையைத் தட்டி எழுப்பியது. முகாமின் இன்னொரு புறத்திலே வயதுபோன ஒரு தாய் போதிய பராமரிப்பு இன்றி இறந்துபோயிருந்தாள். அவளுடைய கணவனும் முள்ளி வளையில் இருந்து ஓடிவரும்போது செல் விழுந்து இறந்து போனாராம். மகள் கூறிக் கூறி தலையில் அடித்தவாறு அழுதாள்.

தமிழினியைத் திரும்பிப் பார்த்தேன். கரங்களைக் குவித்து வணங்கியவாறு தலையசைத்து விடைதந்தாள். அவளை எனது வருங்கால மனைவியாகவும் எனது குழந்தைகளுக்குத் தாயாகவும் இந்தச் சமுதாயத்தில் உண்டு உடுத்து வாழ்ந்து மடிந்துபோகும் ஒரு சாதாரணப்பெண்ணாக மாற்ற நினைத்தது எவ்வளவு தவறானது என்பதை நினைத்து வேதனைப்பட்டதோடு எனது குறுகிய மனப்பான்மையை யும் நினைத்து வெட்கப்பட்டேன். என் தமிழினியை, அந்தத் தமிழச்சியை நினைத்துப் பெருமைப்பட்டேன்.

அன்று முழுவதும் என்னால் தூங்க முடியவில்லை. காலம் காலமாக எமது மண்ணில் பெண்ணென்பவள் ஏதோவொரு விதத்தில் யாருக்கோ கட்டுப்பட்டு இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நியதியில் இயந்திரமாக வாழ்ந்தவள்தான். ஆனால் இன்று பெண்ணுரிமை பெற்று, தங்கள் அபிலாசைகள், விருப்பு வெறுப்புகளுக்கேற்ப தங்கள் வாழ்க்கையை அமைக்கக் கூடிய ஒரு நிலைக்கு உயர்த்தப் பட்டுள்ளார்கள். இதுவும் எம்மினத்துக்குக் கிடைத்த ஒரு வெற்றிதானே!

வேலைப்பளுவினால் அடுத்த இருநாட்களும் தமிழினியின் முகாம் பக்கம் போக முடியவில்லை. வவுனியா அலுவலகத்தில் சில வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது. ஆனாலும் தமிழினியை வெளியே கொண்டுவந்து சிகிச்சை செய்வதற்கும் நிரந்தரமாகக் கொழும்பு கொண்டுசெல்லவும் சில ஒழுங்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தேன். அடுத்த தடவை அவளைச் சந்திக்கும் போது இதுபற்றி விபரமாகக் கதைத்து இந்த ஏற்பாட்டுக்கு எப்படியும் சம்மதிக்க வைக்க வேண்டுமென்று திட்டத்தை தீட்டியிருந்தேன். இலஞ்சம் கொடுப்பதன் மூலம் உலகத்தில் என்னென்ன செய்ய முடியும் என்பதையும் அறிந்து கொண்டேன்.

மறுநாட்காலை சற்று சுறுசுறுப்பாக எழுந்து முகாமிற்குச் சென்றேன். தமிழினி இருந்த கூடாரத்தை அணுகியபோது, தமிழினியின் அருகே படுத்திருந்த அதே பெண் என்னை நோக்கி ஓடிவந்தாள்.


“அண்ணா, அண்ணா, நேற்று இரவு தமிழினி அக்காவை பிடிச்சுக்கொண்டு போயிட்டாங்கள். தமிழினி அக்கா இயக்கத் திலை இருந்தவ எண்டு ஆரோ சொல்லிப் போட்டினமாம். இரவு வந்து பிடிச்சிட்டாங்கள். என்ன செய்யிறான்களே தெரியேல்லை” என்று மூச்சு இரைக்க இரைக்க கூறிவிட்டு அழுதாள்.

“நான் அண்டைக்கே சொன்னனான். அவவைக் கூட்டிக் கொண்டு போகச்சொல்லி இப்ப பாருங்கோ. என்ன நடந்த தென்று” என்று கூறிக்கொண்டாள்.

அன்றைய தினம் அந்த முகாமில் இறந்துபோனவர்கள் பட்டியலில் தமிழினியின் பெயரும் இருந்தது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையின் பயம்

**“கொக்கரக்கோ”** கூவி விட்டு கூரையில் இருந்த கோழி கீழே குதித்து, காலையுணவு தேடி குப்பையைக் கிளற, காகம் ஒன்று, கூடியுண்ணப் பறந்து வந்து மாட்டுத் தொழுவத்துக் கூரையில் இருந்து கரைந்து தனது இனத்தை அழைக்க, பொதிசுமந்துவரும் புகைவண்டியும் தன் பாட்டிற்கு கூவிக்கொண்டு பனிமூட்டம் போர்த்தி யிருக்கும் காலைப்பொழுதை விலத்தியவாறு நீண்டு கிடக்கும் தண்டவாளத்தின் மீது நர்த்தனம் செய்து கொண்டு வர, “இன்னும் நாணிருக்கிறேன்” என்று ஆலயத்தின் மணியோசை காற்றிலே மிதந்து காதுகளை நிரப்ப, தோட்டத்திற்கு சென்று கொண்டிருக்கும் மாடுக ளின் கழுத்தில் இருக்கும் சலங்கைகளின் ஒலியும் அதற்கேற்ப தாளம் போட, மலர்ந்திருக்கும் மல்லிகையும் ரோசாவும் மூக்கைத் துளைக்க அன்றைய காலைப் பொழுது மெதுவாக விடிந்தது.

“டொக்டொக்” திண்ணையில் பாட்டி பாக்குரலில் பாக்கிடிக்கும் சத்தம். மறுபுறத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கும் தாத்தா “கொல்லு கொல்லு” என்று ஆண்டவனை வேண்டுவது போல “கொள்ளு கொள்ளு” என்று அடிவயித்திலிருந்து விட்டுவிட்டு இருமும் சத்தம். பாவம் இரண்டு நாளாய்ப் பெய்த மழையில் மிகவும் நனைந்து போனார். பாட்டி கொடுத்த குடிநீர் கசாயத்தைத் திட்டித் திட்டிக் குடித்தும் இருமல் மாற வில்லை. பாவம் தாத்தா. இருமி இருமியே வாழ்க்கையின் கடைசிக்காலம் போய்க்கொண்டிருக் கிறது. முதுமை படர்ந்த முகமும் கூனல் விழுந்த முதுகும், கைத்தடி தாங்கியபோது கூட தள்ளாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையும், இடக்கை, வலக்கை தவிர மேலதிகமாக பொக்கை, வழுக்கை என நான்கு கைகளையும் தாங்கிக் கொண்டு வாழ்க்கையில் எவ்வளவோ துன்பங்களையும் கஸ்டங்களையும் கடந்து, பிள்ளைகளை வளர்த்து, படிக்க வைத்து, பெண்களுக்கு சீதனம் கொடுத்து கல்யாணம் செய்து வைத்து வாழ்க்கையின் கடைசிக்காலத்தை இருமி இருமிக் கொண்டு முதுகுவலி, மூட்டுவலி, வயித்துவலி போன்ற பல்வேறு வியாதிகளும் தாத்தாவின் உடலில் வாசம் செய்கின்றன. குறிப்பாகச் சொன்னால் வைத்தியர்களோ, தாதிமார்களோ இல்லாத நடமாடும் ஒரு வைத்தியசாலை மாதிரி. பிள்ளைகள் இருந்தும் வசதிகள் வாய்ப்புகள் இருந்தும் அவருடைய நோயை அவர்தானே தாங்க வேண்டும்.

“அப்பாவுக்கு இருமலும் விடாமல் இருக்குது. அடிக்கடி காய்ச்சலும் வருகிது.” எனது அப்பா, அம்மாவுடன் மெது வாகப் பேசுவது காதில் கேட்கிறது.

“ஓமப்பா, வர, வர அவருக்கு கஸ்டமாகத்தான் இருக்கிறது. சொன்னாலும் கேட்கமாட்டாராம். உதிலை இருக்கச் சொன் னால் கேட்கிறதில்லை, வெய்யிலுக்கை திரிகிறது. பேந்து வந்து படுத்துக்கொண்டு உயிர் போற மாதிரி இருமுறது” அம்மா கூற.

“என்னப்பா செய்யிறது இரண்டு சகோதரங்கள் வெளி நாட்டிலை தங்கடைபாடு, இஞ்சை இருக்கிற இரண்டும் குடும்பம் குட்டி என்டு இருக்கினம் வயதுபோன இரண்டை யும் என்னட்டை விட்டுட்டினம், எங்களுக்கும் கஷ்டம் தானே.” அப்பாவின் குரலில் கவலையுடன் சேர்ந்து ஒரு சோகம் தெரிகிறது.

“பின்னை என்ன, நாங்கள் ஒரு இளிச்ச வாயல் எண்டு நினைச்சு எங்களிட்டை இரண்டு பேரையும் தள்ளி விட்டுக் கிடக்கு” அம்மாவின் குரலில் சற்றுக் கோபம் தெரிகிறது. பின் மௌனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஞ்சரப்பா, உங்கடை அப்பாக்கு அடிக்கடி இருமல், அது இது எண்டு மாதம் மாதம் ஏதாவது வந்துகொண்டிருக்குது. அடிக்கடி காய்ச்சல் ஒரு பக்கம், வயித்தாலையும் போகுது. நடக்கவும் சிரமப்படுகிறார். இனி பாடா வாரியாய் படுத்து விடுவர் போல கிடக்கிது. மெய்யப்பா, பேசாமல் கொண்டு போய் ஒரு வயோதிபர் இல்லத்திலை சேர்த்து விடுவமே?" அம்மா மெல்லிய குரலில் ஆரம்பித்தார்.

"என்னப்பா சொல்லுறாய?" அப்பாவின் வார்த்தைகள் கேள்விக்குறியாக வேதனையோடும் ஏக்கத்தோடும்...

"பெத்த தகப்பனைக் கொண்டு போய் அங்கை தள்ளச் சொல்லுறாய்." மீண்டும் அப்பாவின் குரல் ஆதங்கத்துடன் தயக்கத்துடன் வெளியேற,

"உங்கடை அப்பாவைக் கொண்டுபோய் அங்கு தள்ளச் சொல்லேல்லை. அங்கை வயது போனதுகளை கவனமாய் பார்க்கினமாம். நேரத்துக்கு நேரம் சாப்பாடு குடுப்பினமாம். சுகமில்லாமல் வந்தால் டொக்டர் வந்து பாப்பினமாம். கோயில் குளத்துக்கு கூட்டிக்கொண்டு போவினமாம்." சமாதானமாக அதே சமயம் சாதுர்யமாக அம்மாவின் பதில் வருகிறது.

"ஓமோம், நானும் கேள்விப்பட்டனான்தான். அங்கை இருக்கிறதுகள் படுகிற துன்பம் உமக்குத் தெரியுமே? தனிமையிலை இருந்து தவிக்கிறதும், பிள்ளைகளை நினைச்சுத் துடிக்கிறதும், ஒரு சில பராமரிக்கிறவங்கள் செய்யிற அட்டூழியங்களும் அநியாயங்களும் தெரியுமே? தவிச்ச வாய்க்கு தண்ணியும், பசிக்கிற நேரத்திலை சாப்பாடும் கிடைக்காமல் அதுகள் மௌனமாக தனிமையில் இருந்து கண்ணீர் வடிக்கிறது ஆருக்குத் தெரியும்? ஏதோ துலைஞ்சுது சனியன்கள் என்று கொண்டுபோய் வயோதிபர் விடுதியில் விடுறதும் அதுகளை கொலை செய்யிறதும் ஒண்டுதான்." அப்பாவின் குரலில் வேதனை கலந்து வெளிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப, நான் உதுகளை வைச்சுக்கொண்டு கஸ்டப்படுகிறதே. ஒரு கோயில், குளம், சினிமா பார்க்க போக முடிவதில்லை. நாடகம் பார்க்க ரிவி போட்டால் 'சத்தத்தைக் குறை, சத்தத்தைக் குறை' எண்டு முறைப்பாடு. தாமரை வீட்டுக் காரரை பாருங்கோ. தகப்பனைக் கொண்டு போய் விட்டிட்டு சந்தோசமாக இருக்கினம். சொல்லுறதைக் கேளுங்கோ. பேசாமல் கொண்டு போய் விட்டிட்டு அடிக்கடி போய் பாருங்கோவன். ஆர் வேண்டாமென்றது."

"அவரைக் கொண்டு போய் அங்கை விடுறதை நினைக்கவே தலையைச் சுத்துது. எப்படி எங்களை வளர்த்தவர். எங்களுக்கு ஒரு தலையிடி சுகயீனம் எண்டால் அதுகள் இரண்டும் எப்படித் துடிச்சுப் போயிருக்குதுங்கள் தெரியுமே? இரவு பகல் பாராமல் பக்கத்திலை இருந்து எப்பிடிக் கவனிச்சிருப்பினம் எண்டு உமக்குத் தெரியுமே. எனக்கு வயது வருமட்டும் படுத்த படுக்கையிலை மூத்திரம் போயிருக்கிறன். அப்பயெல்லாம் அம்மாவோ அப்பாவோ முகம் சுளிக்காமல் எல்லாவற்றையும் சுத்தப்படுத்தி, குளிக்க வார்த்து, எவ்வளவத்தை செய்தவை. அதுமட்டுமே... என்னைப் படிக்க வைக்க அப்பா பட்ட பாடு சொல்ல முடியாது." அப்பாவின் குரல் ஓங்கி மடிகிறது.

"ஊரிலை உலகத்திலை யாரும் செய்யாததையே உங்கடை அப்பா செய்தவர். பிள்ளையைப் பெத்தவை செய்ய வேண்டிய கடமைதானே." இப்ப அம்மாவின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

"உமக்கு நினைவிருக்குதோ தெரியேல்லை. அப்ப யாழ்ப் பாணத்திலை கலவரம் மூண்ட நேரம், இடம்பெயர்ந்து வன்னிக்குப் போகும்போது, நீர் நிறைமாதக் கர்ப்பிணி. கூட்டத்தோடு கூட்டமாக உம்மை மாட்டுவண்டியிலை வைச்சுக்கொண்டு போகேக்கை, நான் இடம் மாறி எங்கேயோ போய்விட்டேன். நாவற் குழிப்பாலத்தடியிலை சரியான மழையும் காத்தும் அடிக்க, இழுத்துக் கொண்டுபோன மாடு விழுந்து படுத்துவிட்டுது. ஆனால் உவர், என்னைப் பெத்த மனுசன், உம்மை பாலத்திலையிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூண்டு கிலோ மீட்டர் தூரம் மாடு மாதிரி இழுத்துக்கொண்டு எப்பிடியோ வன்னிக்கு கொண்டு போய் சேர்த்தவர் எண்டு நீர்தானே சொன்னனீர், மறந்துபோனீரே. பிறகு நாங்கள் முல்லைத்தீவிலை இருக்கேக்கை ஒரு நாள் ஆமிக்காரங்கள் செல்லடிச்சுக் கொண்டிருக்க, நாலு பக்கமும் குண்டு பட்டு அப்பாவி மக்கள் ஓட, குண்டுபட்டுச் சாக, பதுங்கு குழிக் குள்ளை செல் விழுந்து இரண்டு பிள்ளைகள் துடிதுடிக்க, எங்கடை மகன் பதுங்கு குழியை விட்டு எழுந்து ஓட, அப்பா ஓடிப்போய் அவனை இழுத்து நிலத்திலை. அவனை மூடிக் கொண்டு படுத்திருக்க, அடிச்ச செல்லொன்று அவரின்ரை காதை தேய்த்துக்கொண்டு போக, அருந்தப்பு பாவம் அவருக்கு அண்டையிலை இருந்து காது கேட்கிறதில்லை. யோசிச்சுப் பாரும். மெஷின் வாங்கி பூட்டுவமெண்டால் எங்களுக்கு தேவையில்லாத சிலவு வேண்டாமென்று பிடிவாதமாய் இருந்துவிட்டார். அப்பபடிப்பட்டவரை எப்படியப்பா கொண்டுபோய் அநாதை மாதிரி அங்கை விடுறது?"

"இன்னொரு விசயம், கடுமையாகப் போர் நடந்து கொண்டிருந்த காலம். இராணுவம் என்னை பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள். நீரும் பிள்ளைகளும் ஒரு வாய் சாப்பிட வழி யில்லாமல் தவித்துக்கொண்டிருந்த போது எங்கெல்லாமோ அலைந்து வெய்யிலிலை மணித்தியாலக் கணக்காய் வரிசையில நிண்டு வாங்கிக்கொண்டு வந்த சாப்பாட்டை உமக்கும் பிள்ளைகளுக்கும் தந்துவிட்டு பட்டினி வயித்தோடை இருந்தவர் எண்டு அம்மா சொல்லித்தானே எனக்குத் தெரியும்."

"இராணுவக்காரங்கள் உம்மைக்கொண்டு போக முயற்சிக்க நான் தடுக்க, என்னைப் பிடித்து சப்பாத்துக் காலாலை வயித் தாலை உதைத்து, துவக்காலை அடித்து மண்டை உடைந்து இரத்தம் பெருக, அந்த இராணுவக்காரனின் காலிலை விழுந்து அவர் மன்றாடிக் கதறி அழுதது இன்னும் கண்ணுக்குள்ளை நிற்குது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது அம்மாவிடம் மன்றாடுவது போல அப்பாவின் குரல் மெல்ல மெல்ல தடுமாறி தழுதழுத்து வெளியே சிந்தியது.

"நீங்கள் என்னவென்றாலும் சொல்லுங்கோ. எனக்கு அவரை வீட்டிலை வைச்சு பராமரிக்கிறதெண்டால் சரியான சிரமம். எங்களுக்கு எண்டு ஒரு வாழ்க்கை இருக்குதப்பா. உங்களுக்கு விளங்காது. உங்களுக்கும் வயதாகிது. இனி அவரை தூக்கிப் பறிக்கிறதெண்டால் மிகவும் கஷ்டம்." அம்மாவின் இயலாமை சொற்களாகச் சிதறியது.

"இப்ப என்ன சொல்லுறீர்? அப்பாவையும் அம்மாவையும் பிரிக்கச் சொல்லுறீரே. பாவங்களப்பா! ஒருத்தர் இல்லாட்டா மற்றது தவிச்சுப் போகுங்களப்பா. அறுபது வருடப் பந்தத்தை பிச்சு எறியச் சொல்லுறீரே. பரம்பரை பரம்பரையாக கடைசிக் காலத்திலை தாய் தகப்பனை பிள்ளைகள் வைத்துப் பராமரிப் பதுதானே ஊர் உலகத்திலை வழக்கம்." அப்பா மரபினை எறிகணையாக பாவிக்கிறார்.

ஆனால் எறிகணையாக அப்பா பாவித்த அந்த மரபெல்லாம் எப்படியோ மரத்துப்போன அம்மா மனதில் பட்டு தூள் தூளாகச் சிதறுகிறது. "இரண்டையும் கொண்டு போய்விட்டிட்டு வருவம். ஒண்டாய் இருந்திட்டுப் போகட்டுமன், இப்ப நான் சொல்லுறதை நீங்கள் கேட்கப் போகிறீங்களோ இல்லையோ?"

அம்மாவின் குரல் வீட்டுச்சுவரில் பட்டு எதிரொலிக்கிறது.

"மெல்லமா பேசும். அதுகளின்ரை காதிலை விழப்போகுது. கேட்டுதென்றால் துடிதுடிச்சுப் போகுதுங்கள்." அப்பா கெஞ்சுகிறார்.

"கேட்கட்டுமன், கடைசிக்காலத்திலை இருந்து கழுத்தறுக்கு துங்கள். இப்ப கொண்டு போய் விடப்போறீங்களோ இல்லையோ? அதுதான் இப்ப என்ரை கேள்வி."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் ஆணித்தரமான கேள்வியைத் தொடர்ந்து கதவடிக்கும் சத்தம். அப்பா அடித்துச்சாத்திவிட்டு போகிறார். அம்மாவில் இருக்கிற கோபத்தை அடிக்கடி கதவிலைதான் காட்டுவார்.

"வயதுபோனவர்களை வீட்டில் வைத்திருப்பதா? வயோதிபர் இல்லத்தில் சேர்ப்பதா?" பட்டிமன்றம் தொடர்ந்தும் எனது காதில் ஒலித்தது. சற்று அமைதி நிலவுகிறது.

அடிவயிற்றில் இருந்து பீறிட்டு வரும் இருமலோடு,

"நாங்கள் அண்டைக்கே சிங்களவன் குண்டுபட்டு செத்துப் போயிருக்கலாம்" என்று தாத்தா ஏக்கத்தோடும், ஏமாற்றத் தோடும், பரிதாபமாகக் கூறுவது என் காதில் புகுந்து கொண்டது.

"இப்படிக் கிடந்து சீரழியாமல் ஆயிரக்கணக்கான சனங்களோடை முள்ளிவாய்க்காலில் பகைவனுடைய கையாலை மண்டையைப் போட்டிருக்கலாம். இந்த பாசப் பிடிப்போடு அணுஅணுவாக உயிரை விட வேண்டிய தில்லை. இல்லையே."

பாட்டியிடம் தாத்தா பதிலை எதிர்பார்க்கிறார். ஆனால் பாட்டியின் பாக்கிடிக்கும் சத்தம் கேட்கவில்லை...!

வீட்டோரமாக சுருண்டு படுத்திருக்கும் நான் ஒரு சொறி நாய்தானே. என்னால் "சொறி" கூட கூற முடியாது. குலைக்கலாம். அதனால் என்ன பயன்? ஆனால், மனித இனத்தின் முதுமை இவ்வளவு பயங்கரமானதா? நல்லவேளை நான் நாயகப் பிறந்துவிட்டேன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளத்தால் விளைந்த கருவல்ல!

**தூ**ரத்தே காகமொன்று கரைந்தவாறு ஆலமரத்தை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது. பகல் முழுவதும் சுற்றிவந்தகளைப்புத்தீர, சூரியனும்முகில்போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு அடிவானத்தில் உறங்கு வதற்கு தயாரானான்.

ஓலைக்குடிசையின் வாசல் பக்கமாக உடைந்து போயிருந்த திண்ணையில் சாய்ந்திருந்தவாறு பால் கொடுக்கச் சென்றிருந்த சிறுவன் பாலுவை எதிர் பார்த்துக் காத்திருந்தாள் கமலா. இருண்டுவிட்டது. உள்ளே இருந்த மண்ணெண்ணெய் விளக்கை ஏற்ற வேண்டும். பால் கொடுக்கச் சென்ற பாலு. கடையில் கிடைக்கும் பணத்தில்தான் மண்ணெண்ணெய் வாங்கி வரவேண்டும். அதுமட்டும் கமலா இருளில்தான். அவள் குடிசைக்கு வெளிச்சம் வந்துவிடும். அவள் வாழ்க்கைக்கு?

கமலாவை அறியாமல் அவள் உதடுகள் விம்மின. கண்கள் குளமாகின. இதயம் வேகமாகத் துடித்தது. அதைவிட அவள் நினைவுகள் மிகவும் வேகமாக பின்னோக்கி நகர்ந்தன.

அன்றுதான் கமலாதேவி கற்கும் பாடசாலைக்கு, குமார் வந்து எமது பிரச்சினைகள் பற்றி உரையாற்றி னான். குமார் தனது உரையில்,

"இலங்கையில் வாழும் பெரும்பான்மை இனமான சிங்களவர்களுக்கும் - சிறுபான்மையினமாக வாழும் தமிழர்களுக்கும் இடையே உள்ள உரிமைப் பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டுகாலமாக இருந்து வருகிறது. ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிற்பாடு. மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகளில் தமிழர்களை பின்தள்ளியே சிங்களவர்கள் வைத்துள்ளனர். கல்வி கற்பதில் இலங்கையில் தமிழர்கள் ஆர்வமாக இருந்தனர். இதை ஒடுக்க நினைத்த சிங்கள ஆட்சியாளர்கள் சிங்களமொழியை தமிழர்களிடம் திணித்தார்கள். இதை தமிழர்களும், தமிழர் தலைவர்களும் எதிர்த்து போராடத்தொடங்கினர். ஈழத்தின் தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்ற தன்னலமற்ற தமிழர் களின் தலைமையில் அகிம்சை வழியில் தமிழர்கள் போராட, சிங்கள இனவாதிகளும், சிங்கள அரசியல்வாதிகளும் அதனை எதிர்த்து, தமிழர்களையும் அவர்களுடைய நியாயமான அகிம்சை போராட்டத்தையும் அழிக்கத் துவங்கினர். 1981-ல் யாழ்ப்பாண நூலகம் சிங்கள வெறியர்களால் எரிக்கப் பட்டது. அதற்கு முன்பு 1972-ல் நடைபெற்ற உலகத் தமிழ் நான்காவது மாநாட்டின் போது ஒன்பது தமிழர்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர். இவை எல்லாவற்றையும் விட மிகப்பெரிதாக அமைந்தது 1983ஆம் ஆண்டு தலைநகர் கொழும்பில் நடைபெற்ற ஜூலை கலவரமாகும். இந்தக் கறுப்பு ஜூலை கலவரம்தான் அகிம்சை வழியில் போராடிக் கொண்டிருந்த தமிழர்களை ஆயுதம் தூக்க வைத்தது. தங் களைக் காத்துக்கொள்ள தமிழர்களும் போராடத் துவங்கி னார்கள்.

இலங்கை இராணுவமும், சிங்களக் காவல் துறையும், சிங்களக் காடையரும், இனவெறியர்களும் கலந்துகொண்ட இந்தக் கறுப்பு ஜூலை கலவரத்தின்போது நூற்றுக்கணக் கான, தமிழர்கள் கொல்லப்பட்டதோடு, தமிழர்களின் ஆயிரக் கணக்கான வீடுகளும், வியாபாரக் கடைகளும் அடித்து நொறுக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தமிழர் பகுதிகளில் புகுந்த சிங்களக் காடையர்கள் தமிழ் பெண்களை பட்டப்பகலில் வீடுகளில் இருந்து இழுத்து வந்து கணவன் எதிரேயும், பெற்ற தந்தையின் கண் முன்னாலும் கற்பழித்தனர். பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என பாரபட்சம் பார்க்காமல் கை-கால்கள் வெட்டப்பட்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகள் வெட்டப்பட்டும் பெண்கள், ஆண்கள், இளைஞர் கள், குழந்தைகள் எனக்கொன்று குவித்தனர். 80 ஆயிரம் பேர் நாட்டுக்குள் இடம்பெயர்ந்தனர். பிறந்த நாட்டிலேயே அகதி களாயினர். 70 ஆயிரம் மக்கள் பிற நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர்.

தனது உரையை குமரன் சற்று நிறுத்திவிட்டு பின் மீண்டும் ஆவேசத்துடன் தொடர்ந்தான்.

"எமது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். எங்களுக்கு சம உரிமை, சம அந்தஸ்து போன்றவை கிடைக்க வேண்டும். இதற்கு ஒரே வழி நம்மை நாமே ஆளுவதுதான்! இதைத்தான் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தந்தை செல்வா கூறினார். நமக்கான விடுதலையை நாமே தேடிக்கொள்ள வேண்டும். அதற்கு எம்மை நாமே தயார்படுத்த வேண்டும். பல அர்ப் பணிப்புகளைச்செய்ய அனைவரும் முன்வர வேண்டும். உங்கள் மண் விடுதலைக்கு நீங்கள் செய்யப்போகும் பணியானது மிகவும் முக்கியமானது. உங்கள் தாய்நாட்டின் சேவை வரலாறு படைக்க வேண்டும். நாங்கள் அனைவரும் தலை நிமிர்ந்து வாழ வேண்டும்" என்று குமரன் பேச அவன் பேச்சில் இருந்த கம்பீரமும், உணர்ச்சிகரமான வார்த்தை களும், துடிப்பான, வெடிப்பான தொனியும் கமலாவின் சிந்தையைக் கிளறி, உணர்ச்சியை கொதிக்கவைத்து, இதயத் தைத் துடிக்க வைத்து, நாடி நரம்புகளை அதிரவைத்து மண்ணுக்கு பணிசெய்ய வேண்டும் என்ற தீயை கொழுந்து விட்டு எரியச் செய்தது.

மேலும் அவன் பேசும் வசீகரத்திலும், துடிப்பான அங்க அசைவுகளிலும் இலயித்துப்போன கமலா அவனை மீண்டும் பார்க்கவும், அவன் பேச்சினை கேட்கவும் ஆர்வம் கொண் டாள். அதேபோல பல சந்தர்ப்பங்கள் உருவாக, கோயில் திருவிழா, கூட்டம், தோட்டம் என்று ஆரம்பித்த சந்திப்புகள் காதலாகக் கருக்கட்டியது. ஆனால் மண்ணின் விடுதலைக்குப் பின்தான் திருமணம் செய்துகொள்வது என்று இருவரும் உறுதி செய்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் போர் தீவிரமாகியது. செல்லடி, குண்டுவீச்சு, பதுங்கு குழி, கடத்தல், காட்டிக்கொடுத்தல், கற்பழிப்பு, கொடூரம், கொடுமை, சித்திரவதை என்று சூழ்நிலைகள் மாறின.

திடீரென்று ஒருநாள் குமார் சீருடையுடன் கமலாவைச் சந்திக்க வந்தான். தான் பிரச்சாரக்குழுவில் இருந்து பிரிந்து போரணியில் சேர்ந்துகொள்ள முடிவு செய்துகொண்டதாகக் கூறிவிட்டுச் சென்றான். கமலாவும் அவனோடு சென்று களத்தில் நின்றுபோராடி மக்களின் விடுதலைக்கு வித்திட வேண்டும் என்று விரும்பினாள். ஆனால் கூடிய விரைவில் எமக்கு விடுதலை கிடைக்கும் என்றும் அவளைத் தொடர்ந்து படிக்குமாறும் கூறிவிட்டு குமார் இருளோடு இருளாகச் சென்றுவிட்டான்.

குடிசையின் தாவாரத்தில் கட்டியிருந்த மாடு. அருகே நின்றிருந்த கன்றுக்குட்டி சற்று தள்ளிப் போயிருந்ததால் குரல் கொடுத்து அழைத்தது. பால் கொண்டு சென்ற பையனின் நினைவு வரவே வீதிவரை சென்று பார்த்த கமலா மறுபடியும் வந்து திண்ணையில் சாய்ந்தாள். வீதியில் போய்க்கொண்டிருந்த சைக்கிளின் மணிச்சத்தம் கமலாவின் நினைவை சற்று நிறுத்தியது. தலையை நிமிர்த்தி வீதியை பார்த்தவளின் கண்களில், சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மணியம் தென்பட்டார். சைக்கிளின் பின்புறமாக பெட்டியொன்றையும் முன்பாக அவர் கடைசிப் பையனையும் வைத்தவாறு சென்று கொண்டிருந்தார். அதைப் பார்த்ததும் கமலாவின் நினைவு யாழ்ப்பாண இடப்பெயர்வை நோக்கி நகர்ந்தது. கமலாவின் நினைவு நடந்து முடிந்தவற்றை அசைபோடத் தொடங்கியது. தாவாரத்தின் ஓரமாகப் படுத்திருந்த மாடும் புல்லை மெதுவாக இரைமீட்டு அசைபோட்டுக் கொண்டிருந்தது.

"அது 95ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம். முப்பதாம் திகதி திங்கட்கிழமை. சரியாக ஞாபகத்தில் இருந்தது. அன்று எனது பிறந்தநாள். அன்றுதான் "நான் ஏன் பிறந்தேன்?" என்று என்னையே நான் கேட்டுக்கொண்ட நாள்!

அரை இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இரவோடிரவாக யாழ்ப்பாணத்தைவிட்டுபுறப்பட்டோம். இருப்பதைஎடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அப்பா, அம்மா, தங்கை, தம்பி நால்வரும் கூட்டத் தோடுகூட்டமாகநெரிபட்டுக்கொண்டுகொட்டும்மழையில், கரிய இருளில் போய்க்கொண்டிருந்தோம். சைக்கிளின் பின்னால்உடுப்புப்பெட்டியும்முன்னால்எனது சாமான்களும் இருந்தன. அருகே எனது அம்மா நாலு மாதமேயான குழந்தை யைத் தூக்கிக்கொண்டு வந்துகொண்டிருந்தார். மழை வெள்ளம் பெருகி ஓடியது. காற்றோடும், குளிரோடும், மழையோடும், பசியோடும், தள்ளாடிக்கொண்டும் தங்கள் விதியை நொந்துகொண்டும், ஆண்ட ஒரு இனம் மழையின் தண்ணீர் கண்களின் கண்ணீரோடு சங்கமமாக ஆண்டவனை வேண்டிக்கொண்டு நகர்ந்து கொண்டிருந்தது. என் மனம் அப்பப்பாவை நினைத்தது. அவர் என்ன செய்கிறாரோ? நாங்கள் புறப்பட்டபோது எங்களுடன் வருவதற்கு மறுத்து விட்டார். அவர் பெரும் ரோசக்காரன். "என்னுடைய மண்ணைவிட்டு, என்னுடைய வீட்டைவிட்டு நான் ஏன் போகவேணும்? என்னைக் கொண்டாலும் பரவாயில்லை. என்ரை உயிர் என்ரை மண்ணிலை போகட்டும்" என்று கூறிக்கொண்டு எங்கடை நாயையும் வைச்சுக்கொண்டு இருந்துவிட்டார். அப்பா எவ்வளவு சொல்லியும் அப்பப்பா கேட்கவில்லை. "உந்தக் கிழவன் உப்பிடித்தான். பிடிவாதக் காரன். சொன்னால் கேட்காது." அம்மாவும் பேசிப்போட்டு வந்துவிட்டா.

திடீரென்று "ஐயோ என்ரை பிள்ளை விழுந்து போச்சுது," அம்மாவின் குரல் என்னைத் திடுக்கிட வைத்தது. இருட்டினுள் அம்மாவைத் திரும்பிப் பார்த்தேன். பதறினாள், துடித்தாள், கதறினாள். "பிள்ளை வெள்ளத்துக்குள்ளை விழுந்திட்டுது. காணேல்லை. பாருங்கோ." அம்மாவின் கூச்சல் போய்க் கொண்டிருந்தகூட்டத்தைநிறுத்தியது. பெய்துகொண்டிருந்த மழையினாலும், குளிரினாலும், தொடர்ந்து காவிக்கொண்டு வந்த அம்மாவின் இடுப்பும் கைகளும் விறைத்துப் போக, குழந்தை வழுக்கி விழுந்ததை அம்மாவிற்கு உணர்ந்து கொள்ள சில கணங்கள் எடுத்தன. வெள்ளத்திற்குள் தேடி னோம். துழாவினோம். கிடைக்கவில்லை. சிறிது நேரத்தில் பின்னால் இருந்து ஒரு குரல் பலமாகக் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சை ஒரு பிள்ளை கிடக்கிது. பாருங்கோ." கூட்டத்தை தள்ளி விலத்திக்கொண்டு தட்டுத்தடுமாறி ஓடினோம். என் சின்னத் தங்கை, குட்டிச் செல்வம் அங்கே கிடக்கவில்லை. அவள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தாள். கத்திக் கதறினோம். கூட்டமும் சேர்ந்து அழுதது. ஆறுதல் சொல்லினர் பலர். எங்களால் ஆற முடியுமா...? "ஆமிக்காறங்கள் குண்டு போட்டாலும் போடுவார்கள். எட்டி நடவுங்கோ" என்று யாரோ சொன்னார்கள். கூட்டம் நகர்ந்தது. நாங்களும் நகர்ந்தோம். விதியும் கூடவே எங்களுடன் நகர்ந்தது. அந்த இக்கட்டான நேரத்தில் அப்பாவையும் மற்றத் தம்பியை யும் கூட்டத்தில் தவறவிட்டு விட்டோம். பிறகு ஒருமாதிரி அங்கும் இங்குமாக அலைந்து முல்லைத் தீவிற்கு வந்து சேர்ந்தபோது அங்கு தெரிந்தவர்கள் வீட்டில் அப்பாவையும் தம்பியையும் மீண்டும் சந்தித்தோம்.

ஒரு நாள் குமார் எங்கள் இருப்பிடத்தை தேடிக் கண்டு பிடித்து என்னைப் பார்க்க வந்தார். அவர் முகம் அன்று மிகவும் பிரகாசத்துடனும் பெருமையுடனும் தென்பட்டது. என் மண் ணுக்காக, மக்களுக்காக, மொழிக்காக ஒரு பெரும் சாதனை யைச் செய்யப்போகிறேன் என்று கூறிவிட்டுச்சென்றார்.

பிறகு அவர் வரவேயில்லை. மாவீரர் தினமொன்றிற்கு வழிபடச் சென்றபோது அவர் கரும்புலியாக வீர மரணம் அடைந்தார் என்று கேள்விப்பட்டேன். நான் அழவில்லை. அந்த வீரனைக் காதலித்ததற்காகப் பெருமைப்பட்டேன்."

கமலா சற்று பெருமை தூக்க, சிறு புன்னகை பூக்க நிமிர்ந்து உட்கார முற்பட்ட போதும், அவள் அடிவயிற்றில் இருந்து பெருமூச்சு வெளிப்பட்டது. கண்களில் இருந்த திரண்டு கன்னங்களின் வழியே உருண்ட கண்ணீர்த்துளிகளை சாயம் போய் கிழிந்த சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்ட போது,

"அம்மா" என்று அழைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான் பாலன். கமலா எழுந்து உள்ளே சென்று அரிக்கேன் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு பாலனுக்கு சோறு ஊட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினாள். 'இதே போலத்தான் முன்பு தம்பிக்கும் உணவு ஊட்டிவிட்டேன். எல்லாம் போச்சுது' என்று நினைத்த கமலாவின் மனதில் பதிந்திருந்த பழைய நினைவுகள் மீண்டும் வந்து உதிர்ந்தன.

இடம்பெயர்ந்த வாழ்வில் தொடர்ந்தும் இடி விழத் தொடங்கியது. போரின் இன்னொரு கட்டம் ஆரம்பித்து ஒரு காலைப்பொழுது, வானிலே விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. குண்டில் இருந்து தப்பிக்க, பதுங்கு குழி யினுள் பதுங்கிக் கொண்டிருந்தபோது, தூரத்தே ஓடிவந்து கொண்டிருந்த தகப்பனைப் பார்த்துவிட்டு திடீரென்று குழியைவிட்டு எழுந்து வெளியே ஓடிய கமலாவின் ஆறு வயதுத் தம்பியின் தலை, அவள் கண்முன்னே செல்பட்டுச் சிதறியது. கந்தசஸ்ட்டிக் கவசத்தை மனதுக்குள்ளே பாடிக் கொண்டிருந்த கமலாவுக்கு இந்த எதிர்பாராத சம்பவத் தினால் திகைப்பினால் அழமுடியவில்லை. கல்லாக நின்றாள். அப்படியே மூர்ச்சையானாள். கண் விழித்தபோது புதுக் குடியிருப்பு வைத்தியசாலையில் ஓரமாக வெறும் தரையில் காயம்பட்ட பலரோடு படுத்திருந்தாள். எங்கு பார்த்தாலும் இரத்தம் வழிய, கண்ணீர் சொரிய, பெரும் வலியோடு, அழுகையும் கதறலுமாக அந்த வைத்தியசாலையே பரபரப் பாக இருந்தது.

எழுந்து பார்த்தபோது இன்னொரு புறத்தில் அவளது தகப்பன் கந்தையாவை துணியால் போர்த்தி வைத்திருந் தார்கள். சீறிவந்த செல்லொன்று ஏறிவந்த வண்டியொன்றில் மோதி விழுந்தபோது காவு கொண்டதாம் கமலாவின் தகப்பன் கந்தையாவை!

அடுத்தடுத்தது ஏற்பட்ட அதிர்ச்சியால் சித்தப்பிரமையான தாயும்மகளுமாகதனித்துவிடப்பட்டார்கள்அந்தஅபலைகள். இருவரையும் தாங்கிப்பிடித்துக்கொள்ள சொந்தங்கள் வர வில்லை. சுடுசொற்கள் வந்தன. குறைகள், குற்றங்கள், ஏளனங்கள், ஏமாற்றங்கள் குவிந்தன. அனைத்தையும் தாங்கிக் கொண்டு வாழ்ந்துகொண்டிருந்த வேளையில், ஒருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலா வீடு வந்து பார்த்தபோது உரோந்து வந்த இராணுவம் அவளது தாயை உருசி பார்த்து, உருக்குலைத்து குற்று யிரோடு விட்டு விட்டுச் சென்றிருந்தது.

என்ன கொடுமை! ஏன் இந்த நிலைமை? தமிழராய் பிறந் ததை தவிர நாங்கள் செய்த பாவம்தான் என்ன? இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் இப்படி அடிமையாக வாழ்வது? இவர்களைக் கேட்பவர்கள் எவரும் இல்லையா?

பதறிய கமலாவின் சிதறிய சிந்தனையில் புகுந்தது விடுதலைப் புயல்! விழித்தது வேங்கையின் வேகம்! பெண்மை புலியானது. அன்று தீர்க்கமான முடிவோடு புறப்பட்டாள். களத்தை நோக்கி அவள் கால்கள் நகர்ந்தன. அவசரம் அவசரமாகப் பயிற்சி. காயம்பட்ட மனதின் கொப்பளித்த ஊக்கம். செய் அல்லது செத்துமடி என்ற வேகம். அவளை களத்தின் முன்னிலையில் தள்ளியது. இறுதிப்போரில் வீராவேசத்துடன் போரிட்டாள். உறவுகளை மனதிற்கொண்டு உத்வேகத்துடன் போரில் தன்னை முழுமனதோடு இணைத்துக்கொண்டாள்.

இராணுவம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு. கேப்பாபிலவு. தேவிபுரம் ஆகிய இடங்களில் நிலை கொண்டு அந்தப் பகுதி யைச்சுற்றி வளைத்திருந்தது. புதுக்குடியிருப்பின் ஆனந்தபுரம், இரணைப்பாலை என்ற சிறுபகுதியும் மாத்தளன் முள்ளிவாய்க் காலுக்கிடைப்பட்ட ஒடுங்கிய கடற்கரைப் பிரதேசமும்தான் இறுதியாக இருந்தன. பாதிக்கப்பட்ட மக்கள் அயல்நாட்டா னும் அமெரிக்காவும் கடல் கடந்து வந்து கை கொடுப்பார்கள் என்ற நப்பாசையுடன் கடைசிவரை காத்திருந்தவர்கள். மக்களிடையே இருந்த நம்பிக்கை குறைய ஆரம்பித்தது. பலரும் என்ன செய்வது. எங்கே செல்வது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார்கள். போரைத் தொடர்ந்து நடத்தக்கூடிய நிலையில் ஆயுதங்களும் இல்லை. போராளிகளின் மனநிலை யும் சரியாக இருக்கவில்லை. தங்கள் குடும்பங்களைத் தேடுவதிலும் அவர்களைக் காப்பாற்றுவதிலும்தான் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். போரைத் தாங்கக்கூடிய நிலையில் மக்கள் இல்லை. அவர்களுக்கு உணவில்லை. தங்குவதற்கு இடமில்லை. குழந்தைகளுக்குப் பாலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருக்கு காலில்லை, கையில்லை, காயத்திற்கு மருந்தில்லை, மருத்துவமனையில்லை, பலருக்கு உயிரே இல்லை. இறுதிப் போராக நடந்த ஆனந்தபுரம் சமரில் ஏறக்குறைய மூவாயிரம் போராளிகளேடு பிரதானமான படைத் தளபதிகள் உட்பட எல்லோரும் களத்திலிறங்கினர். அவர்களோடு ஒருவராக கமலாவும் போரிட்டாள். அங்கு போரிட்டுக்கொண்டிருந்த தளபதிகளின் விபரங்களை இராணுவத்தின் ஒட்டுக் கேட்கும் பிரிவினர் மூலம் அறிந்துகொண்டு அதை ஒரு சந்தர்ப்பமாக கருதி இராணுவம் பெரும்பலத்துடன் தாக்க ஆரம்பித்தது. குறுகிய இடத்தில் நடைபெற்ற அந்தச் சமரில் போராளிகள் பெரும் தோல்வியைத் தழுவிக்கொண்டனர். இறுதியில் ஆயுதங்கள் மௌனித்துக் கொண்டன. முழு உலகமுமே கைவிட்ட காலகட்டத்தில் கேட்பதற்கு எவருமே இல்லாத நிலையில் சிங்களப் படை தமிழர்களைப் பந்தாட ஆரம்பித்தது.

பெண்களின் உடல்கள் சிதைக்கப்பட்டன. தமிழர்கள் பிணங்கள் இரத்தத்தில் மிதந்தன. கதறலும் கூப்பாடும் வானில் எதிரொலித்தன. குண்டுகள் குழந்தைகள் நெஞ்சில் பாய்ந்தன. பலர் அனாதைகள் ஆயினர். விதவைகள் கூடினர். பல குடும்பங்கள் சாய்ந்தன. மனிதநேயம் வீழ்ந்தது. ஆண்டவன் கண்களும் மூடின. போர் முடிந்ததும் இறந்த எழுபதினாயிரம் பேர்களைவிட, காயம்பட்டோர்கள் மற்றும் போராளிகள் உட்பட சரணடைந்த கூட்டத்தோடு வவுனியா முகாமுக்குள் அனைவரும் அடைத்து வைக்கப்பட்டார்கள்.

இப்போது கமலா பேசுகிறாள்.

“முகாமுக்குள் இருந்தபோது நாங்கள் அனுபவித்த கொடுமையையும் துன்பத்தையும் சொல்ல வார்த்தைகள் இல்லை. அப்பப்போ இராணுவத்தினர் விசாரணைக்கென்று அழைத்துச் செல்வார்கள். ஆண்களை சித்திரவதை செய்வார் கள். பெண்களை சீரழிப்பார்கள். அரிசி தருவதாகக் கூறி பெண்களை அழைத்துக்கொண்டு போய்... தங்களின் இச்சையை தீர்த்துக்கொண்டனர். அதே சமயம் அம்மாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர். தங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற அரிசிக்காகவும், ரொட்டிக்காகவும் சிங்கள ஆமிக்காரனின் இச்சைக்கு விருப்பப்பட்டே பலியாகிக் கொண்டார்கள். பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். நிச்சயம் அதில் ஒன்று கற்பாக இருக்க வேண்டும். எங்களுக்கோ வயித்துப்பசி, அவங்களுக்கோ உடற்பசி. உலகமோ பெரும் பசி. அவர்கள் பசிக்கு நாங்கள் விருந்து. எங்கள் நோய்க்கு யார் மருந்து? எப்படியோ நலன்புரி சங்கங்களுக்கூடாக வெளியே வந்தவர்களில் நானும் ஒருத்தி. மனதில் மட்டும் சுமையோடு மட்டுமல்ல வயிற்றுச்சுமையோடும் வெளியே வந்தேன்.

மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் எவ்வளவோ துன்பங்களையும் துயரங்களையும், இனத்திற்காகப் போராடியதற்காக பகைவன் தந்த பரிசையும் தாங்கிக் கொண்டு, பெற்றோர்கள், சகோதரங்கள், காதலன், கற்பு எல்லாவற்றையும் இழந்து நான் வெளிஉலகத்திற்கு வந்தபோது என்னை மாலையிட்டு கௌரவிக்காவிட்டாலும் மனிதாபிமானத்தோடு இந்தச் சமூகத்தில் ஒருத்தியாக ஏற்றுக்கொள்வார்கள் என எதிர் பார்த்தேன்.

நான் பிறந்த மண்ணுக்குப் போனபோது எவரும் என்னைக் கண்டுகொள்ளவில்லை. சொந்தங்கள் முகத்தைச்சுளித்தார்கள், தெரிந்தவர்கள் ஏளனமாகப் பார்த்தார்கள். தீண்டப்படாதவளாகக் கருதினார்கள். வேலை கேட்டு வீட்டுப் படியேறினால், தாழ்ப்பாளைப்போட்டுமூடிவிட்டுதரக்குறைவாகப்பேசினார்கள். வெள்ளை வேட்டிக்காரர்கள் விஷமமாகப் பார்த்தார்கள். களத்தில் கால் கடுக்க நின்று. நீரின்றி, உணவின்றி, தணியாத தாகத்துடன் பேராடியபோது இருந்த என் திறமை, பெருமை, அருமை யாவும் வடிந்து ஓலைகளால் வேயப்பட்ட மட்டைகளை வைத்து, மண் சுவரை நாலாபுறமும் எழுப்பி, தகரச்சீட்டை மேலே போட்டு சின்னதா ஒரு குடிசையைக் கட்டி யாரோ ஒரு புண்ணியவான் தந்த பணத்தில் ஒரு பசு மாடு வாங்கி அதன் பாலை விற்றுக்கொண்டும் அயலில் கூலி வேலை செய்து கொண்டும் வாழ்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து முடிந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டது எவ்வளவோ மக்கள். பல்லாயிரம் குழந்தைகள் அனாதைகளாகவும், தொண்ணூற்றி மூவாயிரம் பெண்கள் விதவைகளாகவும், பல பெண்கள் இராணுவத்தின் எச்சங்களை சுமந்து கொண்டவர்களாகவும் சொந்தம் பந்தம் இல்லாத வயோதிபர்கள், கணக்கற்றோருமாக தற்போது இங்கு வாழ்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையின் முடிவு தான் எங்கே? விடிவுதான் எப்போ?

நான் மணமாகாமல் பிள்ளையுடன் இன்று பிணமாக வாழ்கிறேன். வயிற்றில் உதித்த பாவச் சுமையை அன்று என்னால் அழிக்க முடியவில்லை. அதற்கு சட்டமும் இடம் தரவில்லை. அது என் கள்ளத்தால் விளைந்த கரு அல்ல! என் உள்ளத்தால் ஏற்ற கருவல்ல. எவனோ ஒருவனின் கொடுமையால், கொடூரத்தால் கொடுத்த கரு. எனக்குள்ளே நான் ஒரு முடிவு செய்துகொண்டேன். அந்தக் கருவை இப்பூமியில் இன்று பெற்று என் பிள்ளையாக வளர்க்கிறேன். என் பிள்ளையின் தோற்றமும், பிறப்பும் அதன் அடிப்படைக் காரணமும் நாளை சந்ததிக்கு வரலாறு கூறும் ஒரு சான்றாக, தமிழர்களுக்கு நடந்த கொடுமையின் எச்சமாக பெரும் பதிவாக அமையட்டும்" என்று கூறிவிட்டு கமலா குலுங்கிக் குலுங்கி அழுதாள். இன்னும் அழுது கொண்டுதான் இருக்கிறாள்.

அவள் மட்டுமல்ல. இன்னும் ஏராளமான பெண்கள் ஈழத்தில் விம்மி அழுது கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அந்த விம்மல்கள் எமக்கு கேட்பதில்லை. காரணம் நாங்கள்தான் எப்ப பார்த்தாலும் காதுகளில் "காதுகேள் பொறி" (Ear Phone) மாட்டி குத்துப்பாட்டு கேட்டுக் கொண்டிருக்கிறோமே!

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தை விட்டகலாத சீனிப்புளியடி!

**பல்லாண்டுகளாக** உயர்ந்து, பரந்து, ஊருக்கு உழைத்து, காவல் புரிந்து, அடையாளம் தந்த, விலை யற்ற சரித்திரம் ஒன்று சாய்ந்து கிடக்கிறது!

பஸ் வரக் கொஞ்சம் நேரம் போச்சு... அவசரம் அவசர மாக இறங்கி, அம்மன் கோயில் ஒழுங்கையில் திரும்பி நடக்கும்போது, ஒரு குரல்:

“தம்பி, இப்பிடி கொஞ்சம் கிட்ட வாரும்.”
கிளை, மரம் வெட்டப்பட்டு அடிவேருடன் சிதைந்து போய்க்கிடக்கும் அந்த மரத்தை நோக்கி நடக்கிறேன்.

தம்பி! என்னைத் தெரியுதோ? என் பெயர் சீனிப் புளி! புலி இல்லைத் தம்பி புளி! புளி! சும்மா இருக்கிற என்னைக் கொண்டே மாட்டிவிடுவீர் போலக்கிடக்கு. அந்தப் பேரைக் கேட்டாலே இஞ்சை இருக்கிறவைக்கு என்னை வயித்திலை கரைக்கிற மாதிரி இருக்குமாம் விளங்குதே! அம்மன் கோயில் சூரனுடைய தலையை வெட்டுற மாதிரி என்னையும் வெட்டிப் போட்டினம்! இருந்தாலும் என்ரை உயிர் வேரிலை கிடந்து அல்லாடுது.

நான் தம்பி, இணுவில் கிராமத்துக்கு ஒரு தனி அடையாளம்! சீனிப்புளியடி என்டால் அமெரிக்கா கிமரிக்கா, கனடா கினடா, இலண்டன் கின்டன் எங்கை கேட்டாலும் என்னைத் தெரியும். நான் வாழ்ந்த தடயங்கள் அழிஞ்சு போகிற நிலையிலை இன்று இருக்கிறேன். வயதுபோனாலும் சரியான உசரோடை தான் இருந்தனான். ஏதோ என்னுடைய போதாத கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்கும் என்னை வெட்டிப்போட்டினம். வயதுபோனாலும் உப்பிடித்தான் தம்பி. அதுவும் மரங்களெண்டால் சொல்லவே வேணும்! மனுசரெண்டாலும் திருமுருகனுடைய வயோதிபர் விடுதியில் விடுவினம்.

தம்பி, அந்த நேரம், நீர் கோழையாக, இந்த மண்ணையும், உம்முடைய உறவுகளையும் இஞ்சை விட்டிட்டு துண்டைக் காணோம் துணியைக்காணோம் வெளிநாட்டுக்கு ஓடிப்போய் இருந்துவிட்டு, இப்ப பார்க்க வந்திருக்கிறீர்.. நீர் போனதற்குப் பிறகு எவ்வளவு மாற்றங்கள் நடந்துபோச்சு...

உம்மை மாதிரி பலர் வெளிநாட்டுக்குப் போட்டினம். சிலர் மண்டையைப் போட்டுவிட்டினம். சிலதுகள் கஸ்ரப் படுதுகள். வெளிநாட்டிலை சொந்தக்காரர் இருக்கிறவைக்குப் பரவாயில்லை. மற்றதுகள் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருக்கினம். உங்கடை ஆக்களும் பல பேர் போய்ச் சேர்ந்திட்டினம். என்ன! கண்ணுக்குள்ளை ஏதோ விழுந்து போச்சோ... கண்ணைத் துடையும்... சரி கவலைப் படாதையும். என்னை விடும். நான் வாழ்ந்து முடித்தவன். என்ரை காலம் முடிஞ்சிது. இனி உமது மண்ணை உமது மக்களை, உமது மொழியை, உமது கலாச்சாரத்தைக் கவனிக்க வேணும்! அந்த நம்பிக்கையில் தான் இந்தச் சனம் வாழுது.

நீர் போன சமயத்திலை நான்... செழிப்பாகத்தான் இருந்த னான், நீர் போய் கிட்டத்தட்ட நாப்பது வருசம் இருக்கு மெல்லே! எத்தினை வருசமாப் போச்சு. அப்ப மண்ணும் சிறப்பாக, இருந்தது. மக்களும் கலகலப்போடை இருந்தார்கள், கலகலப்பு எண்ட உடனை உங்கடை ஞாபகம்தான் வருகுது! அண்டைக்கு எனக்குப் பக்கத்திலை நிண்டுதான் நீங்கள் கலகலப்புச் சஞ்சிகைக்கு யோசனை செய்தது, அதோட திட்டம் போட்டது, யோசித்து எழுதியது, இப்ப மாதிரிக் கிடக்கு. உங்கடை கதைகளைக் கேட்டு நானே சிரித்திருக் கிறேன். அது ஒரு காலம் தம்பி. அந்தக் காலத்திலை, வைரவப் பிள்ளை அப்பாவுடைய காலிங்கன் தியேட்டரிலை போடுற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டைக்கேட்டு என்னுடைய கிளைகளும், இலைகளும் மெய்மறந்து ஆடியிருக்குதெண்டால் பாருமன்... அதுவும் "டிங்கிரி டிங்காலே மீனாட்சி" பாட்டைக் கேட்டால் சும்மா துள்ள வேணும்போல இருக்கும்.

இதிலை பகிடி என்னெண்டால் காரைக்காலிலை அடிக்கிற பறைமேளத்தைக் கேட்டு நானே பயந்திருக்கிறன். பத்தாதற்கு இரவு ஒன்பது மணிக்கு ஆசுப்பத்திரியிலை அடிக்கிற மணிச் சத்தத்துக்கு நாய்ப் பிள்ளையள் எனக்கடியிலை நின்டு ஊளை யிடுவினம். அதுகளுக்கே பயந்த நான் சண்டைக் காலத்திலை எவ்வளவு பயங்கரமான நிகழ்வுகளை பார்த்திருக்கிறேன்! பல அநியாயங்களை, கொடுமைகளை, பார்த்தபோது நானே என்னுடைய பாட்டுக்கு முறிந்து விழுந்து என் உயிரை மாய்த்திருக்கலாம் என்று நினைத்ததுண்டு! அவ்வளவு கொடுமை ராசா. இந்த மண்ணின் மக்கள் பட்ட கஸ்ரத்துக்கு ஒரு நாள் விடிவு வரும், அதைப் பார்க்க வேணும் என்ற ஆசையோடு நான் இருந்தனான். நான் பார்த்து வளர்ந்த உம்மைப்போன்றஎத்தனையோஉறவுகள்வெளிநாடுகளுக்குப் போய் குடும்பமாகப் பெருகி, பெண்சாதி, பிள்ளை குட்டி களுடன் வருவதை பார்க்க வேண்டும் என்ற ஆசையுடன் இருந்தனான். பலர் வந்தார்கள், போனார்கள், ஆனால் என்னைப் பெரிதாக நினைத்து எவரும் கண்டுகொள்ள வில்லை. பரவாயில்லை! நான் வெறும் மரம்தானே! சீனிப்புளி எண்டாலும் என்ன, கையிலை நக்கி தேத்தண்ணி யோடை குடிக்கவா முடியும்? "ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது" என்று பஞ்சவர்ணக்கா பாடம் சொல்லிக் கொடுத்தது இன்றும் ஞாபகம் இருக்குது.

அப்ப, எப்படி இருந்த எங்கட ஊர், நீர் எல்லாம் மறந்திருப் பீர். விடியப்பறம் நாலு பக்கமும் இருக்கிற கோயில்களிலை இருந்து மணியோசை ஒலிக்க, அக்கம்பக்க வீடுகளில் இருந்து நாதஸ்வரம், தவில், மிருதங்கம், வயலின், சதங்கை பயிற்சிகளின் மங்களகரமான ஓசைகள் மிதக்க, கோண்டாவில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு இணுவிலை நோக்கிவரும் மெயில் வண்டி யின் சத்தம் கேட்க, பரமலிங்கம் கடையிலை தேநீர் அடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றும் சத்தம் ஒத்துப்பாட, மாட்டுவண்டிகள் தெருவில் அசைய, சந்தைக்குப் போகும் மக்கள் அவசர அவசரமாக நடக்க, மகேசன்கடையிலை இருந்து பொங்கும்பூம்புனல்கதற, தோட்டத்துக்குப் போறவ தலையிலை கடகமும், கையில் மாடும் கொண்டுபோக, பூப்பறித்துக் கொண்டு கொக்குத்தடியோடு கூடையில் பூக்கொண்டு சின்ன ஐயர் சைக்கிளில் வீடு வீடாகப் போக தோசை, இடியப்பம், பாண், பால் வாங்கிக் கொண்டு பிள்ளைகள் போக, மலரும் காலைப்பொழுதை நினைத்து நான் பெருமூச்சு விடாத நாளே இல்லை. அந்த நாட்கள் இனி எங்கை தம்பி? ஒண்டு சொல்லுறன் தம்பி, அப்பப்ப அதுகளை இரசிக்க வேணும். அனுபவித்துச் சந்தோசப்பட வேணும். பல்லு விழுந்தபிறகு எலும்புக்கு ஆசைப்படலாமே! நீர் அந்தக் காலத்திலை எப்படி எல்லாம் தலைமுடியை வைச்சிருந்தனீர். இப்ப பாரும் உம்முடைய கோலத்தை! பேனே சறுக்கி விளையாடலாம் போல கிடக்கு. எப்படி இருந்த நீர் இப்படியாகிப் போனீர்? எல்லாம் தலையெழுத்து.

இந்தப்பக்கம்பாரும், இந்தப்பள்ளிக்கூடத்தைத் தெரியுதோ? இப்ப அதன் பெயர் இணுவில் மத்திய கல்லூரி. அண்டைக்கு இது வேதப்பள்ளிக்கூடம், அமெரிக்கன் மிசன் எண்டும் சொல்லுறவை. கிறிஸ்தவ வேதத்தைப் பரப்ப வந்தவர்கள் பள்ளிக்கூடம், தேவாலயம், ஆசுபத்திரி போன்றவற்றை நிர்மாணித்து மக்களை கவர்ந்துகொள்ளத் தலைகீழா நின்டு பாத்தினம். ஆனால் இந்தச் செம்பாட்டாரிட்டை அவையின்ரை திருகுதாளம் ஒண்டும் சரிவரேல்லை. தம்பி! இணுவில் ஒரு புனிதமான பூமி. பல ஆலயங்கள் சூழப்பட்டு, சித்தர்களும், சமயப் பெரியார்களும், அறிஞர்களும், கலைஞர்களும் வாழ்ந்து திரிந்த மண்! சும்மா விளையாட்டே. இந்த மண்ணிலை பிறந்தவை இப்ப எவ்வளவு பட்டம் பதவியோடை இந்த ஊரிலை மட்டுமல்ல வெளிநாடுகளிலும் சிறப்பாக இருக்கினம். உமக்குத் தெரியும்தானே!

இணுவில் எண்டால் "இணையிலி" இணையில்லாத ஊர் எண்டு எங்கட விதானையார் சிவலிங்கம் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். ஊருக்குப் போகேக்கை ஒரு புத்தகம் வாங்கிக்கொண்டு போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கடை ஆறு திருமுருகன் ஒரு சுவாமிக் கதை சொன்னா ரெண்டால் விடிய விடியக் கேட்டுக் கொண்டிருக்கலாமாம். அண்டைக்கு அவுஸ்திரேலியாவிலை இருந்து வந்தவை ஆருக்கோ சொல்லிக்கொண்டு போனவை. எங்கடை அருமை பெருமை எங்களுக்குத் தெரியேல்லை. வெளிநாட்டுக் காரருக்குத் தெரியுது. வேதப்பள்ளிக்கூடத்தப் பற்றி எல்லே சொல்லிக் கொண்டிருந்தனான். அந்தக் காலகட்டத்திலை விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார் களே தவிர இந்த மண்ணில் பிறந்த எவரும் மதம் மாறவில்லை! இதால்தானோ என்னவோ, "இலந்தை முள்ளைத் திருத் தினாலும் இணுவிலாரைத் திருத்த முடியாது" என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் ஒன்று தம்பி, இந்த மண்ணிலை பிறந்தவை மதம் மாறவில்லையே தவிர, கிறிஸ்தவ மதத்தை வெறுக்கேல்லை. இது இணுவிலாற்றை பண்பாடு தம்பி. எங்கட இந்து மதம் மற்ற மதங்களைப் போல எவரையும் மதம் மாறச் சொல்வதில்லை, செய்வதில்லை. பலவிதமான சலுகைகளைக் கொடுத்து மக்களின் பலவீனத்தை புரிந்து கொண்டு பலரை மதம் மாற்றியிருக்கிறார்கள்.

இந்தப் பாடசாலையிலை படிப்பித்த ஆசிரியர்கள், பத்தினிப்பிள்ளை அக்காவும், ஆசீர்வாதம் ரீச்சர், வில்லியம் ரீச்சர் போன்றவைதான் கிறிஸ்தவர்கள். மற்ற ஆசிரியர்கள் அனைவரும் சைவர்கள்தான். இந்தப் பள்ளிக்கூடத்திலை படித்த எத்தனையோ பிள்ளைகள் இண்டைக்கு உலக மெல்லாம் பரந்து, சிறந்து இருக்கினம் என்பதைக் கேட்கிற போது எனக்கு எவ்வளவோ சந்தோசமா இருக்கு!

இப்படி இணுவிலுக்குப் பெயர் வாங்கித் தந்ததோடு, பல சிறந்த மாணவர்களை உருவாக்கித் தந்த நடராசா வாத்தியார், பஞ்சவர்ணக்கா ரீச்சர். கந்தசாமி மாஸ்டர், சோதிப்பெருமாள் வாத்தியார், இப்படிப் பல ஆசிரியர்களை எப்படி மறக்க முடியும்! அந்த ஆசிரியர்களை மறந்தாலும் அவர்கள் தந்த அடி, கிள்ளு, குட்டு மறந்திருக்கமாட்டீர் இல்லையே. பிள்ளைகள் வலியிலை கத்திறது என் காதில் விழாமலில்லை. அறிவுள்ளவர்களாக வரவேண்டுமென்றால் அடிவாங்கித்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்க வேண்டும் என்று நான் நினைத்துக் கொள்வேன்! "அடியாது மாடு பணியாது" என்று வாத்திமார் சொல்லு வதையும் கேட்டிருக்கிறன்.

என்ன இருந்தாலும் நான் ஒரு மரம்தானே! "ஏன்டா மரம் மாதிரி நிக்கிறாய்?" எண்டு ஏழாலை வாத்தியார் கத்துவது இப்ப கேட்டது போல இருக்கிது. அது என்னவோ தெரியேல்லை தம்பி இணுவிலிலை இருந்த, இருக்கிற மாதிரி ஆசிரியர்கள் இந்த உலகத்திலை எங்கையும் இல்லையெண்டு சொல்லலாம். ஒவ்வொரு ஒழுங்கைக்குள்ளும் ஒரு வாத்தியார் இருப்பினம். திரும்பிற இடமெல்லாம் வாத்தி மார்தான். அதனாலைதான் இந்த மண்ணிலை பிறந்த பிள்ளைகள் எல்லாம் உலகமெங்கும் உயர்ந்து இருக்கினம். இதுக்கெல்லாம் காரணம் எங்கடை வாத்திமார்தானே. ஆசிரியர் சபா. ஆனந்தர், பண்டிதர் திருநாவுக்கரசர், வைத்திலிங்கச் சட்டம்பியார், உபாத்தியார், சதாசிவச் சட்டம்பியார், பெரிய தம்பி உபாத்தியார், நடராசா வாத்தியார், கார்த்திகேசு வாத்தியார், அருளம்பலம் ஆசிரியர், இராசதுரை வாத்தியார், பதஞ்சலி வாத்தியார், அம்பிகைபாகன் மாஸ்ரர், தேவன் மாஸ்ரர், சிவபாக்கியம் ரீச்சர், புவிநாயக்கா ரீச்சர், சண்முகவடிவேலு ரீச்சர், இரத்தினக்கா ரீச்சர் இப்படி கல்வி அறிவுபெற்ற பல ஆசிரியர்கள் இந்த மண்ணை அலங்கரித்தார்கள். இவர்களை உமக்குத் தெரியும். இதைவிட உங்கடை கடவுள், மகேஸ்வரன், சண்முகலிங்கம் கணேசமூர்த்தி, சண்முகேஸ்வரன், சர்வேஸ் வரன், சிதம்பரேஸ்வரன், கமலேஸ்வரன், ஸ்கந்தமூர்த்தி போன் றோரும் இன்னும் பல ஆசிரியர்களும், ஆசிரியைகளும் இணுவிலுக்கு புகழ் தருபவர்கள். அதுமட்டுமல்ல பேராசிரி யர்கள் விக்னேஸ்வரன், மகேஸ்வரன், கணேசலிங்கம், தேவராசா இப்படி எவ்வளவு பேர் இணுவில் மண்ணை விளங்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

வேதப்பள்ளிக்கூடத்தைப் பற்றி நினைக்கும்போது ஒரு அருமையான நிகழ்வு என் ஞாபகத்திற்கு வருகிறது! காந்தித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா, அவரை உமக்குத் தெரியும்தானே? அந்த மகாத்மா காந்தி, அந்தக்காலத்திலைஇந்தப்பள்ளிக்கூடத்துக்குவந்திருக் கிறார்! என்ன விறைச்சுப் போனீரோ? இல்லை ஆச்சர்யமா இருக்குதோ? உண்மைதான் தம்பி. அந்தச் சமயம் நான் பூத்துக் காய்த்துக் குலுங்கி இருந்தனான். மகாத்மாவைப் பார்த்த சந்தோசத்தில் கிளைகளை ஆட்டி மலர்களைத் தூவினது இப்பவும் என் நினைவிலை நிக்குது. மகாத்மாகாந்தி போராடி இந்தியர்களுக்கு விடுதலை கிடைத்தது, எங்கடை ஆக்களும் போராடினதுதான். ஆனால் கிடைத்தது அடி, உதை, சூடு. காந்தி சத்தியாக்கிரகம் செய்தது வெள்ளையனுக்கு புரிந்தது. எங்கடை திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்டது இன்னும்தான் இவங்களுக்குப் புரியவில்லை. அது எங்கடை ஆக்களுக்கே விளங்கவில்லையாம்.

என்ன தம்பி, உம்மைப் போட்டு அறுக்கிறன் போல கிடக்குது. என்ன மூத்திரம் அடிக்கப் போறீரோ... சொல்ல வேண்டியதுதானே! இதிலை என்ன வெக்கம்? முந்தி எண் டால் உதிலை சரிக்கட்டச் சொல்லியிருப்பன். நேத்தைக்கும் ஒரு நாய்க்குட்டி எனக்கு மேலை கும்பாபிசேகம் செய்து போட்டுப் போட்டுது... சரி நீர் போட்டுவாரும்... நான் எங்கை போப்போறன். சரி வாரும்!"

தம்பி, சரிக்கட்டிப் போட்டீரோ... பரவாயில்லை! ஆத்திரத்தை அடக்கலாம் மற்றதை அடக்க முடியாது எண்டு சொல்லுறவை...

பிறகு தம்பி,

அந்தக் காலத்திலை இந்த ஒழுங்கையாலை எங்கடை சிவகாமி அம்மன் வேட்டைத் திருவிழாவிற்கு போறபோது எவ்வளவு அற்புதமாக இருக்கும் எண்டு நினைக்கிறீர? விளக்கு வெளிச்சத்திலை குரங்காட்டம், கரகாட்டம், குதிரையாட்டம் எல்லாத்தோடையும் தியாகராசா சாமியாரோட பாட்டு வேறை. கூத்துக்காறர் இஞ்சை பக்கத்திலை வந்து ஒரு பாட்டம் ஆடி விட்டுத்தான் போவினம். சுண்டல், அவல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இது என்டு கொட்டிவிட்டுப் போவார்கள். மிச்சம் மீதியைத் திண்டுவிட்டு எறும்புகள் எனக்கு மேலை ஊர்ந்து, உபத்திரம் தந்தது ஆருக்குத் தெரியும்.

பல்லப்ப வயிரவர் கோயிலில் இருந்து வாற காவடி ஆட்டக் காரர்கள் என் நிழலில் நின்று ஒரு ஆட்டம் ஆடுவார்கள். எனக்கே துள்ள வேணும் போல இருக்கும். ஒரு தடவை, தட்சணாமூர்த்தி, சின்னராசா, பழனிவேல், இன்னும் பலர் சேர்ந்து ஒரு தவில் சமா வைத்தார்கள். அவர்கள் அடித்த அடியிலை என்னை அறியாமலே பல வயதுபோன இலைகள் விழுந்து போச்சுதென்றால் பாருங்கோவன்.

தவில், நாதஸ்வரம் எண்டால் இணுவிலுக்கு ஒரு மதிப்புத் தான். லயஞான குபேர பூபதி தட்சணாமூர்த்தி எண்டால் கோடை இடி போல முழங்கும். அவர் எங்கட ஊர்தானே. அடி இணுவில்தானே. இப்ப அப்படி இப்படி என்று சொல்கிறார்கள். எங்கட இணுவிலையே பிச்சுப் பிடுங் கிறாங்கள். தெரியுமே, இராமநாதன் கல்லூரி இணுவிலைச் சேர்ந்ததுதானே. அதைப் பிரிச்சு சுன்னாகத்தோடை சேர்த்துப் போட்டினம். வடகிழக்காலை பிரிச்சு நல்லூருக்குச் சேர்த்துப் போட்டினம். கிழக்காலை கருணாகரப்பிள்ளைய காரைக்கால் எல்லாத்தையும் பிரிச்சுப் போடுவினம். இதையெல்லாம் ஆர் கேட்கிறது?

தம்பி மணி அடித்துக்கொண்டு அப்பப்ப ஐஸ்க்ரீம், கரம் சுண்டல், தும்புமுட்டாஸ் விற்கிறவர்கள் இந்த ஒழுங்கை யாலைபோகும்போது வாயூறும்! என் புளியம்பழத்தை நினைத் துச் சப்புத்தட்டிக் கொள்வேன். வாயில்லாச் சீவன்தானே!

எத்தனை அரசியல் கூட்டங்கள், எத்தனை ஊர்வலங்களைப் பார்த்திருக்கிறன் தெரியுமே? புண்ணியத்தின்ரை விளையாட் டுப்போட்டி நடக்கும். ஓட்டப்போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி எண்டு ஒரே விளையாட்டுத்தான். மாறுவேசங்கள் போட்டுக்கொண்டு பெடியங்கள் வந்தது பெரும் சிரிப்புத் தான். கனக்க ஏன் தம்பி, முதல் முதலாக இரட்டைத் தட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் வண்டி இங்கை வரேக்கை பார்த்தவர்களில் நானும் ஒருவன். "இப்போது இரட்டைத்தட்டு பஸ் சீனிப்புளியடியில் வந்துகொண்டிருக்கிறது" என்று எங்கட தம்புர்சுப்பிரமணியம் பஸ்சுக்கு முன்னாலை ஒலி பெருக்கியில் அறிவித்துக்கொண்டு வரேக்கை எனக்கு எவ்வளவு பெருமையாக இருந்தது. இந்த ஒழுங்கையாலை எத்தினை பொம்பிளை மாப்பிளை ஊர்வலம் என் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு போயிருப்பினம்.

இந்தப் பெடியங்கள் தொல்லை தாங்கேலாது, பழம் பழுத்துதோ இல்லையோ கல்லாலை எறிஞ்சு விடுவாங்கள். அப்பப்போ என்னிலை அங்கை இங்கை பட்டு நோகும். பாவங்கள் எங்கடை பொடியங்கள்தானே என்டு வலியைத் தாங்கிக் கொள்ளுவன். கல்லாலை எறியிறாங்கள் எண்டு நான் காய்க்காமல் இருக்கிறதே... காய்ச்சுத் தள்ளுறதுதான்.

சக்கர வியாதியுள்ளவ சீனிப்புளி சாப்பிடக்கூடாது என்று சொல்லுறவையும் இருப்பினம்.

உந்த ஆஸ்பத்திரியிலை எங்கையிருந்து வந்தெல்லாமோ எத்தினையைப் பெத்துத் தள்ளிப்போட்டுப் போயிரிக்கினம் தெரியுமே? தம்பி, இணுவில் ஆசுப்பத்திரியைப் பற்றிச்சொல்ல வேணும். அந்தக் காலத்திலை பெரிய பேர் தம்பி. எங்கிருந் தெல்லாமோ வந்து பெத்துக்கொண்டு போவினம். கெங்கம்மா எண்டு ஒரு டாக்குத்தர் இருந்தவ. அவவின்ரை கைராசி, சும்மா சொல்லக்கூடாது. சரியான கெட்டிக்காரி. மெய்யே தம்பி? தலைவரும் உங்கைதானாம் பிறந்தவர். தெரியுமே?

தம்பி நீயும் உங்கைதானே பிறந்தனி இல்லையே! உமக்கு இப்ப என்ன குறை. தலைமயிர்தான் கொட்டிப்போச்சுது. அது சரி, இப்ப உமக்கென்ன சம்பந்தமே பேசப் போயினம்? பிறகு தம்பி, ஆஸ்பத்திரியிலை குடும்பத்தோடை வந்து தங்கி யிருந்து சமைச்சுச் சாப்பிட்டு போறதுக்கு வசதியா அந்தக் காலத்திலை இருந்தது. ஆனால் ஒண்டு, ஆம்பிள்ளைப் பிள்ளையள் உள்ளை இரவிலை தங்கேலாது. இரவு ஒன்பது மணிக்கு, மணியடிக்க கதவு சாத்திப்போடுவினம். ஆம்பிளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தங்கிறதுக்கு வசதியாக முன்னாலே ஒழுங்கு செய்திருந்தவை. உதாலை பரமலிங்கண்ணை கடைக் காரருக்கும் நல்ல வியாபாரம். அமெரிக்கன் மிசன்காரர் எல்லாம் வசதியாத்தான் செய்தவங்கள். இப்ப பாருங்கோ ஆசுப்பத்திரி எப்பிடிக் கிடக்கெண்டு! இதையெல்லாம் யாருக்குச் சொல்றது.

எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு தம்பி. தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு விதம் விதமான ஊர்திகள் வரிசையாக யாழ்ப்பாணம் போனது உமக்குத் தெரியுமெல்லே. அது போகும்போது, எனக்கும் எல்லோரோடும் சேர்ந்து அந்த ஊர்வலத்திலை போகவேண்டும் போலவிருந்தது. ஆனால் மறுநாள்தான் தெரிஞ்சிது, நான் போகாமல் இருந்தது நல்ல தெண்டு. அண்டைக்குத்தானே, எங்கடை ஆக்களை உவன்கள் சரிக்கட்டினது. என்ன செய்யிறது? தமிழற்றை தலையெழுத்து அப்பிடி இருக்குது.

எங்கடை தந்தை செல்வாவின் இறுதி ஊர்வலத்திற்கு இருந்த கூட்டம் போல நான் எண்டைக்கும் பார்த்ததில்லை. அதுவும் என்ரை நிழலிலை கூடிவந்த பெண்கள், சிறுவர்கள் கண் கலங்க நின்று பார்த்தபோது எனக்கே அழுகை வந்திட்டுது.

ஊர் புதினங்கள் எல்லாம் எப்படித் தெரியுமெண்டு நினைப் பீர். போறவை வாறவை என்னுடைய நிழலிலை நிண்டுதானே ஊர் புதினங்கள் கதைக்கிறவை. வம்பு தும்புகளும் பேசுவினம், எனக்கேன் பிரச்சினை என்டு பேசாமல் ஒரு கிளையாலை கேட்டு மறுகிளையாலை விட்டுடுவன்.

என்ரை கிளைகளிலை எத்தினை குருவிகள், காகங்கள் கூடு கட்டி வாழ்ந்தவை. என்னுடம்பிலை அணிலுகள் ஓடிப்பிடித்து விளையாடும்போது சந்தோசமாக இருக்கும். ஆனால், இந்த நாய்கள் அப்பப்ப வந்து காலைத் தூக்கி என்னுடைய அடியைக் கழுவுவினம். என்ன செய்யிறது, அதுகளுக்கெண்டு கக்கூசே கட்ட முடியும்? பாவங்கள்தானே...? இப்ப அதுகள் எல்லாம் எங்கை அகதிகளாகப் போச்சுதுகளோ? என்ன கஸ்டப்படுதுகளோ தெரியேல்லை. தமிழ் நாய்கள் எண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுகளையும் சுட்டுப்போட்டாங்களோ தெரியேல்லை?

என்ரை நிழலிலை வந்து இருந்தவர்களில் குறிப்பிட வேண்டியவை சிலர் இருக்கினம். நாய்க்குட்டிகளுடன் திரியும் ஒரு பெண். என்ரை நிழலிலை இருந்து தன்னுடன் கொண்டு திரியும் நாய்க்குட்டிகளுக்கு சோறு குடுக்கும்போது பெரும் கவலையாகத்தான் இருக்கும். சின்னப்பெடியள் விடுவாங்களே. "நாய்க்குட்டி விசரி" என்டு கத்திப்போட்டு ஓடிவிடுவாங்கள்.

இன்னொருத்தர் தனக்குத்தானே பேசிக்கொள்ளும் அப்புத்துரை அண்ணை. குடைச் சாமியாரை நினைவிருக்கெல்லே...? எத்தினை பேர் அவரிட்டை தூசணத்தாலை ஏச்சு வாங்கியிருப்பினம். சிலவேளை அங்கையும் இங்கையுமா சுத்திக் கொண்டிருப்பர். அவையெல்லாம் பெரிய சித்தர்மார் தம்பி. விசரர் மாதிரித்தான் தெரிவினம். ஆனால் சரியான விசயக்காரர். அவர்களை எல்லாம் நீர் இப்போது மறந்திருப்பீர்.

பெடியங்கள், எனக்குக் கீழை நிண்டு சண்டை பிடிப்பங்கள். தாச்சிவிளையாடுவங்கள். அவங்கள் பந்தடிக்கேக்கை எனக்கும் இடைக்கிடை அடிவிழும். வாழ்க்கையிலை அதுகள் எவ்வளவு அடிகளை தாங்கப் போதுகளோ என்று நான் அந்த வலியைத் தாங்கிக் கொள்ளுவன். நான் காய்க்கிறதும் எனக்குக் கீழை பள்ளிக்கூடப் பிள்ளையளைப் பார்க்க பெடியங்கள் காயிறதும்...! பார்க்க எனக்கு ஒரே சிரிப்பாய் இருக்கும். நீரும் காஞ்சிருப்பீர் இல்லையே...! நீர் இந்தப் பக்கமாய்க் காய்ச்சிருந்தாலும் எங்கடை பக்கத்திலைதானே ஆய்ஞ்சிருக்கிறீர். விளங்குதெல்லே. உம்முடைய மனிசி எங்கடை பக்கம்தானே. அப்பெல்லாம் பள்ளிக்கூடப் பிள்ளைகள் முழுப் பாவாடை கட்டிக்கொண்டு போகிறதை பார்த்து இரசிக்கிறது. காலம் மாறிப்போச்சு. இப்ப கண்டபடி உடுப்புகளை போட்டுக்கொண்டு திரியிறதைப் பார்த்து வெட்கப்பட வேண்டிக்கிடக்கு! நாரியைக் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால்தானாம் நாகரீகம். எல்லாம் கலிகாலம். உமக்கெல்லாம் பழகியிருக்கும். மெய்யே தம்பி. வெளிநாட்டிலை சில பேர் என்னைப் போல நிர்வாணமாய்த் திரிவினமாம். அப்பிடியே! வெளிநாடெண்டால் எல்லாத்தையும் வெளியிலை காட்டிக்கொண்டு திரியிறதாக்கும்!

தம்பி, என்னுடைய கதையை முடிக்கலாம் எண்டால். மனம் கேக்குதில்லை. ஏதோ என்னுடைய குறையை உம்முட்டைச் சொல்லி ஆற வேணும் போலாகிடக்கு. எங்கை விட்டனான்... ஓ... நீங்கள் எல்லாம் கோழையள் மாதிரி வெளிநாடுகளுக்கு ஓடி விட்டியள். நாங்கள் பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமே...? நாசமாப் போனவங்கள் சண்டை வந்தபோது ஊரடங்குச் சட்டத்தைப் போட்டுவிட்டாங்கள். இரவிலை பயமாத்தான் இருக்கும். இராணுவக்காரங்கள் வாறாங்கள் எண்டால் நானும் இலைகளையும், கிளைகளையும் ஆட்டாமல் நித்திரை போல இருப்பன். அவங்கள் செய்த அநியாயங்கள் எண்டால் சொல்லேலாது. ஒருக்கா என்னுடைய கிளையிலை ஆரோ பெடியங்கள் ஒரு கறுப்புக்கொடியைக் கட்டிப்போட்டு போட்டாங்கள். அதாலை வந்த இராணுவக்காரங்கள் அந்த வீதியாலை வந்த இரண்டு பெடியங்களுக்கு போட்டு அடி அடி என்டு அடிச்சுப்போட்டு வானிலை தூக்கிப்போட்டுக் கொண்டு போட்டாங்கள். உந்த இந்தியா தலைப்பாக் காரங்கள் எத்தினை பேரைச் சுட்டுக்கொண்டவங்கள். அதிலை எனக்கு தெரிஞ்ச அயலிலை இருந்தவை எத்தனை பேர்!

தம்பி, இந்த மண்ணை ஆண்டவர்கள் எத்தனையோ பேர். எங்கிருந்தெல்லாமோ வந்து ஆண்டார்கள். என்னென்னவோ புரியாத மொழி எல்லாம் பேசினார்கள். ஆனால் தம்பி என்மீது ஏறி எங்கடை தமிழ்க்கொடியை கட்டித் தொங்கவிட்ட உடனை என்னை அறியாமல் எனக்குள்ளே ஒரு வீரம் சுர்ரென்று பொங்கிக்கொண்டு வரும் தம்பி. அந்த உணர்வை எப்படி என்னென்டு சொல்ல முடியாது. அது இந்த மண்ணுக்குரிய சாமான் தம்பி!

இந்தச் செம்பாட்டு மண் சாதாரணமானதல்ல! இதைப் புனித பூமி எண்டும் சொல்லுறவை. ஏன் தெரியுமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மண்ணிலைதான். பெரிய சந்நியாசியார், சச்சிதானந்த சாமியார், காரைக்கால் சாமியார், வேலாயுதச் சாமியார், சண்முகம் சாமியார், செல்லையாச் சாமியார் பரமர் சாமிகள், சாத்திரம்மா, தியாகராஜா சுவாமிகள், வடிவேலு சுவாமியார், ஆறுமுகம் சாமியார், சோதிலிங்க சாமிகள் போன்ற பெரியோர்களோடு, இன்றைய செஞ்சொற் செல்வர் திருமுருகன் வரை ஆத்மீக வழியில் மேலோங்கி மக்களை மேன்மை கொள்ளச் செய்தவர்கள். இந்த மண்ணிலை கால் வைச்ச உடனை உம்மை அறியாமல் ஒரு புனிதமாக உணர்வு ஏற்படுவதை கண்டிருப்பீர். வெளிநாட்டிலை இருந்து வாறவை எல்லோரும் அப்பிடிக் கூறுவதைக் கேட்டிருக் கிறன்.

தம்பி, உமக்கு டொக்டர் பாலாவைத் தெரியுமெல்லே, சும்மா சொல்லப்படாது தம்பி. ஒரு மனிசன் பிறந்தால் அவரைப்போல பிறக்கவேணும் வாழவேணும். அவர் செய்யிற சேவை இருக்கே. அதுக்கு அவரை பூப்போட்டுக் கும்பிட வேணும். அதுவும் நாசமாப்போன சண்டை நடந்த காலத்திலை அந்த மனிசன் செய்த வைத்தியத்தாலைதான் எத்தினையோ பேர் இப்பவும் உசிராய்த் திரியினம். மக்கள் சேவை மகேஸ்வரன் சேவை எண்டு சொல்லுறவை. ஆனால் அந்த நேரத்திலை டொக்டர் பாலாதான் அந்தக் கடவுள் மகேஸ்வரனாயிருந்து கைதூக்கி விட்டவர். உங்கினேக்கை கேட்டுப் பாரும். அந்த நேரம் நீர் இங்கை இருக்கிற காலத்திலை, "தம்பி கராச்"சிலை கார் கொண்டுபோய் திருத்த விடுற மாதிரி, "கீயாவா" கடையிலை மோட்டார்சைக்கிள் விடுற மாதிரி, "ஜெயத்தின்ரை சைக்கிள்" கடையிலை சையிக்கிளை கொண்டுபோய் திருத்திற மாதிரி எங்கடை ஆக்கள் தேகத்திலை ஏதேன் கோளாறெண்டால் டொக்டர் பாலாவிட்டைத்தானே போறது. சுருண்டு கிடந்து விட்டு வெறும் போத்திலோடை டொக்டர் பாலாவிட்டை போயிட்டு கலர் மருந்தோடை திரும்பி வரேக்கையே தெரியும் அவற்றை பாதி நோய் பறந்திருக்குமெண்டு டொக்டற்ரை கைராசி அப்பிடி. அவர் சிரிச்சுக்கொண்டு ஸ்டெதஸ்கோப் பாலை இரத்தத்துடிப்புப் பாக்கிறதும் சிரிச்சுக்கொண்டு பேசிக்கொண்டு வைத்தியம் செய்யிறதும் பார்க்கவே சந்தோச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக இருக்கும். இவரைப்போல ஊருக்கு இரண்டு டொக்டர் இருந்தினம் எண்டால் நோய் நொடி பறந்து போயிடும்.

அது மட்டுமில்லை தம்பி! எத்தினையோ கலைஞர்களை வளர்த்து, வாழவைத்து பெருமைகொள்ள வைத்த மண்ணும் இணுவில்தான். வீரமணி ஐயர், தவில், தட்சணாமூர்த்தி, சின்னராசா, கோவிந்தசாமி, சுந்தரமூர்த்தி, புண்ணியமூர்த்தி, ராமையா, பஞ்சாபகேசன், வயலின் ராதா, சின்ன மேளம் சரவணமுத்து மனைவி சந்திரா, வடிவேலு, பெரியதம்பி கந்தையா, கர்ணனாக நடிச்சு சிவாஜிகணேசனையே தூக்கி எறிஞ்ச பொலிஸ் சண்முகநாதன், இசைக்கலைஞர் கந்தையா அருட்சோதி, குந்தியாக நடிச்ச சிதம்பரேஸ்வரன் இப்பிடி எத்தினை பேர். கவிஞர் பஞ்சாட்சரத்தையும் அவரது மணியான கவிதைகளையும் மறக்க முடியாது. அவர் இப்ப கனடா விலையாம். உமக்கு கவிதை சொல்லித் தந்தது அவர்தானே! நல்ல மனிசன். அவர் தமிழையும்விடார், சுருட்டையும் விடார். நாட்டுப்பிரச்சினையாலே இப்பிடி எத்தினை சனம் பிறந்த மண்ணை விட்டிட்டு வெளிநாட்டுக்குப் போட்டினம். என்னதான் இருந்தாலும் இந்த மண்ணிலை பிறந்த பிள்ளைகள் இண்டைக்கு எங்கெல்லாமோ போய் சிறப்பாயிருக்கினம். அதைவிட இஞ்சை இண்டைக்கும் எத்தினையோ கலைஞர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள் சொந்த மண்ணிலை வாழ்ந்துகொண்டு இந்த மண்ணின்ரை பெருமையை விளங்க வைச்சுக் கொண்டிருக்கினம். அது இந்த மண்ணின்ரை ராசி. இந்த மண்ணிலை விளையிறப்பொருட்களும் மிகச்சிறப்பாக செழிப்பாக வளர்வது உமக்குத் தெரியும்.

பிறந்த மண்ணுக்கும், மக்களுக்கும் சேவை செய்வதே இந்த மண்ணுக்கு சிறப்பு, மக்கள் வாழ்விற்கு சிறப்பு. மரம்தானே என்டு நினைக்கக்கூடாது. பல கால அனுபவத்தோடு நான் வாழ்ந்து வீழ்ந்தவன் தம்பி. வெளிநாட்டுக்குப் போயுள்ள எல்லோரையும் பார்க்க எனக்கும் ஆசைதான். என்ன செய்யிறது? என்னையும் வெட்டி விழுத்திப் போட்டினம். அண்டைக்கு ஆரும் தண்ணீர்விட்டு என்னை வளர்க்கேல்லை. என்ரை பாட்டிலை எப்பிடியோ வளர்ந்திட்டன். இண்டைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்காகக் கண்ணீர்விடப் போறவையும் இல்லை! பிள்ளைகளின் படிப்பு வசதிக்காகத்தான் என்னை வெட்டியிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டன். வருங்கால சந்ததியினருக்காக, அவர்களின் வளர்ச்சிக்காக என் உயிரை கொடுத்திருக்கிறேன், என்று நினைக்க எனக்குப் பெருமையாக இருக்கிறது. எங்களுக்குள்ளே தங்கியிருக்கிறது. அறிவாலும், ஆற்றலாலும்தான் தலைநிமிர்ந்து உரிமையோடு சக மனிதர்களைப்போல வாழ முடியும். எங்களிடையே இருக்கின்ற சாதி, சமய, வேறுபாடுகளைக் களைந்து, நாம் ஒன்றாக இணைந்து வருங்காலத்தை எங்கள் வளரும் பயிர்களால் பிள்ளைகளை கல்வி முன்னே வைத்து உலக அரங்குகளில் அறிமுகப்படுத்த வேண்டியது உங்களைப்போன்றவர்களின் கடமையாகும்.

நான் ஒரு மரம்தானே!

சரி, நீர் மணிக்கூட்டை அடிக்கடி பார்க்கிறீர். உமக்கு நேரமாகிதுபோல கிடக்கு. பிந்திப்போனால், மனிசியிற்றை பேச்சு வாங்குவீர் போல இருக்கு. சரி போட்டு வாரும். எல்லாரையும் விசாரித்ததாக சொல்லும்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாவீரனின் தணியாத தாகம்

**மண்ணிலே** சிந்திய குருதியும், நாங்கள் விட்ட இறுதிமூச்சின்காற்றும், விதைகளான எங்களை முளைக்க வைத்து, உங்களால் பேணிக்கப்பட்டு முளைவிட்டு, பெரும் விருட்ஷமாக வளரும்என்ற நினைப்போடு மண்ணுக்குள், உக்கிப்போகாது, சிதைந்த தூபிகளுக் குள்ளே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அன்று ஒரு மாலைப்பொழுது, தாக்கப்பட்டு, தகர்க்கப் பட்டு, சிதைக்கப்பட்டு, சீர்குலைந்து காணப்பட்ட மாவீரர் கல்லறையைப் பார்த்து, மிகவும் வேதனையுடன் கண்ணீர் சொரிந்தபடி, எனது மௌன அஞ்சலியை, செலுத்திவிட்டு வழிந்த கண்ணீரை புறங்கையால் துடைத்தபடி திரும்பினேன்.

"அண்ணா" என்ற குரல் என்னை அழைத்தது. சுற்றும் முற்றும் பார்த்தேன். எவரும் அங்கில்லை. மீண்டும் "அண்ணா, என்னை மறந்துவிட்டீர்களா?" எனற குரல் சிதைந்து கிடந்த ஒரு சிறிய தூபியின் வழியாக என் காதில் உரசியது.

வெளிநாட்டில் இருந்து வந்திருக்கிறீர்கள் போலத் தெரிகிறது. பகைவனால் சிதைக்கப்பட்ட எங்களை புகைப்படம் எடுத்திருக்கிறீர்கள். அதைக் கொண்டு போய் முகநூலில் போடுவீர்கள். அதோடு சரி. உங்கள் கடமை முடிந்து விடும் இல்லையா?

கல்லறையில் இருந்து வந்த கணீர் குரல் காதில் ஆழமாக புகுந்து இதயத்தை ஊடுருவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சரி, உங்கள் நினைவுநாள் கொண்டாட்டங்கள் யாவும் முடிந்துவிட்டதா? உலகமெங்கும் மிக விமரிசையாக எங்கள் நினைவுநாள் நடைபெற்றதாக அறிந்தேன். அன்றைய தினமாவது எங்களை நினைக்கிறீர்களே! அது மனதிற்கு ஆறுதலாக இருக்கிறது. வருடா வருடம் இந்த நினைவு நாள் உங்களால் கடைப்பிடிப்பது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் சில விடயங்களை நினைத்து வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

அண்ணா, நான் ஒரு சராசரி மனிதன்தான். ஆனால் சாதாரண மான ஒரு தமிழன். என் பெயருக்கு முன்னாலோ பின்னாலோ எந்தவிதமான பட்டமோ, படிப்போ கிடையாது. பெருமை யாகக் கூறிக்கொள்ள எதுவுமே கிடையாது. இருந்தும் நான் ஒரு தமிழன். அதில் எனக்கு ஒரு பெருமை இருக்கத்தான் செய்கிறது. எடுத்துக்கொண்ட இலட்சியத்தில் இருந்து விலகாது, மண்ணினதும், மக்களினதும் விடுதலைக்காக ஒரு மாபெரும் சீரான கட்டுக்கோப்பான இயக்கத்தை சிறந்த ஆளுமையுடன் கட்டியெழுப்பிய ஒரு தலைவனின் வழி காட்டலில் பயணம் செய்த போராளி என்ற கர்வம் என் தலையை நிமிர வைக்கிறது.

தமிழனையும் அவன் வீரத்தையும் உலக அரங்கிலே அறிமுகம் செய்துவைத்து, எமக்கென ஒரு தனித்தமிழ் நாட்டை அமைத்துக்கொள்ள முடியும் என்று ஈழத்தை உருவாக்கி, நடைமுறைப்படுத்திக் காட்டிய ஒரு மாபெரும் இயக்கத்தில், அவரது வழிகாட்டலில் பலவித வெற்றிகளைக் குவித்து, போர் ஒன்றில் மார்பில் குண்டு துளைக்க, மண்ணில் குருதி சிந்தி, மரணத்தைச் சந்தித்து விடுதலைக்கு வித்தான வர்களில் நானும் ஒருவன் என்ற அடையாளத்தைத் தவிர எனக்கு வேறு எதுவுமே கிடையாது.

என்னோடு சேர்த்து நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்கள் மண்ணிலே விதைக்கப்பட்டுள்ளோம். உங்கள் இதயத்தில் பொறிக்கப்பட்டுள்ளோம். மண்ணிலே சிந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதியும் எங்கள் இறுதிமூச்சு சிந்திய காற்றும், விதைத்த விதைகளை முளைக்க வைத்து உங்கள் பராமரிப்பில் பேணிக்கப்பட்டு பெரும் விருட்ஷமாக வளரும் என்ற நினைப்போடு மண்ணுக்குள் உக்கிப்போகாது. சிதைந்த தூபிகளுக்குள்ளே உறங்காமல் உறங்கிக் கொண்டிருக் கிறோம்!

அண்ணா, உங்களைப்போல யாரையாவது பிடித்து, அம்மா வுடைய நகை நட்டை வித்து, வீடு வாசலை, அப்பாவுடைய சொத்துப்பத்தை வித்து, ஏஜண்டிட்டை பணத்தைக் கட்டி எப்படியோ வெளிநாடு சென்று, அகதி என்ற அந்தஸ்தோடு, வெளிநாட்டு மாப்பிள்ளை எண்டு நல்ல சீதனமும் வாங்கிக் கொண்டு, குடும்பத்தோடு சந்தோசமாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் என்னால் முடியவில்லை. என் மண்ணையும் மக்களையும் மட்டுமே என்னால் சிந்திக்க முடிந்தது. பிறந்த மண்ணில் அடிமைகளாக உரிமை இழந்து, உடமை இழந்தது. சுய கவுரவத்தை இழந்து, எவ்வளவு காலம் நமது இனம் வாழ்வது? நாம் அனுபவித்த கொடுமைதான் எவ்வளவு? இனக் கலவரத்தால் எத்தனை தடவை எமது இனம் அழிக்கப்பட்டது தெரியுமா?

ரியூசன் வகுப்பிற்குப் போய்விட்டு வந்துகொண்டிருந்த என் நண்பர்கள் நால்வரை துடிதுடிக்கச் சுட்டுக்கொன்றார்கள். வேலைக்குப் போய்விட்டு வந்த என் தகப்பனை வீதியில் நிறுத்தி அடித்துத் துன்புறுத்தி அநியாயமாகக் கொன்றார்கள். பள்ளிக்குப் போய்வந்த என் சகோதரியை இழுத்துச் சென்று வன்புணர்வு செய்து கொன்றார்கள். நீதி கேட்கச் சென்ற தாயின் வயிற்றில் எட்டி உதைத்தார்கள். பசியால் துடித்த ஒரு வீரனுக்கு சோறு கொடுத்தார்கள் என்பதற்காக பாட்டி ஒருத்தியை பகிரங்கமாக வதைத்துக் கொன்றார்கள். இவற்றை யெல்லாம் உங்களால் வெறும் சினிமாவாக மட்டும் பார்க்க முடிந்ததே தவிர, அந்தக் கொடுமைகளை என் போன்ற மரணித்த பல்லாயிரக்கணக்கான வீரர்களால் ஜீரணிக்க முடிய வில்லை. செய் அல்லது செத்துமடி என்பார்களே அதைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் செயற்படுத்திக்கொண்டேன். நாங்கள் போராட வேண்டும் என்ற வெறிகொண்டு களத்தில் குதித்தவர்கள் அல்ல. பொருள் வேண்டியோ, சுகபோகம் வேண்டியோ போராடவில்லை. ஒரு உயரிய இலட்சியத்திற்காக எம்மை அர்ப்பணித்தவர்கள். பல ஆண்டுகளாக அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, சுய கவுரவம் இழந்து, சுதந்திரத்தைப் பறி கொடுத்து, கொடுமைப்பட்டு வாழ்ந்த எமது இனத்தின் விடியலுக்காக விழித்தெழுந்தவர்கள். கொதித்தெழுந்து உயிரை அர்ப்பணித்தவர்கள்!

ஒரு விடயம் அண்ணா, எங்கள் கல்லறைகளை அவர்கள் சிதைத்தபோது நான் கண்கலங்கவில்லை. ஆனால் என் சகோதரி இன்று கிழிந்த பாவாடையுடன் கையேந்தி பிச்சை யெடுத்துக் கொண்டு நிற்கிறாளாம். என்னண்ணன் ஒருவன் மனைவி பிள்ளைகளை செல்லுக்கு இரையாக்கிவிட்டு பித்துப் பிடித்தவனாய் பஸ் தரிப்பு நிலையத்தில் அலைகின்றானாம். எத்தனையோ போராளிகளின் பசி தீர்த்த என் தாய், வீடுவீடாக வேலை தேடி அலைகின்றாளாம். குண்டுபட்டு கால் இழந்த என் தம்பி ஒரு வேளை சோற்றுக்கு அலைகின்றானாம். அவன் கைத்தடியைத் தவிர வேறு உதவியே அவனுக்கு கிடையாதாம்.

என் அக்காவிற்கு முப்பத்தைந்து வயதாகிறது. போராளியின் சகோதரி என்பதால் அவளைத் திருமணம் செய்ய எவரும் முன் வரவில்லையாம். என் தங்கைக்கு வீட்டுவேலை கொடுப் பதற்கே தயங்குகிறார்களாம். ஊனத்தைத் தவிர சீதனமாய் தருவதற்கு எதுவுமே இல்லை என்பதனால் எத்தனையோ பெண்கள் வாலிபத்தை இழந்து வயோதிபத்தை எட்டிக் கொண்டிருக்கிறார்களாம். இப்படி ஒன்றா இரண்டா? எத்தனை உறவுகள் வாழ வழியின்றித் தவிக்கிறார்கள். இவற்றை எல்லாம் கண்டும் கேட்டும் நான் கல்லறைக்குள் இருந்து கதறுவது எப்படி உங்களுக்குக் கேட்கப்போகிறது? கும்மாளம் போடும் குத்துப்பாட்டு இசையில் இலயித்துப் போயிருக்கும் உங்கள் செவிகளில் எங்கள் கதறல் எப்படி எட்டப் போகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழரசமும், குடிவகையும் உங்கள் தாகத்தைத் தீர்க்கும்போது எங்கள் தணியாத தாகம் எப்படி தீரப்போகிறது? கொத்து ரொட்டியும் ஆட்டு இறைச்சியும் தாராளமாகக் கிடைக்கும் போது பசியின் கொடுமை உங்களுக்கு எப்படித் தெரிய வாய்ப்பிருக்கிறது? ஆலயங்களில் பாலாபிஷேகம் என்று கூறி குடம் குடமாக பாலை ஊற்றுகிறீர்களே. இன்று எங்கள் மண்ணில் பாலுக்குக் கதறும் குழந்தைகளுக்கு சிவனின் உமாதேவியாரா வந்து பாலூட்டப் போகிறார்?

இதில் வேடிக்கை என்னவென்றால் எங்களுடைய செயற் பாடுகளை மூலதனமாக்கிக் கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று வசதியாக வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் பலர் எங்களைப் பற்றிச் சிந்திப்பதே இல்லையாம். அகதிகளாக வாழ்ந்துகொண்டு கதியின்றி ஊரில் வாழும் உறவுகளுக்கு எதுவுமே செய்வதில்லையாம். அன்று முதல் இன்றுவரை எங்கள் பெயரை வைத்துக்கொண்டு குளிர் காய்பவர்கள் பலராக இருப்பதை நினைக்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. இதுதான் உலகம்!

இன்று போதைப்பொருள், கற்பழிப்பு, கொலை, கொள்ளை, வாள்வெட்டு என இப்படி எவ்வளவோ புதிது புதிதாக நமது மண்ணில் விளைந்திருக்கின்றனவாம். அங்கும் இங்குமாக இன்று வெளிநாடுகளில் இருந்து பலர் உதவி செய்கிறார்கள் தான். இருந்தும் பல போராளிகளும், அவர்களின் குடும்பங் களும் இன்றும் வாழ்க்கையோடு போராடிக்கொண்டிருக் கிறார்கள். எமது நிலை யானை வாயில் போடும் அரிசிப் பொரி போலத்தான் இருக்கிறது. வாழ்ந்த வீடுகள். இருந்த நிலங்கள் யாவையும் மீண்டும் பெறவேண்டும். நிரந்தர வாழ் வாதாரத்திற்கு வழிவேண்டும். அடிப்படை உரிமையோடு, சுயமரியாதையோடு பயமின்றி, நிம்மதியாக வாழ வேண்டும். சின்னாபின்னமாக்கப்பட்டு சிதறிப் போயிருக்கும் எமது சமூகத்தின் நிலைமையை சீர்செய்து கொள்ள பெரும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். மேலான செயற்பாடு களை அமுல் செய்ய வேண்டும். உலகெங்கும் பரந்துள்ள தமிழ் இனம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் வெளிநாடுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆதரவோடு அரசியல் தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

"தமிழீழத் தனியரசு ஒன்று அமைந்தால் இனவழிப்புக்கு உட்படாமல், சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், பாதுகாப் பாகவும் தமிழ்மக்கள் இருக்க முடியும் என்பதனை வரலாற்றுப் பட்டறிவின் மூலம் உணர்ந்தவர்களாகவே மாவீரர்கள் களமாடினார்கள்" என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் தனது மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார். இன்று உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் அனைவருக்கும் எமது தியாகம்; தெரிந்திருக்கும். எங்கள் சுய இன்ப, துன்பத்தைப் பார்க்க வில்லை. சொந்தம் பந்தம் என்று நினைக்கவில்லை. நாங்கள் இழந்தது கணக்கற்றவை. நாங்கள் எங்களுக்காக உயிர் துறக்கவில்லை! "நாம் உலகத்தமிழர்களாக ஒன்றுபட்டு, மாவீரர்களின் கனவுகளையும் அவர்களது ஈகங்களையும் எமக்குள் உள்வாங்கி, மாவீரர் இலட்சியத்தை நனவாக்க அயராது ஒன்றுபட்டு உழைப்போம்" என உருத்திரகுமாரன் மேலும் கூறியுள்ளார்.

அண்ணா, அதை நீங்கள் உள்வாங்கிக் கொண்டு செயற்படு வீர்களா? அல்லது தொடர்ந்தும் அடுத்த வருட மாவீரர் நாளன்று மட்டும் எங்களை நினைக்கப் போகிறீர்களா? எங்களை வெறும் கற்தூபிகளுக்குள் கட்டுப்பட்ட வெறும் உக்கிப்போன உடல் என்று எண்ணிவிடாதீர்கள். ஒரு சத்தியத்திற்காகச் சிதைந்துபோனவர்கள். நாளை சரித்திரம் கூறப்போகும் சான்றுகள்! நாளைய விடியலில் குருதி தோய்ந்த மண்ணில் விதைக்கப்பட்ட நாங்கள் பெரும் விருட்ஷமாக வளர்ந்து வரலாறு வடிக்கும் நாள் வெகுதூரம் இல்லை. அப்போது உங்கள் கேமராவுடன் மறுபடியும் வந்து புகைப்படம் எடுத்து உங்கள் முகநூலில் பதிவுசெய்யுங்கள்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பெயர் செண்பகம்

**உங்களுக்கு** என்னைத் தெரியுதோ..?

என் பெயர் செண்பகம்.
எப்பவோ பார்த்திருப்பியள், இப்ப மறந்திருப்பியள். உங்களில் பல பேருக்கு என்னைத் தெரியாது. பொதுவாக எங்களை ஆங்கிலத்தில் 'கிறேற்றர் கூகல்' அல்லது 'குறோ பீசன்ற்' என அழைக்கினமாம்.

இலங்கையிலும். இந்தியா, சீனா ஆகிய நாடுகளிலும் எங்கடை ஆக்கள் வாழுகினமாம் எண்டு சொல்லுவினம், ஆரைக்கண்டது?

நான் வீடு வீடாக, தோட்டம் தோட்டமாக அலைந்து மரங்களில் தங்கி, வேலிகளில் குந்தி, புழுக்களை உண்டு வாழும் ஒரு சாதாரண பறவை. எனக்கு அழகான கவர்ச்சித்தோற்றம் கிடையாது. குயிலைப் போல குரலும் இல்லை. என் உதடு சிவப்பாக இருந்தால் எனக்கும் நல்ல மவுசு இருந்திருக்கும். ஆனால் எனக்குக் கண் மட்டும் சிவப்பாக இருக்கிறதாலை சும்மா வெறி எண்டு நினைக்கினம் போலை.

அதெண்டாலும் பரவாயில்லை. எனக்கு இரண்டு பக்கத்திலையும் சேறடிச்ச மாதிரி மண் நிறத்திலை செட்டை, ஒருத்தன் திரும்பிப் பாக்கிறான் இல்லை..! பிரியமான பறவையாக வீட்டில் என்னை ஒருத்தரும் வளர்ப்பதில்லை.

காகத்தைப் போல தோற்றம் இருந்தாலும் நான் கத்தி உங்கள் தூக்கத்தைக் கலைப்பதில்லை. உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுகளை தட்டிப் பறிப்பதில்லை. இருந்தும் நீங்கள் என்னைக் கவனிப்பதில்லை. கவனத்திலும் கொள்வதில்லை. ஏதோ, அந்தக் காலத்திலை கங்கை அமரன் என்னுடைய பெயரைச்சொல்லி பாட்டெழுதி, இளையராஜா இசை யமைத்து, ஆசா போஸ்லி பாடின பாட்டாலை "செண்பகமே செண்பகமே" இப்பவும் என்னுடைய பெயர் அடிபடுகுது. அதுவும் எத்தினை நாளைக்கோ?

ஆனால் ஒரு விஷயம் மட்டும் நான் சொல்லுறன். எங்கடை இனத்தின் தலையை நிமிரவைத்து எங்களுக்கென ஒரு கௌரவத்தைத் தந்திருக்கிறார் ஈழத்தின் தேசியத் தலைவர்.

தமிழீழத்தின் தேசியப்பறவை என எங்களைத் தெரிந்து மொழிந்து ஒரு சிறப்பை எங்களுக்கு தந்திருக்கிறார். அவரும் இப்ப எங்கையோ போட்டார். இப்ப இஞ்சை இருக்கிறவை ஏதேதோ பிரச்சினைகளைச் செய்துகொண்டு பிடுங்குப் பட்டுக்கொண்டும் இருக்கினம். இதுக்குள்ள எங்கடை பிரச்சினையை ஆர் கவனிக்கப் போயினம்..?

இப்ப என்னுடைய இனம் பெருவாரியா அழிஞ்சு போச்சு, நீங்கள் எங்களை அழிய விட்டிட்டீங்கள். அங்கும் இங்குமா எங்களிலை கொஞ்சப்பேர் மட்டும்தான் இருக்கினம். அந்த நேரம் ஐக்கிய நாடுகள் சபையிலும் முறையிடேலாது. சீமான் மாதிரி எங்கடை இனத்தைப்பற்றி பேசவும் ஒருத்தரும் இல்லை.

எதுக்கும் நீங்களும் கவனமா இருங்கோ. நான் கெந்திக் கெந்தி திரிஞ்ச மண்ணையும் பிச்சு பிச்சு எடுக்கப் பாக்கினமாம். அவனவன் ஆரை அழிக்கலாம் எண்டு, எவனை முடிக்கலாம் எண்டு இருக்கிறாங்கள். எங்கடை இனத்தை அழிப்பதுபோல உங்கடை இனத்தையும் அழிச்சுப் போடுவாங்கள். படிக்கிற பாட்டைத்தான் இரசிப்பினம். எங்களை இரசிக்க மாட்டினம். சரி பசிக்குது. முந்தினமாதிரி கண்டபடி புழுக்களையும் தின்னேலாது. மருந்தடிச்சு அதுகளையும் சரிக்கட்டிப் போட்டினம்.
நான் வாறன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரழிவின் நினைவுமரம்

**"அப்பா** இண்டைக்கு எங்கை போறம்?" புறப்பட்டுக் கொண்டிருந்த என்னை நோக்கி என் மகள் தமிழினி கேட்டாள்.

"ஓ உங்களுக்கு அம்மா சொல்லவில்லையா? நாங்கள் எங்களுடைய நினைவு மரத்தடிக்குப் போகிறோம்."

"என்ன நினைவு மரமோ? அதென்னப்பா. ஆருக்கப்பா மரம்? என்னத்துக்கப்பா நினைவு? என்ன நினைவு?" என்று மகள் கேள்விகளாகக் கேட்டாள்.

"அதுவா, இலங்கையில் நடந்த போரில் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் நினைவாக இங்கு ஒரு நினைவுமரம் இருக்கிறது. அங்குதான் போகப்போகிறோம்."

"ஓ, அப்படியா? எனக்குத் தெரியாதே!" என்று கூறிய வாறே சிறிது வியப்புடன் அவள் என்னைப் பார்த்தாள்.

அருகில் இருந்த கதிரையில் இருந்தவாறே மகளையும் இருக்கவைத்து அவளுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தேன்.

"பிள்ளை, நாங்கள் இலங்கையில் இருந்து இந்த நாட்டுக்கு வந்தனாங்கள் தெரியும்தானே."

"ஓ அது தெரியும். ஆனால் ஏனப்பா அங்கை இருக்காமல் இங்கை வந்தனீங்கள்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராமல் அவளிடம் இருந்து இன்னொரு கேள்வி எப்படிச் சொல்வது என்று சற்று யோசிக்கும் போது, "பிள்ளைக்கு வடிவாச் சொல்லி விளங்கப்படுத்துங்கோ, தெரியத்தானே வேணும்" என்று உள்ளிருந்து மனைவியின் குரல்.

"அந்த நேரம் எங்கடை நாட்டிலை சரியான பிரச்சினை. நாங்கள் உயிருக்குப் பயந்து, அங்கிருந்து வெளிக்கிட்டு இங்கை வரவேண்டியதாய் போச்சு" என்று மெதுவாக ஆரம்பித்தேன்.

"என்ன பிரச்சினை, அதுக்கேன் நீங்கள் உங்கடை பிறந்த நாட்டை விட்டிட்டு வரவேணும்?" என்னை நோக்கி தமிழினி வியப்புடன் கேட்டாள்.

"ஒரு காலத்திலை இலங்கையில் தமிழருக்கென்று ஒரு இராச்சியம் இருந்தது ஆனால் ஆங்கிலேயர் இலங்கையை கைப்பற்றியவுடன் தமிழர்கள் அவர்கள் ஆளும் உரிமையை இழந்தார்கள். அன்றிலிருந்து தமிழர்களான நாங்கள் சிறுபான்மையினத்தவர்களாக்கப்பட்டோம். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் கைகளில் அரசாங்கம் அமையவே தமிழர்கள் தங்களை ஆளக்கூடிய தகைமையை இழந்ததோடு, அந்தஸ்து, சுயகௌரவம் போன்றவற்றை இழந்தார்கள். அரசாங்கத்திற்கும் தமிழர்களுக்கும் இடையே பெரும் வேற்றுமையும் பிரிவினையும் ஏற்படத் தொடங்கியது."

"இலங்கையில் பிறந்த அத்தனை மக்களுக்கும் இருக்க வேண்டிய சம உரிமை. சம அந்தஸ்து, மொழி உரிமை என்பன தமிழர்களுக்கு இல்லாத காரணமாக நீண்டகாலமாக இனப் பிரச்சினை இருந்து வந்தது.

அப்போதிருந்த தமிழ்த்தலைவர்கள் அஹிம்சை வழியில் போராட முயன்றபோது, அவர்கள் தாக்கப்பட்டும் சிறையில் அடைக்கப்பட்டும் தண்டிக்கப்பட்டார்களே தவிர, எங்களது பிரச்சினையை தீர்க்க முடியவில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேலும் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு, இலங்கையின் ஆட்சிமொழி பெரும்பான்மையினத்தோரின் மொழியாக மாற்றப்பட்டு, தமிழர்கள் மீதும் அவர்கள் ஆட்சிமொழி திணிக்கப்பட்டது."

"மேலும் மாணவர்களுக்கிடையே கல்வியில் தரப்படுத்தல் அமுலாக்கப்படவே இளைஞர்களும் பெருமளவில் பாதிக்கப் பட பெரும் கலவரம் தொடங்கியது. இளைஞர்கள் பெரும் பான்மை அரசாங்கத்தின் அமைப்பின் கீழே வாழமுடியாது என்ற முடிவிற்கு வந்தார்கள். தமிழர்க்கு சுதந்திரம் வேண்டும். தமிழருக்கென ஒரு தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து சுதந்திர போராட்ட வீரர்களாக மாறி, அரசாங்கப் படைகளுடன் போராட ஆரம்பித்து இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளை இணைத்து தமிழர்க்கென ஒரு பிர தேசத்தை வன்னிப் பகுதியில் நடைமுறைப்படுத்தினார்கள்."

"நான் எனது பேச்சினை சிறிது நிறுத்த, உடனே "ஓ, அதுதான் தமிழ் ஈழமா?" என்றாள் தமிழினி.

"ஓம்! ஓம்! அப்படி ஆரம்பித்த போராட்டம், நாட்டின் அரசாங்கத்திற்கு பெரும் சவாலாக ஆரம்பிக்கவே, வெளிநாடு களின் உதவியோடு தமிழ் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிற்குக் கீழே கொண்டுவர முயன்றார்கள். உரிமை கேட்டுப் போராடிய இளைஞர்களைப் பிடிப்பதோடு அந்தத் தமிழ் பிரதேசத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கைப்பற்றும் நோக்கத்துடன் போர் விமானங்கள், ஆட்டிலறி செல்கள், வெளிநாடுகள் கொடுத்த நவீன கருவிகளோடு முன்னேறி போராடிக்கொண்டிருந்த இளைஞர்கள் பலரையும் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களையும் கொன்று குவித்து அந்தப் பிரதேசத்தைக் கைப்பற்றினார்கள். தமிழர்கள் வரலாற்றிலே இரத்தக்கறை படிந்த நாளது!" என்று கண்கள் கலங்க ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது மவுனத்தின் பின் அவளும் ஆழமாக யோசித்தவளாக,

"அது எப்ப அப்பா? நடந்தது?" தாழ்ந்த குரலில் கேட்டாள்.

"2009ஆம் ஆண்டு மே மாதம் அளவில் பெருமளவில் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்" என்று கூறவே "ஏனப்பா இதற்கு வெளிநாடுகள் ஒன்றும் செய்யவில்லையா?"

தமிழினியின் குரலில் சற்றுக் கோபம் தெரிந்தது.

"எல்லா நாடுகளும் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்க எல்லாம் நடந்து முடிஞ்சுது" கைகளை விரித்தவாறே கூறினேன்.

"இறந்தவர்கள் இறந்தவர்கள்தான்! இன்று தமிழர் வாழும் பகுதிகளில் கூட இந்த நாளோ, இந்தக் கொடிய சம்பவம் நடந்ததற்கான அடையாளமோ பெரிதாக ஒன்றும் இல்லை. ஆனாலும் அந்த நாளை, அந்தப் பேரழிவை நினைவுகூரவே இங்குள்ள பூங்காவில் ஒரு மரத்தை நட்டு வருடா வருடம் அந்த மரத்தடியில் கூடி அந்தப் போரில் இறந்தவர்களை நினைத்து பிரார்த்தனை செய்கின்றோம். அங்கைதான் இப்ப போகப் போகிறோம்" என்று முடித்தேன்.

"அது சரி அதுக்கு ஏனப்பா மரம் வைச்சிருக்கு?" தமிழினி.

"அடையாளம் அம்மா! அந்த நினைவு நாள். அந்தப் பேரழிவின் நினைவு எங்களோட முடியக்கூடாது. உங்கள் காலத்திலும் அதுக்குப் பிறகும் இருக்க வேண்டும். எதிர்காலத்திலும் அந்த நினைவுகள் இருக்க அந்த மரம் ஒரு அடையாளம். போரில் இறந்த ஆத்மாக்களின் உறைவிடமாக இருக்கக்கூடிய அமைதி யான சூழலில் இருக்கும் ஒரு பூங்காவில் உள்ள ஏரியின் ஓரமாக இந்த "பேர் ஓர்க்" மரம் நடப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பது அடி உயரமாகவும், ஐம்பது அடி அகலமாகவும், நூறு வருடங்களுக்கு மேலாக வளர்ந்திருக்கக்கூடிய இந்த மரத்தின் பரந்து வளரும் கிளைகளும், இலைகளும், அன்று ஆயிரக்கணக்கான இறந்த மக்களின் சின்னமாக, அடுத்தடுத்த தலைமுறைகள் வந்து தங்கள் மரியாதையை செலுத்தும் விதமாக இருக்கப்போகிறது. அதுமட்டுமல்ல இலங்கையில் அன்று நடந்த பேரழிவை ஞாபகப்படுத்தி, வருங்காலத்தில் உலகத்தின் எந்தப்பகுதிகளிலும், எந்த சமூகத்திலும் நடைபெறாது என்பதை எடுத்துக்காட்டும் முகமாகவும் அமையும் என்று நம்புகிறோம்."

"அது நல்ல விஷயம் அப்பா. இப்படித்தான் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் இறந்த ஆறு மில்லியன் யூதர்கள் ஞாபகார்த்தமாக தை மாதம் 27ஆம் திகதியை நினைவு நாளாக வைத்திருப்பதோடு அருங்காட்சியகமும் வைத்து அந்தப் பேரழிவை அடையாளப்படுத்துகிறார்கள்.

இலங்கையில் நடந்த தமிழ் பேரழிவை இன்று மட்டுமல்ல என்றும் நினைவூட்ட வளர்த்துவரும் மரத்தைப்போல அந்த பேரழிவும் எங்கள் மனதில் மட்டுமல்ல இனி வருங்கால தமிழ் சந்ததியினரின் மனங்களிலும் தொடர்ந்து வளர வேண்டும். சரி அப்பா, கொஞ்சம் பூக்கள் வாங்கிக்கொண்டு மரத்தடிக்குப் போவம் வாங்கோ" என்றவாறே தமிழினி எழுந்து நடந்தாள்.

எங்கள் சுமையை அடுத்த தலைமுறைக்கும் தொடர்ந்து தூக்கிச்செல்லும் எண்ணத்துடன் வழிகாட்டிச் செல்லும் அந்த நம்பிக்கை நட்சத்திரத்தைத் தொடர்ந்தேன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிக்கூண்டுக் கோபுரத்தின் மனக்குமுறல்

**விடிந்தும்** விடியாத அதிகாலை வேளை. அவசர அவசரமாக நடந்துபோய்க் கொண்டிருந்தேன். முனியப்பர் கோயில் மணிஅடித்து ஓய்ந்தது. வீதியில் அதிக சன நடமாட்டமோ, போக்குவரத்து வாகனங்களே இருக்கவில்லை. வீதியில் ஒன்றிரண்டு மாடுகள் இரை மீட்டுக் கொண்டு போய்க் கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்தின் மத்தியில் மூன்று வீதிகள் சந்திக்கும் இடத்தில் உயர்ந்து கம்பீரமாக நின்றுகொண்டிருந்த மணிக்கூண்டுக் கோபுரத்தின் பக்கமாக வீதியைக் குறுக்காக கடந்து கொண்டிருந்தேன்.

"தம்பி, தம்பி, கொஞ்சம் நில்லுங்கோ" என்ற குரல் கேட்டது. சற்று நிமிர்ந்து பார்த்தேன். அந்தக் கோபுரம் தான். வளைந்து குனிந்து என் காதருகே, "நான்தான் தம்பி, மணிக்கூண்டுக் கோபுரம் பயப்பட வேண்டாம். எங்கு அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறீர்கள்? முனியப்பர் கோயிலுக்கு கும்பிடப்போகிறீர்களே? அவர் எங்கையும் போகமாட்டார். கொஞ்சம் நின்று நான் சொல்வதைக் கேளுங்கோ. காலைப் பூசைக்கு நேரமிருக் கிறது" என்று கூறியது.

ஆச்சரியத்துடன்"என்ன? இப்படி குனிந்து?"என்று கேட் பதற்குமுன்பாக, "வெளிநாட்டிலைஇருந்து வந்திருக்கிறீர் கள் போலிருக்கிறது. இப்பவாவது உங்களுக்கு உங்கள் மண்ணின் எண்ணமும் உறவுகளின் பாசமும் ஞாபகத்திற்கு வந்ததே, அது சந்தோசம். கொஞ்சம் நிதானமாய் நின்று நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கோ. வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் உங்கள் வாழ்வு சுதந்திரமாகவும், வசதியாகவும், சொகுசாகவும் இருக்கலாம். ஆனால் இங்குள்ள நிலைமையை யும் நீங்கள் அறிய வேண்டும். உங்களைப் போல வெளிநாட்டில் வாழ்கின்றவர்கள்தான் இங்குள்ளவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். நீங்கள் எப்படித்தான் வாழ்ந் தாலும், எங்குதான் குடியேறினாலும் உங்களுடைய சொந்த மண்ணையும், உறவுகளையும் மறக்க முடியுமா? தாய்மண்ணை மறந்துபோவது. சொந்தத் தாயை மறப்பது போன்றது. நீங்கள் நன்றாகப் படித்தவர்கள். எங்களுக்கு என்ன தம்பி தெரியும்? கிணற்றுத்தவளைகள்தானே.

இந்த மண்ணில் எவ்வளவு காலம் இருந்து எத்தனை பிரச்சினைகளை, துன்ப துயரங்களை பார்த்திருக்கிறேன். அனுபவித்திருக்கிறேன். இப்போது எனக்கு கிட்டத்தட்ட 133 வயதிற்கு மேலாகிறது. இப்பதான் தம்பி. நாங்கள் கொஞ்ச காலமாக மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறோம். இப்ப சரியான மாற்றங்கள் இங்கு நடந்திருக்கிறது. தேர்தலுக்காகச் செய்தார்களோ? சண்டைக்குப் பிறகு மாற்றங்களைச் செய்திருக்கிறோம் என்று உலகத்திற்கு காட்டவோ? அல்லது போர்க்குற்ற விசாரணையில் இருந்து தப்பிக்கொள்ளவோ? தெரியவில்லை. என்னவாக இருந்தாலும் எங்கள் பகுதிகளில் சரியான மாற்றங்கள் வந்திருக்கிறது. வீதிகளைப் பாரும் பெரிதாகப் போட்டு, தார் ஊற்றி சில இடங்களில் சோறு போட்டுச் சாப்பிடலாம் போல இருக்கிறது. கடைகளைப் பாருங்கோ, வெளிநாடுகள் தோத்துப்போகும். உங்களுடைய அமெரிக்கா மாதிரித்தான். இப்ப எல்லாமே நான் சொல்வ தெல்லாம் உங்களுக்கு புரியுமென்று நினைக்கிறேன். இளவட்டங்கள் செய்கின்ற கூத்தொரு பக்கம், பெருசுகள் செய்கின்ற அநியாயம் ஒரு பக்கம். சரியான மோசம். நீங்கள் இருக்கிற காலத்தில் ஒழுக்கம், பழக்கவழக்கம், கலாச்சாரம், பண்பாடு எல்லாம் இருந்தது. இப்ப உங்களைப் போல் வெளி நாட்டுக்காரர் வந்து காசைக் கொட்டி விளையாட்டுக்காட்டிப் போட்டு போய்விடுவீர்கள். பிறகு, இங்குள்ள நிலைமையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு. பணம் இருந்தால் பரவாயில்லை. சில குடும்பங்களுக்கு ஒரு சிலராவது வெளிநாட்டிலை இருக்கிறார்கள். பிரச்சினை இல்லை. பலருக்கு யாருமே இல்லை. முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் பக்கம் போய்ப் பார்க்கவேணும்.

முருகனையும், பிள்ளையாரையும், ஏசுவையும், அல்லாவை யும் கும்பிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதுவும் சண்டை யில் பாதிக்கப்பட்டவர்களின் நிலமை சரியான மோசம். சொந்த மண்ணில் அகதிகளான கொடுமை. சொந்தம் பந்தம் இல்லாது அனாதைகளான கொடுமை. இருக்க இடமில்லாத வெறுமை, உண்ண வழியில்லாத வறுமை, புருஷன் இல்லாத தனிமை, இழந்தவை, போரால் சித்தப்பிரமை பிடித்தவை, இப்படி பலவிதமான பிரச்சினைகளோடு மக்கள் இங்கு வாழ முடியாது தவிக்கிறார்கள். இவற்றைப் பற்றிச் சொன்னால் விளங்காது. இங்கு கொஞ்சக் காலம் தங்கியிருந்தால்தான் தெரியும். இவர்கள்பட்ட துன்பத்திலும், துயரத்திலும் ஒரு கொஞ்சமாவது நீங்கள் பட்டிருப்பீர்களே அல்லது அனுப வித்திருப்பீர்களே?

1980 ஆம் ஆண்டு நடந்த சண்டையில் நான் பயங்கரமாகத் தாக்கப்பட்டு அடியோடு அழிந்துபோகும் நிலை ஏற்பட்டது. பிறகு 2002ம் ஆண்டு திருத்தி எடுத்து பூச்சு வேலை செய்து மேக்கப் போட்டு வைத்திருக்கிறார்கள். இவையெல்லாம் உமக்குத் தெரியாது. ஏனென்றால் அன்று கோழைகளாக நாட்டைவிட்டு ஓடிப்போனவர்களில் நீரும் ஒருவர் என்று எனக்குத் தெரியும். அதுசரி பிறந்தவர்கள் எல்லோரும் கட்ட பொம்மனாகவும், திருப்பூர் குமரனாகவும், வ.உ.சியாகவும், பகத்சிங்காகவும், சிவகுமாரனாகவும், சரி எங்கள் தலைவராக வும்ஆகமுடியுமே? நீங்களும்இருக்கிறீர்களே! மண்ணைவிட்டு மக்களைவிட்டு ஓடிப்போன கோழைகள்! எதோ பிறந்து வளர்ந்து விட்டீர்கள். சொல்கிறேன் என்று குறைப்படா தேங்கோ. நீங்கள், உங்கள் குடும்பம், குடி, குடித்தனம், சொத்துப்பத்து என்று வாழப் பழகிக் கொண்டீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களைப் பற்றி ஏன் கவலைப்படப் போறீர்கள்? யார், எக்கேடு கெட்டால் உங்களுக்கென்ன? இல்லையே? வெளிநாட்டு வாழ்க்கை, விதம் விதமான உணவு, வகை வகையான உடுப்புகள், கைநிறையக் காசு எங்களின் பிரச்சினைகள், கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள், இழப்புகள், பாதிப்புகள் உங்களுக்கு எப்படித் தெரியப்போகிறது? இப்ப விடுதலைக்கு இங்கு வந்திருக்கிறீர்கள். வீட்டுக்கு வீடு விருந்து, சுடச்சுட பிரியாணி, கொத்து றொட்டி, பனங்கள்ளு, ஒடியல் கூழ், கீரிமலை, கசூரினா பீச், நல்லூர் கந்தன், செல்லச்சன்னதி என்று சுற்றித் திரிந்து விட்டு நாளை மீண்டும் கப்பல் ஏறி விடுவீர்கள். அதற்குப்பிறகு எங்களின் நினைவு உங்களுக்கேன் வரப் போகிறது?

யுத்த காலத்தில் எத்தினை குண்டுகளுக்கு நான் தப்பி இருந்திருக்கிறேன். எத்தனை செல்லுகளுக்கு தவறி இருப்பன். பலாலி முகாமில்இருந்து இராணுவம் அடித்த செல்லுகள் என்னுடைய மண்டையில் விழுந்து போகுமோ என்ற பயத்தில் கோட்டை முனியப்பரை கும்பிட்டுக் கதறியது எனக்குத்தான் தெரியும். அவரோ விமானம் பறக்கும்போது எப்படி எல்லாம் குனிந்து வளைந்து தப்பி இருப்பன். ஒருதடவை இராணுவம் மருத்துவ நிலையத்திற்குள் நுழைந்து வைத்தியர்கள், தாதிகள், நோயாளிகள் என்று பாராது. சுட்டுத் தள்ளியதை நான் பார்த்துத் துடித்துப்போனேன். என்ன கொடுமை! காயம்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்களைத் தூக்கிக் கொண்டு அலறி அடித்துக் கொண்டு தாய் தகப்பன், மனைவி, கணவன், பிள்ளைகள் என ஓடிவரும் காட்சியை இப்ப நினைத்தாலும் என்னுடைய அடி அத்திவாரம் நடுங்குது.

இலங்கையில் யுத்தம் முடிந்து ஆறு வருடங்களாகிவிட்டன. உயிரிழந்தவர்களுக்காக கலங்கினோம், கண்ணீர் வடித்தோம், உலகத்தின் முன்னால் உதவிகேட்டு மன்றாடினோம், நீதிக்குப் பிச்சை கேட்டோம் எவருமே எங்களைக் கண்டுகொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. பல்லாயிரக்கணக்கானோர் பலவற்றை இழந்து, பல வழிகளாலும் பாதிக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கி றார்கள். பெற்றோரை இழந்த பிள்ளைகள் அனாதைகளாக, பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் ஆதரவற்றவர்களாக, கணவனை இழந்த மனைவிகள் விதவைகளாக, கற்பை இழந்த பெண்கள் இளம் தாய்களாக, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, அப்பு, ஆச்சி என சொந்தங்களை இழந்து தவிக்கும் உறவுகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு யாருடையது?

ஜனநாயக நாடு என்கிறார்களே ஆனால் ஆதரிக்க வேண்டிய வர்களே அவர்களை அழிக்க நினைத்தால்? தனிமனிதனுக்கு உணவில்லை என்றால்... கண்டும் காணாதது போல இருப்பது தான் முறையா? அது ஒரு வாழ்வா? முல்லைக்குத் தேர் கொடுத்ததாக ஒரு கதை அன்று படித்தோம். இன்று ஒரு பிள்ளைக்குப் பால் கொடுக்க முடியாத நிலை! சினிமாப் போஸ்டருக்குப பாலூற்றுகிறார்களாமே? வேதனை! வெட்கக் கேடு! நமது மண்ணுக்கு இன்றைய நிலையில் இது வேண்டியது தானா? விதவைகளுக்கு வாழ்வளிக்க வேண்டாம், அவர்கள் வாழ்வாதாரத்திற்கு உதவலாமே! இதெல்லாவற்றையும் விட்டு விட்டு நாம் இன்னமும் பிளவுபட்டுப் போய் நிற்கின்றோம். ஒருவர்மீது ஒருவர் குற்றம் கூறிக்கொண்டு இருக்கின்றோம். நமக்குள்ளே ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவதும், கொடும்பாவி கட்டி எரிப்பதும், வீடுகளைத் தாக்குவதும் எவ்வளவு கேவலமானது. எமது உறவுகளின் நலனில் அக்கறையெண்டால் இப்படி நடந்து கொள்ளலாமா? அன்று சுய நிர்ணய உரிமை, சம அந்தஸ்து, அடிப்படை தேவை எதுவும் இன்றி பாதிக்கப்பட்ட மக்களின் நிலையுணர்ந்து அவர்களுக்கான ஒரு சுமூகமான வாழ்வினை பெற்றுத்தர, தனது சுகபோகங்களை துறந்து, அங்கும் இங்குமாக இரவு பகலாக அலைந்து காட்டிலே வாழ்ந்து ஒரு பண்பட்ட சீரான, ஒழுக்கமான, படையினை அமைத்து தான் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையின் குறிக்கோளுக்காக இறுதிவரை வாழ்ந்தவனை புரிந்து அறிந்து, தெளிந்து, தெரிந்துகொள்ளாமல் எறிந்து விட்டு குப்பையைக் கிளறிக்கொண்டிருக்கிறோம். மங்கள இசை மீட்டிய மண்ணில் முகாரி இராகம் முனகிக் கொண்டி ருக்கிறது.

யோசிச்சுப் பாருங்கோ. வெளிநாடுகளில் உள்ள நீங்கள் பல விடயங்களை கலந்தாலோசித்து இங்கு செய்ய வேண்டிய பலவற்றைச் செய்யலாம். நீங்கள் உதவிகள் செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்தான் இங்குள்ள, உங்கள் மண்ணின் உறவுகள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்ப நாங்கள் செய்ய வேண்டிய செயற்பாடு என்ன? உடனடியாக என்ன செய்ய வேண்டும்? நலிந்துபோன மக்களுக்கு அவர்கள் அடிப்படைத் தேவைகள் கிடைக்கக்கூடிய வாழ்வாதார வசதி முகாம்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் உறவுகளுக்கு உணவு உடை தங்குவதற்கு இடம் வழங்குதல், ஒரு சிலரால் நடைபெறும். கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், தாக்குதல்கள் போன்ற நாசகாரச் செயல்களை ஒழித்தல், பெண்களுக்குப் பாதுகாப்பாக எமது மண்ணில் இருந்து இராணுவத்தினை வெளியேற்றுதல். எங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளை அகற்றி எல்லோரும் ஒன்றாக இந்த நற்செயல்களை திட்டமிட்டு செயலாற்ற முன்வர வேண்டும். இதற்கு வெளிநாடுகளும், அங்கு வாழும் எமது உறவுகளும் பெருமளவில் ஆதரவும், ஊக்கமும் கொடுத்து உதவி செய்ய வேண்டும். வெளிநாட்டுக்குப் போகிறவர்கள் தமிழரென்று சொல்ல வெட்கப்பட்ட காலம் போய்விட்டது. தம்பி, ஒல்லாந்தர், டச்சுக்காரர், வெள்ளைக்காரர் இப்போது சிங்களவர் என்று இந்த நாட்டை ஆண்டார்கள். ஆனால் நீரும் நானும் மட்டுமல்ல புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டிய விடயம் ஒன்று இருக்கிறது. எவர்தான் ஆண்டாலும் எந்த மொழியால் ஆண்டாலும் எங்களுடைய யாழ்ப்பாணத் தமிழ் மட்டும் மற்ற மொழிகளால் கற்பிழக்காது எப்போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தூய தமிழாக, மாசுபடாததாக இன்றுவரை இருந்து வருகிறது.

என்ன நேரத்த அடிக்கடி பார்க்கிறீர்? நேரமாகிறது போல் தெரிகிறது. நான் சொன்னதெல்லாம் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் மனம் வைத்து சில செயற்பாடுகளை செய்ய முன் வந்தீர்களேயானால் இங்குள்ள மக்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். பழைய பாதைகளை, முடிந்துபோன சம்பவங்களை பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமே இல்லை இவர்களின் நல்வாழ்விற்கு ஆவன செய்யுங்கள். வாழ்வாதாரத்திற்கு வழி அமைத்துக் கொடுங்கள். அது சரி... நான் சொல்வது எல்லா வற்றிற்கும் தலையாட்டுகின்றீர். உங்களைப் போல்தான் வெளி நாட்டில் இருந்து வருகிறவர்கள் எல்லாம் தலையாட்டி விட்டுப் போவார்கள். கப்பலேறினவுடன் எல்லாம் சரி.

மீண்டும் மணி ஒலித்து காதில் தவழ்ந்தது. முனியப்பர் கோயிலில் இருந்து காலைப்பூசைக்கு உரிய மணி என்று நினைத்தபோது, "அலாரம் அடிக்கிறது எழுந்திருங்கோ" என்ற வழக்கமான அதட்டல் சத்தம். மனைவிதான். வேண்டா வெறுப்பாக எழுந்தபோது... இதயத்தில் ஒரு தாக்கம் இருப்பது போலவிருந்தது. எங்கேயோ பிறந்து, வளர்ந்து உலகத்தின் ஒரு மூலையில் என் மண்ணுக்கும் மக்களுக்கும் எந்த விதத்திலும் உதவியாக இல்லாது இந்த இயந்திர வாழ்க்கையில் வெறும் இயந்திரமாகத்தான் நான் வாழ வேண்டுமா? இதைவிட பிறக்காது இருந்திருக்கலாமே! ஊரைப் பற்றிய அந்தக் கனவு, மணிக்கூட்டு கோபுரத்தின் கூற்று கனவாக இருந்தாலும் அதில் ஊறியிருந்த உருவகமான உண்மையும் குற்ற உணர்வும் நிமிர்ந்திருந்த என் தலையை தரை நோக்க வைத்தன. வெட்கம் மட்டுமல்ல, அதில் வேதனையும் இழையோடி இருந்தது. முடியில்லாத தலையை ஒரு முடிவோடு அசைத்துக் கொண்டேன். போதிமரத்தின் கீழ்தான் ஞானம் பிறக்குமென் றில்லை. தூக்கத்திலும் பிறக்கலாம்!

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் நினைவோடு ஒரு காரின் கண்ணீர் கதை!

**"இப்ப** *சிணுங்கி அழவும் பயமாக் கிடக்கு. கொண்டு போய் கராச்சிலை போட்டுவிடுவாங்கள்... பேசாமல் என்னையும் வயோதியர் இல்லத்திலை சேர்த்து விடுங்கோ. புண்ணியம் கிடைக்கும்!"*

*தம்பி, வாரும் காரிலை ஏறும்... முன் சீட்டுக்கு வாரும். உம்முடைய அப்பா அம்மாவை எனக்கு நல்லாத் தெரியும். ஊரிலை இருந்து வந்து கன நாளோ? சரி கதவைச் சாத்தும். அப்பனே உக்கிர வடிவேலா! தம்பி மெல்லச் சாத்தும். நீர் கதவை இறுக்கி சாத்திற சத்தத் திலை காது பறக்கும் போலை. கதவை அடிச்சுச் சாத்த இஞ்சினே கழண்டு விழுந்து போகும் போலை கிடக்கு. மெல்லமா சாத்தும். உம்முடைய பெலனெல்லாத்தை யும் கதவிலை காட்டுறீர் போலை எனக்கு இப்ப எத்தினை வயதென்று நினைக்கிறீர். எப்ப அக்குவேறு ஆணி வேறாக கழட்டி போடுறாங்களோ தெரியேல்லை.*

*ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி மூண்டாம் ஆண்டு இலண்டனிலை இருந்து கப்பலிலை கொண்டு வந்து என்னை இலங்கையிலை இறக்கிவிட்டார்கள். அதுவும் புதுசா இல்லை. இலண்டனிலை வெள்ளைக் காரன் ஒருத்தன் ஆசைக்கு ஓட்டிப் போட்டு இரண்டாந்தாரமாய் இஞ்சை கட்டி அடிச்சு விட்டாங்கள். அந்தக் குளிருக்கு இஞ்சத்திய சுவாத்தியம் பரவாயில்லை எண்டு நினைச்சன்.*

*இரத்தினபுரியிலை ஒரு சிங்கள முதலாளிதான் என்னை இலங்கையிலை முதல் வைச்சிருந்தவர், பிறகு வேறை ஒருத்தர். இப்பிடி பலபேற்றை கைபட்டு ஒரு மாதிரி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புண்ணியவான் என்னை சவாரிக்கு விட்டு தனது பிழைப்பிற்கு பயன்படுத்திக் கொண்டார். சரி மற்றவர்களுக்கு உதவி செய்யும் ஒரு பெரிய காரியத்தை ஆண்டவன் கொடுத்திருக்கிறாரே என்ற சந்தோசத்திலை என்ரை வாழ்க்கை போச்சுது. தம்பி! என்ன ஒருமாதிரிப் பார்க்கறீர்? ஓம், ஓம். விளங்குது. விலைமாதர்கள் மாதிரித்தான் என்ரை பிழைப்பு. எப்பிடியோ உங்கடை இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னுக்குத் தான் என்னுடைய இருப்பிடம். சவாரிக்குப் போகாத நேரத்திலை வெள்ளிக்கிழமை அங்கையும் இங்கையும் பார்த்துப்போட்டு மீன் வாங்கிக் கொண்டு போறவை, சந்தைக்குள்ளை கள்ளமாய்ச் சாராயம் வாங்கிக் குடிச்சுப் போட்டு பையிலா ஆடிக்கொண்டு போறவை, இப்பிடி எத்தனை காட்சிகளைக் கண்டிருப்பன், சொல்லும் பாப்பம்? இதுக்குள்ளை பக்கத்திலை பேக்கரி. பாண் போறணையிலை இருந்து வாற மணம் மூக்கைப் பிடுங்கும். இதிலை ஒரு விஷயம் என்னெண்டால் அந்த நேரத்தில் அந்த பேக்கரியை நடத்தினது சிங்கள ஆட்கள். ஐம்பத்தெட்டாம் ஆண்டிலை ஒரு பெரிய கலவரம். தம்பி, நீர் பிறந்திருக்க மாட்டீர் என்று நினைக்கிறன்.

தம்பி, கலவரம் எண்ட உடனை வயித்தைக் கலக்குது. கொஞ்சம் இருந்து கொள்ளும். காரை நிப்பாட்டிப் போட்டு ஒருக்கா உதிலை போட்டுவாறன். வெக்கை எண்டால் வெளியிலை வந்து நில்லும். கரையிலை ஒதுங்கி நில்லும். ரூவீலர்காரங்கள் வந்து தட்டிப் போடுவாங்கள்".....

"தம்பி, என்ன கடுமையா யோசிச்சுக்கொண்டு நிச்கிறியள்? தெரியாத்தனமா இந்த வெக்கை காலத்திலை மாட்டிக் கொண்டுவிட்டேனா எண்டோ? அது சரி நீங்கள் வெளி நாட்டிலை போய் குளிருக்கை இருப்பிங்கள்தானே. ஆனால் தம்பி. உம்மைப் பாரும். குண்டுவிழுந்த பனை மாதிரி. வெளிநாட்டுக் குளிருக்கு மொட்டையாய்ப் போய் வந்து நிக்கிறீர். இப்ப என்னப்பாரும் சடை நாய்க்குட்டி மாதிரி அடிக்கடி சலூனுக்குப் போட்டுவாறன். சரி தம்பி ஏறும் காரிலை... போவம், நேரம் ஆகுது தம்பி. அந்தரத்திலை இருக்காமல் கொஞ்சம் சாஞ்சு வடிவாய் இரும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி, கதையை எங்கை விட்டானங்கள். ஓம். அம்பத் தெட்டாம் ஆண்டுக்கலவரத்திலை. கலவரம் பரவலாத் தொடங்க சிங்கள நாட்டிலை தமிழற்றை கடைகளை எரிக்க, பிரச்சினை பெரிசாப் போச்சு, பேந்தேன் கேட்கிறீர்.

சிங்கள நாட்டிலை எங்கடை ஆக்களின்ரை கடையை எரிக்கிறாங்கள் எண்டால், எங்கடை ஆட்கள் இஞ்சை விடுவினமே. இந்த பேக்கரிக்குள்ளை புகுந்து சாமான்களை வெளியிலை கொண்டுவந்து போட்டு எரிக்கத் தொடங்கி விட்டினம். பாவங்கள் கடையிலை இருந்த அந்தச் சிங்களச் சனத்தை எங்கடை சில ஆட்கள்தான் பின்பக்கமாய் மரவள்ளித் தோட்டத்துக்குள்ளாலை ஒளிச்சுக்கொண்டு போய் சுன்னாகம் போலீஸ் ஸ்டேசனிலை விட்டதெண்டு கேள்விப்பட்டன். இதுதான்டா தம்பி தமிழனின்ரை சிறப்பு.

ஆத்தே இந்த ரூவீலர்காரரற்றை பிரச்சினை பெரும் பிரச்சினை. அதுவும் பொம்பிளைப் பிள்ளையள் வலுமோசம். அங்கை பாரும். குறுக்காலை போறதொண்டு செல்லிலை பேசிக்கொண்டு பறக்குது. என்ன சைக்கிளோ? அந்த வயித்தெரிச்சலை ஏன் கேட்கிறீர் தம்பி. றோட்டிலை சைக்கிளைக் கண்டு கன காலம். அது அந்தக் காலம் தம்பி! நீங்கள் பெட்டையளைப் பார்க்க டபிள் போவியல், ட்ரிப்பில் போவியல், போலீஸ்காரன் வால்வ் கட்டையைப் பிடுங்கி விடுவன். கலைச்சுக் கலைச்சுக் காதலிப்பியள், கடிதம் கொண்டுபோய் குடுப்பியள், அந்தக் காலம் முடிஞ்சுது தம்பி. இப்ப நிலைமையே வேறை, கொம்பியூட்டருக் குள்ளாலை குழந்தை பெறுவங்கள் போல கிடக்குது. கலிகாலம் தம்பி! இன்னும் என்னென்ன நடக்கப் போகுதோ தெரியேல்லை.

அப்ப தொடங்கின எங்கடை பிரச்சினை இன்னும் முடிஞ்ச பாடில்லை. அவங்களுக்கும் எங்களுக்கும் என்ன பிரச்சினை. அவங்களும் மனிசர்தானே. இப்ப நீங்களெல்லாம் ஜெர்மனி, பிரான்ஸ் எண்டு போய் அந்தந்த இனத்தோடை சேர்ந்து சந்தோசமாய் வாழவில்லையே? போக்கறுந்த அரசியலும், தள்ளிப்போன அரசியல்வாதிகளும்தான் தம்பி இண்டைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலைக்கு காரணம். ஐயோ தம்பி, இந்திய இராணுவக் காரங்கள் வந்து செய்த அக்கிரமங்கள் எவ்வளவு தெரியுமே! குருவி சுட்டுத்தள்ளுற மாதிரியல்லே சுட்டவங்கள். ஏன் இவங்கள் குறைவே. ஊரடங்குச் சட்டத்தைப் போட்டு விட்டு செய்த கொடுமையிருக்கே அதைச் சொல்ல முடியாது. எங்கடை வாத்தியாரை நடு றோட்டிலை சுட்டுப்போட்டாங்கள். பாவம். அவர் பாடம் சொல்லிக் குடுத்து இண்டைக்கு எத்தனை பேர் பெரிய அறிவாளிகளாக பெரிய வேலையிலை அங்கை இங்கை எண்டு சிறப்பா இருக்கினம். உதுகளை ஆரிட்டைச் சொல்லி அழுகிறது தம்பி? கையிலை ஆயுதத்தோடை இருக்குறதாலை தங்களையும் பயங்கரவாதி எண்டு பிடிச்சுப்போடுவாங்கள் எண்ட பயத்திலை தெய்வங்களும் பேச்சு மூச்சில்லாமல் இருக்கினம்.

என்ன கேட்கிறீர்? இடப்பெயர்வுக்குள்ளோ...? ஓ. என்னையும் அள்ளிக்கொண்டுதான் போனவை. வன்னியிலை கொஞ்ச நாள் சீவியம் போச்சுது.பெட்ரோல் இல்லாமல் கொஞ்ச நாள் பெஞ்சன். ஓம். ஓம். சவாரி இல்லாவிட்டாலும் அடிக்கடி கழுவித் துடைத்து திறமாய்த்தான் கவனிச்சவை. அப்பப்ப, எனக்கும் சேடம் இழுக்கிறதுதான். அதை இதைச் செய்து ஏதோ ஓட தெரியேல்லை? அவர்கள் செல்லடிக் கேக்கை என்ரை ஒரு பக்கம் சரி. என்னுடைய சரித்திரம் முடிஞ்சுது எண்டு நினைச்சன். ஆனால் எப்பிடியோ திருத்தி, மேக்கப் போட்டு வைச்சிருக்கினம். இந்தப் பக்கம் பாரும், அம்மை வந்த மாதிரி ஒரு காயம், அந்தப் பக்கம் பாரும் குட்டை ரோகம் பிடிச்ச மாதிரி! பார்த்தீரே. என்னுடைய காலமும் முடியுதெண்டு நினைக்கிறன். சரி தம்பி, கீரிமலை வந்திட்டுது இறங்கும். பேந்து பாப்பம்... இப்பதான் வெளிநாட்டிலை இருந்து நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், அனுஸ்கா மாதிரி கவர்ச்சியாக புதுப் புதுக் கார்கள் வந்து ஓடித்திரியுதுகள். எங்களை ஆர் கவனிக்கப் போகினம். வெளிநாட்டிலை இருந்து வந்து போறவை என்னை சவாரி பிடிக்கவே யோசிக்கினம். என்ன செய்யிறது எங்கடை தலையெழுத்து... அவங்கள் குண்டு போடேக்கை செத்திருக்கலாம். இன்னும் எவ்வளவு காலத்துக்கு கிடந்தது சீரழியிறதோ தெரியேல்லை? இப்ப சிணுங்கி அழவும் பயமாக்கிடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிணுங்கினனென்டால் கொண்டுபோய் கராச்சிலை போட்டு விடுவாங்கள்...

உம்மட்டை ஒரு உதவி தம்பி. எங்கடை ஆறு திருமுருகனைக் கண்டால் ஒருக்காச் சொல்லிவிடும் என்னையும் கொண்டே அவற்றை வயோதிபர் இல்லத்திலை சேர்த்துவிடச் சொல்லி . உமக்குப் புண்ணியம் கிடைக்கும்.

என்ன கூவிலோ...? வெளிநாட்டிலை போய் திருந்திவிட்டீர் எண்டு நினைச்சன் அது சரி! தொட்டிப் பழக்கம் சுடுகாடு மட்டும் எண்டு தெரியாமலே சொன்னவை. கூவிலெல்லாம். அந்தக் காலம் தம்பி. நீங்கள் அந்த நேரம் கூவில், கூவில் எண்டு கள்ளடிக்க கூவித்திரிஞ்ச காலம். இப்ப கூவிலும் போச்சுது விசாலியும் போச்சுது. உமக்கு விசாலியைத் தெரியுமெல்லே. கீரிமலை யாழ்ப்பாண பஸ்ஸிலை மனிசி ஏறினால் கலகலப்புத் தான். அது சரி இப்ப எங்கை கள்ளுக் குடிக்கப் போறீர்? வந்தது இரண்டு கிழமைக்கு. கண்ட கண்ட புளிச்சல் கள்ளைக் குடிச்சுப்போட்டு வயித்தாலை அடிக்கப் போகுது. கவனம்.. ஒண்டு சொல்லுறன் கேளும்... பேசாமல் கடலிலை குளிச்சுப் போட்டு. அங்காலை நகுலேஸ்வரர் கோயில் இருக்குது கும்பிட்டுக் கொண்டு, உதிலை சிவபூமி மடம் கிடக்குது. சும்மா சாப்பாடு போடீனம். சாப்பிட்டுவிட்டு வாரும்... ஓம்! ஓம்! சரஸ்வதி ரீச்சற்றை மூத்த மகன்தான் நடத்துறார். அங்கை அவை போடுற சாப்பாட்டைவிட அவை காட்டுற அன்பும் உபசரணையும்தான் உருசிக்குது எண்டு போய் வாறவை சொல்லீனம். போய் பாருமன், அப்பதான் உமக்கும் விளங்கும்.


தம்பி, சிலவேளை எங்கடை ஆறு திருமுருகன் உங்கை நிற்பர். மறக்காமல் என்ரை விசயத்தை சொல்லிவிடும். அது சரி. வெளிநாட்டிலை போய் நீங்கள் என்ன கிழிக்கிறீங்கள் எண்டு எனக்கு விளங்கேல்லை. திருமுருகனைப் பாரும். பிறந்தால் அப்பிடிப் பிறக்க வேணும். வாழ்ந்தால் அப்பிடி வாழவேணும். உம்மைக் குறை சொல்லேல்லை தம்பி... பொதுவாச் சொன்னனான்.

செருப்பைக் கழட்டிவிட்டுப் போட்டுவாரும்... சரியே.

காரின் கண்ணீர் கதை தொடர்கிறது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்கம்பி வேலிக்குள் முகிழ்ந்த ஞானம்!

**"முட்கம்பிவேலிக்குள்** முடக்கி வைத்திருந்த முகாமில் அன்றைய தினம் செய்ய வேண்டிய அரசியல் பணிகள் சிலவற்றை முடித்துக்கொண்டு அங்கே இருந்த கடைப் பக்கமாக வந்துகொண்டிருந்தேன்.

"தம்பி", என்ற தளதளத்த குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

"எனக்கொரு பாண்துண்டு வாங்கித் தர முடியுமா?

பொத்தான் அறுந்துபோய், பல நாட்கள் துவைக்கப் படாத சட்டையும் தூக்கிக்கட்டிய வேட்டியுடன் கலைந்த முடியும் சவரம் செய்யாத முகமுமாக அந்த மெல்லிய உருவம் என்னை நோக்கி மெள்ள வந்தது. காயத்திற்காகக் கையில் கட்டப்பட்டிருந்த துணியில் இருந்து சற்று இரத்தம் கசிந்திருந்தது. மிகக் கிட்ட வந்ததும் அந்த முகம் எனக்கு மிகவும் அறிமுகமானதாக தோன்றியது. யாராகவிருக்கும்? என் ஆழ்மனதிற்குள் சற்றுத் துளாவினேன்.

கந்தையா வாத்தியார் போல இருக்கிறதே. அவராய் இருக்குமோ?

"ஐயா! நீங்கள் கந்தையா மாஸ்டரோ...?" சற்று இழுத்தேன்.

அருகே வந்து பார்த்துவிட்டு, "தம்பி, உம்மையும் தெரிஞ்சது போலத்தான் இருக்குது ஆனா... கண்ணும் சரியாத் தெரியுதில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் எங்கை தம்பி, இங்கை நிக்கிறீர்?" குரலில் ஆர்வம் மேலிட என்னைக் கூர்ந்து நோக்கினார்.

"ஒன்றுமில்லை ஐயா, நான் இங்கு வவுனியாவில் வேலை பார்க்கிறேன் இந்த முகாமில் சில வேலைகள் செய்ய வேண்டியிருந்தது. அதுதான். இரண்டு மூன்று நாட்களாக இங்கு வந்து போய்க்கொண்டிருக்கிறேன் நீங்கள் எப்படி ஐயா இங்கை? இப்படி ஆயிட்டீங்களே?" என்று மிகக் கவலையுடன் கேட்டேன்.

"என்ன செய்வது தம்பி, எல்லாம் விதி. தமிழருடைய தலையெழுத்து. நாங்கள் செய்த பாவங்களுக்கு இப்ப அனுபவிக்கிறோம்" என்று இரு கைகளையும் விரித்தபடி கூறினார்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள். எனக்குப் புரியவில்லை" என்றேன்.

அப்போது அங்கே வந்த இராணுவத்தினர் என்னிடம் வந்து அதட்டலாகக் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனர். நான் என்னிடம் இருந்த அனுமதிக் கடிதத்தைக் காட்டி விபரத்தை எடுத்துக் கூறியதும் பேசாமல் போய்விட்டார்கள்.

அவர்கள் அப்பால் சென்றதும் அவர் தொடர்ந்தார். "என்ன செய்வது எங்கள் சமூக அமைப்பு எங்களுக்குள்ளே பல பிரிவினைகளை ஏற்படுத்தி அதன் மூலம் வேறுபாடான கருத்துகளை தோற்றுவித்து முரண்பாடான செயற்பாடு களை உருவாக்கி எங்கள் இனத்தின் ஒற்றுமையை குலைத்து விட்டது. இந்தப் பலவீனத்தையே மற்றவர்கள் தங்கள் ஆயுதங்களாகப் பாவித்துக் கொண்டார்கள். நாங்கள் ஒரு இனம், ஒரு நோக்கத்தோடு இருக்கிறோம் என்பதை மறந்து செய்யும் தொழிலை வைத்து சமூக ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கி, எங்களுக்குள்ளேயே ஆயிரம் பிரிவினைகளை ஏற்படுத்திவிட்டனர் சாதி என்றும், தீவு என்றும், ஊரென்றும், குறிச்சி என்றும், வெள்ளை வேட்டிக்காரர், கூலிக்காரரென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கத்தியான் தெற்கத்தியான் என்றும் பாகுபாடு காட்டி, எவ்வளவு கொடுமைகளை செய்திட்டம் தம்பி... சின்ன வயதிலை என் கையாலேயே எத்தினை பேருக்கு தேங்காய் சிரட்டையிலை தண்ணி குடுத்திருப்பன். இப்ப நினைக்க வெட்கமாயிருக்குது. வேதனையாயிருக்கிது. வீட்டைக் தந்தவனை வெளியே விட்டு பெருமைப்பட்ட ஒரே இனம் நமது சனங்கள்தான் தம்பி.

அந்த அநியாயத்திற்குத்தான் இன்றைக்குப் பாருங்க, இந்த முள்ளுவேலிக்கு உள்ளே அவங்கள் தருகின்ற இரண்டு வாய்ச் சோத்துக்கு, இரண்டு கரண்டிக் கஞ்சிக்கு பிச்சை எடுக்கிறோம். சாப்பிட்டால் கழிக்க வேண்டுமே. அதற்கு இரண்டு மணி நேரம் வரிசையில் நிற்க வேண்டுமே என்பதற்காக எத்தனை பேர் சாப்பிடாமல் இருக்கிறார்கள். என்னைப் போல சலரோக நோய்க்காரர்கள் நேரத்திற்கு சாப்பாடில்லாமல் மருந்தில்லாமல் துடிக்கிற துடிப்பு இந்த வேலிக்கு வெளியே வருவதில்லை. தெரிவதில்லை. உண்மையும் நீதியும் கூட இந்த வேலிக்குள் முடக்கப்பட்டுவிட்டன. ஒரு நாளைக்கு இங்கு குறைந்தது பத்துப்பேர் அநியாயமாக அனாதைகளாக ஏதிலிகளாக பட்டினி கிடந்து, பரிதவித்து செத்துப்போகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் முழு உலகமுமே இந்த அநியாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது" என்றவாறே பெருமூச்சை விட்டுக் கொண்டார்.

"ஐயா, நீங்க இப்ப எங்கு தங்கி இருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"அந்த கூடாரத்திலைதான் தம்பி" கையைத் தூக்கித் தூரத்தே இருந்த அந்த வெள்ளைக் கூடாரத்தைக் காண்பித் தார்.

"ஐயா, இப்ப தனிய இருக்கிறியளோ? அல்லது குடும்பத்தோடு இங்கு தங்கி இருக்கிறியளோ?" தயக்கத்துடன் கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே நிமிர்ந்து வானத்தைப் பார்த்துக்கொண்டே தாடையைத் தடவிக்கொண்டு,

"நான் இப்ப தனியாத்தான்.. என்ரை மனைவி விசாலம், மகள், மகன் எல்லாம் போச்சு..." குரல் கரகரக்க என்னை நோக்கினார். கண்களில் கண்ணீர் நிரம்பி வடிந்தது. அவர் கைகளை இறுக்கமாகப் பற்றினேன். என்னைக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதார். ஆதரவாய் தாங்கிக் கொண்டேன். சில நிமிடங்கள் மௌனமாய்க் கழிந்தன.

அவர் என்னை நோக்கி முதல் கேட்டது திடீரென்று ஞாபகம் வந்தது. அவரை அழைத்துக்கொண்டு அருகிருந்த கடைக்குச் சென்றேன். காலைச் சாப்பாட்டுடன் தேநீரும் வாங்கிக் கொடுத்தேன். என்னைக் கையெடுத்துக் கும்பிட்டார். என் அடிவயிறு பற்றி எரிந்தது.

மடிப்புக் குலையாத வெள்ளைச் சட்டையும் சிவப்புக் கரை வேட்டியும், நெற்றியில் வீபூதிக் கீற்றும் நடுவில் சிறிய சந்தனப்பொட்டுமாக கந்தையா மாஸ்ரர் வரும்போது மிகக் கம்பீரமாகவிருக்கும். வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் பலருக்கு பாடப்புத்தகம், பேனா மட்டுமல்ல உணவும் வாங்கிக் கொடுத்ததை நானே பார்த்திருக்கிறேன். ஒருதடவை எனக்கு சரியான பசி, பாடத்தை கவனிக்க முடியவில்லை. சோர்ந்து போயிருந்தேன். அதனை குறிப்பால் உணர்ந்த கந்தையா வாத்தியார் என்னிடம் பணத்தைத் தந்து சாப்பிட்டு வரும்படி கூறினார். தாராள மனம் கொண்டு ஏராளமான உதவிகளைச் செய்து உயர்ந்த எண்ணமும் எளிய வாழ்க்கையும் பேணும் தற்பெருமை அற்ற அற்புத மனிதர்.

"அப்படிப்பட்டவர் இன்று இப்படி இருக்கிறாரே. நானில்லாவிட்டால் இன்று யாரோ ஒருவரிடம் பிச்சை கேட்டிருப்பாரே" என்று நினைத்தபோது... எனக்குள் ஏதோ செய்தது. "எப்படியோ இருந்தவர் இப்படியாகி விட்டாரே. இவர் நெற்றியில் பூசிய விபூதிக்கும் இவருடைய ஆழ்ந்த பக்திக்கும் ஒரு அர்த்தம் இல்லாது போய்விட்டதே" என்று எண்ணத் தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று மெதுவாக அவரிடம் பேச்சை ஆரம்பித்தேன். யாழ்ப்பாணத்தில் எனது ஊரான கோப்பாயில்தான் கந்தையா வாத்தியாரும் வாழ்ந்து வந்தார். அத்துடன் நான் படித்த பாடசாலையில்தான் அவரும் தமிழ் வாத்தியாராக இருந்தார். எனக்கும் இரண்டு வருடங்கள் அவரே தமிழ் வகுப்பு எடுத்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இடப்பெயர்வில் குடும்பத்தோடு முல்லைத்தீவிற்குச் சென்ற அவர் அங்கேயே தங்கி அங்குள்ள பாடசாலையில் பணியாற்ற ஆரம்பித்தார்.

கோப்பாயில் இருந்தபோதே இயக்கத்தில் தொடர்பாக இருந்த அவருடைய மகன் நாதன் படிப்படியாக இயக்கத்தில் இணைந்துகொண்டான். அப்பப்போ வீட்டுக்கு வந்து போவான். மூத்த பிள்ளை இப்படியானது வாத்தியாரின் மனைவிக்கு மிகவும் கவலையாயிருந்தது. வாத்தியாரோ தமிழ்மொழிக்கு தனது சேவை என்றும் தமிழ்மண்ணுக்கு தனது மகனின் சேவை என்றும் தனக்குள் பெருமைப்பட்டுக் கொண்டார்.

வாத்தியாரின் மகள் மல்லிகாவிற்கும் காலில் ஏற்பட்ட காயத்திற்கு வைத்தியம் செய்யப்போனபோது அங்கு இருந்த உதவியாளருக்கும் அவளுக்கும் இடையில் ஏற்பட்ட கண்களில் பரிமாற்றங்கள், கடிதங்கள், பரிசுகள், கொஞ்சல்கள், கெஞ்சல்கள் என பலதும் பரிமாறப்பட்டு ஒருமாதிரி திருமணத்தில் முடிந்தது. வாத்தியார் பள்ளிக்கூடத்தில் பாடம் கற்பிப்பதோடு வீட்டில் பேரனுக்கும் பாடம் சொல்லித்தந்து மகிழ்ந்திருந்தார். தனது கடந்தகால நிகழ்வுகளை அமைதியாகக் கூறிகொண்டிருந்தவர் சற்று மெதுவான குரலில் ஆனால் உணர்ச்சி வயப்பட்டவராக அங்கும் இங்கும் பார்த்துவிட்டுத் தொடர்ந்தார்.

“தம்பி,

கிளிநொச்சியைத் தாண்டி சிங்கள இராணுவம் வந்து கொண்டிருந்தபோது பலர் அங்கும் இங்குமாக யாழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணத்திற்கும் வேறு இடங்களுக்குமாக பல வழிகளிலும் செல்ல ஆரம்பித்தனர்.

எங்கள் பையனும் அவசரமாக எங்களை வந்து பார்த்துக் கொண்டு போய்விட்டான். தாயின் கையால் இரண்டு வாய்ச் சோறு வாங்கிச் சாப்பிட்டவன் போகும் போது தாயைக் கட்டிக்கொண்டு அழுதான். அதைப்பார்த்து கொள்ளி போடாமலே என்வயிறு பற்றி எரிந்தது. அன்று போனவன் தான்... எந்த விதமான தகவலும் இல்லை."

சற்று ஓய்வெடுத்துக் கொண்டவர் மறுபடியும் தொடர்ந் தார்.

"தம்பி, அவன் போனதிலையிருந்து தாய் நொடிந்து போய் விட்டாள். சாப்பிட மறந்தாள். தூக்கத்தை மறந்தாள். இடையில் போர் மிகவும் உக்கிரமாகத் தொடங்கியது. பாதி நாட்களும் பல இரவுகளும் பதுங்கு குழிக்குள் கழித்தோம். சில நாட்களாக பட்டினி கிடந்தோம். என் பேரன் தமிழரசன், பாவம் பசியால் துடித்துப்போனான். அந்தப் பிள்ளைக் காகவாவது என் மகளும் மருமகனும் அங்கிருந்து எங்காவது போக வேண்டும் என்று அவர்களை வற்புறுத்தினேன். வாழ்ந் தால் ஒன்றாக இந்த மண்ணில் வாழ்வோம் இல்லையேல் ஒன்றாக மண்ணில் வீழ்வோம் என்று என் மருமகன் மறுத்தார். என் மனதிலும் நிறைந்தார். எத்தனையோ தியாக சீலர்களை ஏற்றுக்கொண்ட இந்த மண் எங்களை புறக்கணித்து விடவா போகிறது?

அப்பப்போ பசி எடுக்கும்போதெல்லாம் ஏதேதோ தத்துவம் பேசி மனத்தைக் கட்டுப்படுத்த முடிந்ததே தவிர வயிற்றுப் பசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அள்ளி அள்ளி உண்ட கரங்களுக்கு அடுத்த வேளை உணவில்லை என்ற வடுக்கள் தெரிந்திருக்க நியாயம் இல்லையே. பசி என்பது பட்டு உணர்ந்தால் மட்டுமே தெரியும். சாதாரணமாக விரதம் இருக்கும்போது விரதம் முடிய உணவு கிடைக்கும் என்பது எங்களுக்கு முன்கூட்டியே தெரியும். ஆனால் பட்டினி கிடக்கும்போது அடுத்த உணவு எப்போ என்பது ஆண்டவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்குத்தான் புரியும். ஆனால் பாவம், இங்குள்ள தெய்வங்க ளுக்குக் கூட பூசை, புனருத்தானம், நெய்வேத்தியம், படையல் என்று எதுவுமே இப்போது கிடையாது.

"புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது" என்று பிள்ளை களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். ஆனால் நாங்கள் புல்லை மட்டுமல்ல, இலை குழைகளைக் கூட புசிக்க முயற்சித்தது எனக்குத்தான் தெரியும்" என்று கூறி விட்டு வாத்தியார் குலுங்கக் குலுங்க அழுதார்.

திடீரென்று மேலும் உணர்ச்சிவசப்பட்டவராக, "என் கண் முன்னே எத்தனையோ குண்டுகள் வெடித்துச் சிதறின. குண்டுகள் மட்டும் சிதறவில்லை. கைகள், கால்கள், உடல்கள்... ஐயோ அந்தக் கொடுமையை என்னென்று சொல்வேன். இரத்தம் பீறிட்டுப் பாயும் காயங்களுக்கு மருந்தோ போதிய பராமரிப்போ உடன் கிடைப்பது அரிதாக விருந்தது. காய்ந்து வறண்டு போன மண் மட்டுமே அப்போது காயங்களுக்கு முதலுதவி. அப்பிய மண்ணுக் கூடாக இரத்தத்தை மட்டுப்படுத்த முடியவில்லை. அதுவும் வயதுபோனவர்களைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. தங்கள் சட்டையைக் கிழித்து மற்றவர்களின் காயத்துக்குக் கட்டியவர்களை அன்று பார்த்து நெகிழ்ந்தேன். குறிப்பாக தெய்வங்களையும் மனதால் அன்று வணங்கினேன்."

"தம்பி... அந்த நாள் என் வாழ்விலே... வந்திருக்கக்கூடாது. முறிகண்டிப் பிள்ளையாரும் வத்தாப்பளை கண்ணகி அம்மனும்கூட எங்களைப் பாதுகாக்க வரவில்லை. வந்த தெல்லாம் குண்டுகளும், எறிகணைகளும்தான். அவை தந்ததெல்லாம் காயங்களும், அங்க இழப்புகளும், உயிர் வதைகளும் மனதிலே மாறாத வடுக்களுமே.

அன்றைய தினம் விடாது குண்டுகள் வீசப்பட்டுக் கொண்டிருந்தன. தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலையில் எங்கு பார்த்தாலும் புகைமண்டலம். பதுங்கு குழிகளை விட்டு வர முடியாத நிலைமை. கையில் உணவுப் பொருட்களும் இல்லை. இரண்டு போத்தல் நீர் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிடம் இருந்தது. அதுவும் பேரனுக்காக நான் கொண்டு திரிந்தது.

வெளிநாட்டு உதவி எப்படியாவது கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை எல்லோரது மனதிலும் ஆழமாக பதிந்திருந்த தோடு, எமது போராளிகளின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை எங்கள் எல்லோருக்கும் இருந்தது.

மதியப் பகலின்போது சற்று அமைதி நிலவவே அனைவரும் பதுங்கு குழியை விட்டு வெளியே வந்து சாப்பிடுவதற்கு ஏதாவது கிடைக்குமா என்று திரிந்து கொண்டிருந்தார்கள். நானும் சற்று வெளியே வந்து அங்கும் இங்கும் பார்த்தேன்.

திடீரென்று போராளிகள் வேகமாக ஒருபுறமாக ஓடி வந்து கொண்டிருந்தார்கள். தலைக்கு மேலே மூன்று விமானங்கள் சீறிக்கொண்டு போயின. சமாதானப் புறாக்கள் வட்டமிடும், வாழ்வு தரும் என்று காத்திருந்த எங்களுக்கு வானில் வட்ட மிட்டு வந்தது விமானம் குண்டுபோட்டு! பதுங்கு குழிக்குள் ஓடுங்கள் ஓடுங்கள் என்று சத்தம் போட்டுக் கொண்டே இரண்டு போராளிகள் ஓடிச்சென்றனர். நான் எனது குடும்பம் இருந்த பதுங்கு குழியை நோக்கி ஓடினேன்.

அந்த நேரம் என்னைக் காணவில்லை என்று எனது பேரன் தமிழரசன் எப்படியோ குழியை விட்டு வெளியே வந்து "தாத்தா தாத்தா" என்றவாறே என்னை நோக்கி ஓடிவந்தான். "தமிழ், தமிழ் அங்கை இரு அங்கை இரு... நான் இந்தா வந்திட்டேன்" என்றவாறு நான் அவனை நோக்கி ஓடினேன். கண்ணிமைக்கும் நேரத்தில் மேலே பறந்து வந்த விமானம் ஒன்று கீழாகப் பறந்து சில குண்டுகளை உமிழ்ந்து விட்டுப் போனது. ஓடிவந்து தமிழரசனைத் தூக்கி அணைத்துக் கொண்டு அவனிருந்து ஓடிவந்த புதைகுழியை நோக்கினேன். தம்பி, அந்தக் குண்டு வீச்சில் என் குடும்பம் இருந்த பதுங்கு குழி அப்படியே மண்ணால் மூடப்பட்டுக் கிடந்தது. என் மனைவியின் உடல் குழிக்குள் பாதியும் வெளியில் பாதியு மாகக் கிடந்தது. என் கண்முன்னே அந்தப் பதுங்கு குழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய புதைகுழி ஆச்சுது. ஐயோ! எனது மகள் மருமகன் இருவரும் மண்ணோடு மண்ணாகிப் போனார்கள். எனது தலை கிறுகிறுக்க தள்ளாடியவாறு தரையில் சாய்ந்தேன்.

மறுபடியும் கண்ணை விழித்தபோது யாரோ நீர் தெளித்து என்னை எழுப்பியதைத் தெரிந்துகொண்டேன். என்னை எழுப்பி யாரோ ஒரு நல்லவர் கைத்தாங்கலாகத் தாங்கிக் கொண்டார். சுற்றும்முற்றும் பார்த்து விழித்தேன். திடீரென்று என் பேரன் ஞாபகத்திற்கு வந்தது. "என் பேரன்... பேரன்...தமிழ். தமிழ். தமிழரசன்..." என்று மெதுவாகச் சத்தம் இட்டேன்.

"ஐயா, நீங்கள் இறந்துவிட்டீர்கள் என்று நினைத்து உங்கள் பேரனை யாரோ எடுத்துச் சென்றுவிட்டார்கள். உங்கள் அருகால் ஓடிக்கொண்டிருந்தபோது நீங்கள் முனகிக் கொண்டு கிடப்பதைப் பார்த்து நான்தான் உங்களை தண்ணீர் தெளித்து எழுப்பினேன். வாங்க இப்படியே நடந்து அந்தப் பக்கம் போயிடலாம்." என்று கூறிக்கொண்டே ஆதரவாக அணைத்துக்கொண்டு புறப்பட்டார்.

"என் மனைவி, மகள் மருமகன்" என்று பதைபதைத்தேன். அவர்கள் அந்தக் குழிக்குள் புதைந்தது பின்புதான் நினைவிற்கு வந்தது. தேம்பி அழுதேன் துடித்தேன்... "ஐயோ... ஐயோ..." என்று தலையில் அடித்து குழறினேன். நான் மட்டுமல்ல... எத்தனையோ உறவுகள்... வாய்விட்டுக் கதறினார்கள்... எங்கு பார்த்தாலும் நிர்க்கதியற்று செய்வதறியாது ஏங்கிக் கலங்கித் துடித்து பதைபதைத்து சின்னாபின்னமாக்கப்பட்டு அங்கு மிங்குமாக ஓடித்திரிந்தார்கள். ஆங்காங்கே விழுந்த குண்டு களும் துப்பாக்கிச் சன்னங்களும் கோரத்தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தன.

"ஐயா அந்தக் குழிக்குள் இருந்தவர்கள் யாருமே தப்பவில்லை. வாருங்கள் போயிடலாம். இங்கே நிற்பது மிகவும் ஆபத்து.. வாங்க" என்று கூறியவர் என் பதிலுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திராமல் என்னை இழுத்துக்கொண்டு போனார். இழுத்துக்கொண்டு போனார் என்று கூறுவதைவிட ஓடினார் என்றுதான் கூற வேண்டும். ஓடும் வழியில் நான் கண்ட காட்சிகள்... ஐயோ... கையின்றி, காலின்றி, தலையின்றி, உயிரின்றி, தெய்வமே! இதைப் பார்ப்பதற்காக என்னை உயிருடன் வைத்திருந்தாய்? அப்போது ஆண்டவனைக் கூட நிந்தித்துக் கொண்டேன்.

"தம்பி, பள்ளிக்கூடத்தில் பாரத, இராமாயண யுத்தக் காட்சிகளை பிள்ளைகளுக்கு மிகவும் தத்ரூபமாக சொல்லிக் கொடுப்பதில் எனக்கு நிகர் நானேதான் என்று பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். வியாசரும், கம்பரும் எழுத்தில் வடித்ததற்கு நான் கற்பனையில் உருவகம் கொடுத்தவன். போரின் வலியை அன்று நான் உணர்ந்துகொள்ளவில்லை. காரணம் தலைவிதி, கர்மவினை என்று எத்தனையோ காரணங் களை எடுத்துக்காட்டி போரில் உயிரிழந்தவர்களுக்கும் அவர் களின் இழப்புகளுக்கும் வலிகளுக்கும் சமூகக் கட்டுப்பாடு களின் அடிப்படையில் அர்த்தம் கற்பித்திருந்தார்கள்.

தம்பி! எனது வாழ்க்கை எதுக்கும் உதவாததாக, எந்த ஒரு அர்த்தமும் இல்லாததாக போய்விட்டதே. எங்களுடைய காலம் எப்படியோ போகட்டும் இனி வருங்காலத்துப் பிள்ளைகளின் வாழ்க்கை எப்படி அமையப்போகுதோ? அவர் களும் எங்களைப் போல ஓடி ஓடி அர்த்தமில்லாத ஒரு வாழ்க்கையைத்தான் வகுத்துக்கொள்ளப் போகிறார்களோ? தெரியவில்லை!

ஆனால் ஒன்று தம்பி. எங்கடை பிள்ளைகள் நன்றாய் படிக்க வேண்டும். பல துறைகளிலும் ஒப்புயர்வற்றவர்களாகத் திகழ வேண்டும். உலக அரங்கில் இவர்களா தமிழர்கள்? இப்படிப் பட்டவர்களா தமிழர்கள்? என்று அகில உலகமும் ஆச்சரியப் படும் வண்ணம் எங்கள் தமிழ் பிள்ளைகள் ஒரு உன்னதமான, உயரிய நிலையை அடைய வேண்டும். தமிழர்கள் அடிமைகள், கூலிகள், ஏதிலிகள், உரிமைகளற்றவர்கள், நாடற்றவர்கள் என்ற நிலை மாற வேண்டும். அது மாற்றப்பட வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது உங்களைப் போன்ற இளைஞர்களால் முடியும் தம்பி! என்றுமே இல்லாதவாறு பெரும் சரித்திரத்தை இப்போது தமிழர்கள் இந்த மண்ணில் படைத்திருக்கிறார்கள். எங்களது வீர வரலாறு, காலத்தால் அழிக்க முடியாதது. நம்மவர்கள் இந்த நாட்டு இராணுவத்தை மட்டுமல்ல அடுத்த நாட்டு இராணுவத்தையும் ஓட ஓட விரட்டியடித்தவர்கள். நீதி நியாயத்தின் கண்களைக் கட்டிவைத்துவிட்டு அகில உலகத்தின் துரோகத்தனமான, போக்கிலித்தனமான செயற் பாட்டுக்கு இன்று இரையாகியிருக்கிறது எமது தமிழினம். எவர் என்ன செய்தாலும் தமிழ்மொழியையோ, தமிழ் இனத்தையோ யாராலும் அழித்துவிட முடியாது. தமிழர்கள் ஆற்றலிலும் திறமையிலும் எவருக்கும் சளைத்தவர்களல்ல. எங்கள் குறிக்கோள்களை ஒருமுகமாக உருவாக்கி தமிழ் இனத்தை ஒன்றுசேர்த்தால் நிச்சயமாக வெற்றிக்கனியை நீங்கள் பறிக்க முடியும். ஆங்காங்கே பரந்து பிளவு பட்டிருக்கும் எங்கள் தமிழினத்தை ஒன்றாக இணையுங்கள். ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்துங்கள். எமது எதிர்காலம் இருண்டுதான் தெரிகிறது. நீதி என்ற ஒளியை கையிலேந்தி நேர்மை என்ற பாதையில் நிமிர்ந்து அடி யெடுத்துச் செல்லுங்கள். உங்களைப்போல எத்தனையோ இளம்தலைமுறையினர் மிகுந்த அறிவோடும், ஆற்றலோடும், உலகெங்கும் தமிழ் இனத்தின் விடியலுக்கு வழிகோல விழி பார்த்துக் காத்திருக்கிறார்கள். தர்மத்தின் வழிநின்று தமிழுக்கும் தமிழருக்கும், தமிழ் மண்ணுக்கும் உரித்தான உரிமைகளை உலகத்தின் உதவியோடு பெறுவதற்கு உழை யுங்கள்.

தம்பி, சிந்திக்கத் தெரிந்த உங்களைப் போன்ற இளைஞர் களால் நிச்சயமாக செயற்கரிய செயல்களை செய்ய முடியும். உண்டு, படுத்து, உறங்கி, எழுந்து ஒரு சாதாரண வாழ்க்கை யினை வாழ்ந்து முடிக்காமல் உங்கள் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தை ஏற்படுத்துங்கள். இது உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு கிடைத்திருக்கும் ஒரு ஒப்புயர்வற்ற பணி! சேவை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் இந்த முள்ளுக் கம்பிவேலிக்குள் இன்னும் எவ்வளவு நாட்கள் கிடந்து சீரழிய வேண்டுமோ தெரியவில்லை. தம்பி, நான் இனி வாழ்ந்து என்னத்தைச் சாதிக்கப் போகிறேன். ஆனால் என்னுடைய பேரன் தமிழ் எங்கிருக்கிறானோ? எப்படி இருக்கிறானோ? தம்பி உங்களிடம் நான் ஒரு உதவி கேட்கிறேன் என்னுடைய பேரனை எப்படியாவது தேடிக் கண்டுபிடிச்சு கொடுங்கள். என்னுடைய தமிழ் அனாதை யாகக் கூடாது எப்படியாவது தமிழுக்கு ஒரு வாழ்வு கொடுங்கள். நான் உங்களை என்றைக்கும் மறக்க மாட்டேன்" என்றவாறே என் கைகளைப் பற்றிக் குழந்தையைப் போல அழுதார். நேரமானதினாலும் அடிக்கடி அங்கே நோட்ட மிட்டவாறே குறுக்கும் மறுக்குமாக நடந்துகொண்டிருந்த இராணுவத்தின் கெடுபிடிகளின் காரணமாகவும் வாத்தியா ரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டேன். அடிக்கடி வந்து பார்க்கும்படி கேட்டுக்கொண்டார்.

மறுநாள் காலை வாத்தியாரை சந்திக்க வேண்டும் என்று அவசரமாக அவர் இருந்த முகாமின் வடக்கு திசை நோக்கி நடந்தேன். இன்னும் பல செய்திகளைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவலில் சற்று வேகமாக நடந்தேன்.

அவர் இருந்த கூடாரத்தை அண்மித்தபோது அங்கே ஒரு பெரிய கூட்டமே கூடியிருந்தது. கூட்டத்தின் நடுவே ஒரு ஓரமாக கந்தையா வாத்தியார் உயிர் பிரிந்த நிலையில் கண்மூடிப் படுத்திருந்தார். மிகுந்த அதிர்ச்சியுடன் அவர் சாந்தமான முகத்தைப் பார்த்தேன். ஒரு பெரும் சுமையினை இறக்கிவைத்த அமைதி அவர் முகத்தில் தெரிந்தது. மார்பை நிமிர்த்தி, கரங்களை விரித்து காலனை எதிர் கொண்டார் போலும்.

என்னை அறியாமல் என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. கந்தையா மாஸ்டர் நேற்றைய தினம் என்னிடம் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் மீண்டும் என் காதில் ஒலித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒன்று தம்பி எங்கடை பிள்ளைகள் நன்றாய் படிக்க வேண்டும். பல துறைகளிலும் ஒப்புயர்வற்றவர்களாகத் திகழ வேண்டும். இவர்களா தமிழர்கள்? இப்படிப்பட்டவர்களா தமிழர்கள்? என்று அகில உலகமும் ஆச்சரியப்படும் வண்ணம் எங்கள் தமிழர்கள் ஒரு உன்னத நிலையை அடைய வேண்டும். தமிழர்கள் அடிமைகள், கூலிகள், ஏதிலிகள், உரிமைகளற்றவர்கள், நாடற்றவர்கள் என்ற நிலை மாற வேண்டும், மாற்றப்பட வேண்டும். எமது எதிர்காலம் இருண்டுதான் தெரிகிறது. நீதி என்ற ஒளியை கையிலேந்தி நேர்மை என்ற பாதையில் நிமிர்ந்து அடியெடுத்துச் செல்லுங் கள். அறிவோடும், ஆற்றலோடும் உலகெங்கும் இன்றைய இளைஞர்கள் தமிழ் இனத்தின் விடியலுக்கு வழிகோல, விழி பார்த்துக் காத்திருக்கிறார்கள். தர்மத்தின் வழிநின்று தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ் மண்ணுக்கும் உரித்தான உரிமைகளை உலகத்தின் உதவியோடு பெறுவதற்கு உழை யுங்கள். என்னுடைய தமிழ் அனாதையாகக் கூடாது எப்படி யாவது தமிழுக்கு ஒரு வாழ்வு கொடுங்கள்."

அந்த வார்த்தைகள் என் இதயத்தில் ஒரு தாக்கத்தை ஏற் படுத்தின. அந்த புனிதமான ஆத்மா, கந்தையா மாஸ்டராக உயிரோடு இருந்தபோது என் மனதில் ஆழமாக ஊடறுத்தி புரியவைக்க முடியாததை ஒரு பிணமாக மாறிய நிலையில் புரியவைத்தது. உணர வைத்தது. உறைய வைத்தது.

அரசமரத்துக்குக் கீழேதான் ஞானம் பிறக்க வேண்டும் என்றில்லை! முட்கம்பி வேலிக்குள்ளும் ஞானம் பிறக்கலாம்!

ஒரு தீர்க்கமான முடிவோடு முட்கம்பி வேலியைவிட்டு வெளியே வந்தேன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ**ணுவிலர் இணையிலா சிகாகோ பாஸ்கர் இரு அரும் நூல்கள் படைத்து வெளியிடும் செய்திகேட்டுப் பரவசமடைகி றேன். அமெரிக்காவில் நடைபெறும் கவியரங்குகளில் ஈழத்தின் அவலங்களை பொங்கி எழுந்து கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும் ஆற்றல் பெற்றவர். அருந்தமிழ் ஆர்வலர், நகைச்சுவை யுடன் பேச்சு, பட்டிமன்றம் மற்றும் எழுத்துகளை எடுத்தாளும் வித்தகர். சிகாகோ பகுதியில் நாற்பது ஆண்டுகளாகத் தமிழுக்கும் தமிழர்களுக்கும் தொண்டாற்றிவரும் அருமை நண்பருக்கு என் மனங்கனிந்த வாழ்த்துகள். மேலும் தொடர்க அன்னாரின் சேவை.

**பிரான்சிஸ் ரோச்**
**சிகாகோ.**

**எ**ன்னுடைய நண்பரும் கவிஞரும், சமூகசேவையாளரும், ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க அயராது உழைக்கும் இவையூர் பாஸ்கரின் "சீனிப்புளியடி" எனும் சிறுகதைத் தொகுப்பு வெளிவருவது அறிந்து மிக மகிழ்ச்சியடைகின்றேன். இவர் தமிழ் மீது கொண்ட பற்றால் ஈழத்தில் இருந்து கண்டங்கள் கடந்து வாழ்ந்தாலும் தனது கவித்திறமையையும் ஆற்றலையும் என்றும் கைவிடாமல் தமிழுக்கு நற்சேவையாற்றி வருபவர். அமெரிக்காவில் நடைபெறும் கவிதை, பட்டிமன்றங்களில் மற்றும் செயற்பாடுகளில் ஈழத் தமிழனின் பெருமையையும் நிலைமையையும் பறை சாற்றி வருபவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக வெளிப்படையான இயல்பும் எப்போதும் உதவும் மனமும், உறவையும் மற்றவரையும் மதிக்கும் குணமும் நிறைந்த ஒரு மனிதர்! இவர் இலக்கிய உலகில் மென்மேலும் நூல்கள் கவிதைகள் சிறுகதை தொகுப்புகள் என் தொடர்ந்து எழுதி தமிழுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்து கிறேன்.

**கவிதாயினி**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செ**ம்மண் திருவூராம் இணுவையம் பதியில் செல்லத்துரை என்னும் பெருமகன் பெற்ற சண்முகபாஸ்கரன் சாதித்தவை ஏராளம். இயற்கை யாய் இவரிடம் இருந்த இயற்றமிழ் ஆற்றலை யான் கண்டு வியந்தேன். எழுத்தால், பேச்சால், நாடகத்தால் இவர் தந்த மகிழ்ச்சிகள் மறக்க முடியுமா? ஒன்றாய்த் திரிந்த நாட்கள் ஓராயிரம் கற்பனைகளாய் வந்து கொண்டே இருக்கிறன்றது. சிரித்துச் சிரித்து எம் இதயச் சிறையில் குடிபுகுந்து அந்த இளைஞன் எழுபது கண்டும் ஏற்றமுடன் சிரிக்க வைக்கின்றார். சிந்திக்க வைக்கின்றார். அவரது ஆற்றலை அளக்க முடியவில்லை. அமெரிக்க நாட்டில் தமிழ் அரங்கமெல்லாம் அவர் ஏறி முழங்கு வார். அமெரிக்காவில் பாஸ்கரன் அண்ணையை அறியாத தமிழர் இல்லை எனலாம். தமிழின் மீது அவர் கொண்ட காதல் தமிழ் அன்னை இருப்பிடம் வரை செல்லவைத்தது. உண்டு மகிழ்ந்து, உறவுகளை புதுப்பிக்கும் உன்னத மனப்பாங்கு இவரோடு கூடப் பிறந்தது. பாசவலை வீசும் பாஸ்கரன் அண்ணையின் நேசத்திற்கு ஆட்படாதவர் யார்? சிரிக்க மறந்தவர்களை சிரிக்கச் செய்யும் இவர் உரையாடல் அமிர்தமென்பேன். இவர் படைக்கும் நூல்கள் அச்சேறுவது கண்டு ஆனந்தம் கொள்கின்றேன். கலகலப்பு - குயில் என்று வாலிபத்தில் இவர்கள் வெளியிட்ட மலர்களின் நினைவு களை மனதில் மீட்கிறேன். இவரது சிறு கதைகள் அடங்கிய நூலினைப் பெறுவது எம்மண் செய்த பாக்கியமே.

கனடா திருவூர் உறவுகள் சார்பில் இணுவிலான் யான் இதய பூர்வ மாக தரும் வாழ்த்தினை ஏற்பீராக.

**க. அருட்சோதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நூலகம்...எம் தமிழரின் நூலகம்...
ஒரு நூலை பதித்தமைக்கு வாழ்த்துகள்...

எம்மினம் என்றும் ஓங்க நிற்கவேண்டி,
எம்மொழி உலகெங்கும் ஒலிக்கவேண்டி,
காலை மாலை இரவேன்று...
களைப்புகள் காட்டாது...
இனமும் மொழியுமே - எம்
இதயமும் இரத்தமுமென்று...
எம்மவர்க்காகவே வாழும்
பாஸ்கரனுக்கு வாழ்த்துகள்!

இணுவிலின் மண் பிறந்து - யாழ்
இந்துவின் ஓர் மகனாகி,
ஈழத்தின் பிறப்பு வேண்டி
இனிய தமிழ் வாழவென்று
இரவுகள் பல மறந்து
இனமது உயர வென்று
எழுது கோல் கையிலேந்தி
இந்த நூல் எழுதித் தந்த
அண்ணனுக்கு எமது வாழ்த்துகள்

பத்திரிகை ஆசிரியர் பாஸ்கரெனு
பரவும் தமிழ் முழங்க வானொலியென
பதிவுகள் பல பரப்பும் முக நூலென
பாஸ்கரன் இல்லா சமுக ஊடகமுமில்லை - மாற்றார்
பதிவுகளில் அவர் புகழ் வராமலுமில்லை
பார் பரவிட வரும் நூலுக்கு வாழ்த்துகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு விட்டு நாடுவந்து தமிழ் மறந்த மனிதரிடையே,
நம் மொழி உலகின் முதன் மொழி தமிழில் கவிதைகள்
நாட்டை இழந்து, சொந்தம் இழந்து நாய் என அலைந்த
நம் தமிழருக்கு தேடியே.... வலிந்து தேடியே உதவிடும்
நல்ல உள்ளம் ஒன்றே உள்ள உறவின் நம் உறவின்
நூல் வெளியீட்டுக்கு எங்கள் வாழ்த்துகள்

வாழும் சமுகம் நீடூழி வாழ வேண்டியும்,
வீழ்ந்த தமிழன் எழுந்து வாழ்ந்து காட்டவும்
இழந்த உறவுகள் எம் குழந்தைகளாகப் பிறக்கவும்
இதயத்தில் இருந்து விழும் இரத்தத்தில் எழுதிய நூல்
உலகெல்லாம் சென்றிடட்டும்... ஊரேல்லாம் பேசிடட்டும்
உங்கள் பணிக்கு சிரம் தாங்கிய வணக்கதுடன்
எங்கள் அன்பான வாழ்த்துகள் அண்ணா.


**சுகந்தினி பார்த்திபன்**

**அ**ன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய இணுவில் பாஸ்கர் அவர்கள் ஒரு சிறுகதைத் தொகுதியினை வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சி யளிக்கிறது. பல்வேறு தமிழ் சேவைகளை புகுந்த நாட்டிலும் பிறந்த நாட்டிலும் செய்துவரும் இவர்க்கு எனது இதயபூர்வமான வாழ்த்துகள். பாஸ்கரின் தமிழ் அறிவும் அதனை பல வழிகளிலும் பயன்படுத்தும் ஆற்றலும் தமிழ்மீது கொண்ட அன்பும் போற்றுதற் குரியது. நண்பர் பாஸ்கரின் தமிழ் பணி மேலும் மேலும் தொடர்ந்து வளர அழகன் முருகன் அருள்புரிவாராக.

**காங்கேசு ஜெகநாதன்**
**கனடா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லாக் கதைகளிலும் போரின் சாட்சியங்களை ஆங்காங்கே நிறுத்தி, அதனூடாக அவலங்களைப் பேசுகிறார். இப்படியே சீனிப் புளியடி என்ற தலைப்பில் ஊரின் சாகாத் துயரை, இருண்ட யுகத்தின் நிஜங்களின் பதிவுகளை, ஓலங்களின் வரிகளை, வெடித்த சுவர்களின் துண்டங்களான ஓவியங்களின் கதைகளாய் சிகாகோ பாஸ்கரின் கதைநூல் உருவாகியிருக்கிறது. சீனிப் புளியடி நிச்சயம் உங்களையும் ஈர்த்துச் செல்லும்...

– ஈழவாணி

978-624-5018-08-8
9 786245 01808 8
பூவரசி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org